# மக்களுடன் பேசுவோம்



## இலங்கையில் மக்களின் குரல்களினூடாகக் கொவிட் - 19

LAW & SOCIETY TRUST

# ஜனநாயகக் கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடக்கும் தன்மைமிக்க பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின் போதும் சமூக நெருக்கடிகளின் போதும் உள்ளடக்கும் தன்மைமிக்க குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்கல்

இலங்கை முகங்கொடுக்கும் பெருந்தொற்றின் போதும் சமூக பொருளாதார நெருக்கடிகளின் போதும் உள்ளடக்கும் தன்மைமிக்க குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்குவதும் ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியினையும் அரசாங்கத்தின் வகைப்பொறுப்பினையும் வலுப்படுத்துவதுமே இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். நெருக்கடிக்கு அரசாங்கம் வழங்கும் பதிற்செயற்பாடுகள் அரசியலமைப்பியல் கோட்பாடுகளுடன் ஒத்திசைவானவையாக ஆக்கப்பட்டு, விதிவிலக்குடன் அரசாங்கம் கட்டுப்படுத்தப்படுவதையும் வேண்டுமென்றே தவறான தகவல்களைப் பரப்புவதும் வெறுப்பினைப் பரப்புவதும் கட்டுப்படுத்தப்படுவதையும் மாற்றத்தினை ஏற்படுத்துபவர்களதும் செல்வாக்குச் செலுத்துபவர்களதும் சாதகமான ஈடுபாட்டின் மூலம் சமூகக் கூட்டொருமை வலுப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதை ஈடுபாடுமிக்க பிரசைகள் என்ற ரீதியில் நாம் எதிர்பார்க்கின்றோம்.

இக்குறிக்கோள்களை அடைவதற்குக் கருத்திட்டம் ஒரு முறைசாராக் ‘‘குடிமைக் கண்காணிப்பினை’’ (civic watch) நிறுவியுள்ளது. இது சுகாதார மற்றும் பொருளதாரச் சவால்களுக்கான அரசாங்கத்தின் துரித பதிற்செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்றது; கொள்கை விடயங்கள் பற்றிய பொதுமக்கள் கலந்துரையாடலை மேம்படுத்துகின்றது, அடிப்படை உரிமைகள் மீறல்களை ஆவணப்படுத்துகின்றது, ஜனநாயக விழுமியங்களிலும் அரசியலமைப்புக் கோட்பாடுகளிலும் அடிப்படை உரிமைகளிலும் தாக்கம் செலுத்தும் உருவாகிவரும் பிரச்சினைகள் பற்றிப் பிரசைகளுக்கு உரிய காலத்தில் உண்மைகளின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகின்றது. ஜனநாயகத்தினையும் சட்டத்தின் ஆட்சியினையும் வலுப்படுத்துவதற்குக் கருத்திட்டம் ஆதரித்துவாதாடல் பிரச்சாரங்களை நடத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் பெருந்தொற்றுக்குப் பின்னரான சூழமைவில் பிரசைகள் அவர்களின் தேவைகள், பதகளிப்புக்கள் மற்றும் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதை இயலுமாக்கும் தேவைகள் மதிப்பீட்டினையும் நடத்த எண்ணியுள்ளது.

இந்த அறிக்கையும் இதில் உள்ளடங்கியுள்ள படங்களும் - வேறுவிதமாகப் பெயர் குறிப்பிடப்பட்டாலேயன்றி – சகுனா எம் கமகே இக்கருத்திட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பாகும். இக்கருத்திட்டத்தில் பிரசைகளின் ஈடுபாட்டினை - தமது குரல்கள் செவிமடுக்கப்படவேண்டும் என விரும்புபவர்கள் - *சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை* (எல்எஸ்டி) மெச்சுகின்றது. இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் எல்எஸ்டியின் சபையினதோ அல்லது முகாமைத்துவத்தினதோ கருத்துக்களைக் கட்டாயம் பிரதிபலிக்கவில்லை.



*2020 இல் 1 வது முழுஅடைப்பின் பின்னர் தெஹிவளை கடற்கரையில் இருந்து துறைமுக நகரத்தின் காட்சி, புகைப்படம், சகுனா கமகே*

**அறிமுகம்**

2019 ஆம் ஆண்டின் முடிவில் இருந்து கொவிட் 19 பெருந்தொற்றின் பல்வேறு அலைகளுக்கும் உலகம் முகங்கொடுத்து வருகின்றது. பொதுச் சுகாதார நெருக்கடிகளுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்குத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டமையினையும் தாண்டி புதிய திரிபுகள் உருவாகி மேலும் சவால்கள் உருவாகியுள்ளன. இந்தப் புதிய இயங்கியல்களின் தாக்கங்கள் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் வித்தியாசமானதாக அமைந்துள்ளன. அதேபோல் அந்த நாடுகளின் சமூகத்தின் வெவ்வேறு அடுக்குகளில் உள்ள ஒவ்வொரு நபர்களுக்கும் வித்தியாசமானதாக அமைந்துள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாகக் கொவிட் வைரசின் பரவல் பாங்கும் அதனைத் தொடர்ந்து வைரசைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சமூக இடைவெளி, பயணக் கட்டுப்பாடு, ஊரடங்கு மற்றும் முழுமுடக்கம் போன்ற நடவடிக்கைகளும் மக்களின் வாழ்க்கைப் பாங்குகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அத்துடன், தொற்றுக்கள், இறப்புக்கள் போன்ற நேரடியான சுகாதாரத் தாக்கங்களும் வாழ்வாதாரங்கள், கல்வி, சுற்றாடல், ஆளுகை, மக்களின் உரிமைகள் மற்றும் நாளாந்த வாழ்வின் மீதான ஏனைய அத்தியாவசிய அம்சங்கள் ஆகியவற்றின் மீதான தக்கங்களும் நீண்டகால விளைவுகளைக் கொண்டுள்ளன.

**சூழமைவு**

சீனாவின் ஹூபே மாகாணத்தினைச் சேர்ந்த 44 வயதுடைய பெண் ஒருவருக்கு 2020 ஜனவரி 27 ஆம் திகதி கொவிட் தொற்று இலங்கையில் உறுதிசெய்யப்பட்டு அவர் தொற்று நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் இலங்கையின் முதலாவது தொற்று உறுதிசெய்யப்பட்டது. கொவிட் - 19 இனை உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு பெருந்தொற்றாகப் பிரகடனப்படுத்திய பின்னர் பெருந்தொற்றின் தாக்கத்தினைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இலங்கை அரசாங்கம் 2020 மார்ச் முடிவில் நாடளாவிய ஊரடங்கினை முதலில் அறிவித்தது.

இந்த ஊரடங்கு 52 நாட்கள் நீடித்தது. அதன் பின்னர், தொற்றுக்களில் ஏற்பட்ட குறைவினால் 2020 ஆகஸ்டில் பொதுத் தேர்தலை நடத்தும் நோக்கத்திற்காக அரசாங்கம் கட்டுப்பாடுகளில் அதிகமானவற்றினைத் தளர்த்தியது. இதன்போது அரசாங்கம் சுகாதார அதிகாரிகளின் முன்னெச்சரிக்கையினையும் உலகளாவிய பெருந்தொற்றின் பாங்குகளையும் புதிய அலைகளின் சாத்தியத்தினையும் கருத்தில் கொள்ளவில்லை.

ஒக்டோபர் முதலாம் வாரத்தில், மினுவங்கொடயிலும் திவுலப்பிடியவிலும் ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஊழியர்களின் கொத்தணியால் ஆரம்பித்த தொற்றின் இரண்டாம் அலையின் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சில கடுமையான முறைகளை மீள விதித்தது.



*2020 இல் முதலாம் முழுஅடைப்பு நிறைவடைந்த சில நாட்களின் பின்னர் காலிமுகத் திடல், சகுனா கமகே*

2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஏனைய பல நாடுகளைப் போன்று இலங்கையும் தடுப்பூசியேற்றும் முயற்சிகளில் கவனம் குவிக்க ஆரம்பித்தது. தடுப்பூசியேற்றலின் முதல் கட்டம் மந்த கதியிலானதாகவும் மோசமாக முகாமைத்துவம் செய்யப்பட்ட ஒன்றாகவும் காணப்பட்டது. ஆனால் இரண்டாவது கட்டத் தடுப்பூசியேற்றலும் பூஸ்டர் தடுப்பூசியேற்றலும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டின் முடிவின்போது உள்ளவாறாக, நாட்டின் 21 மில்லியன் சனத்தொகையில் 63 சதவிகிதமானவர்களுக்குப் பூரணமாகத் தடுப்பூசியேற்றப்பட்டிருந்தது. இதில் 18.4 சதவிகிதத்தினருக்கு பைசர் மூன்றாம் தடுப்பூசி போடப்பட்டது. இதன் போது உத்தியோகபூர்வத் தரவுகளின் படி நாளாந்தம் 20 பேர் மரணிக்கும் நிலை காணப்பட்டது.

இலங்கையில் கொவிட் 19 இரண்டாம் அலை ஆரம்பிக்க முன்னர், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய அண்டை நாடுகளில் நிலவிய கடுமையான இரண்டாம் அலையின் தாக்கத்துடன் தொடர்புபடுத்தி சுகாதார அதிகாரிகளினால் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. அதீத பிரச்சினை மிகுந்த இந்தச் சூழ்நிலையினூடு இலங்கை அதன் கொவிட் தடுப்புப் பொறிமுறைகளைத் தளர்த்தும் ஆர்வத்தினைக் கொண்டிருந்தது. நாட்டிற்குள் சுற்றுலாப் பயணிகளை பயோ பபிள்களினுள் அனுமதிப்பதற்காக இந்த ஆர்வம் காணப்பட்டது. மேலும் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சிவனொளிபாத மலை யாத்திரைக் காலம் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் ஆர்வம் காணப்பட்டது. இதன் விளைவாக, கொவிட் 19 தொற்றுக்களில் முன்னெப்பொழுதும் இல்லாத அதிகரிப்புக்கு நாடு முகங்கொடுக்க நேரிட்டதுடன் 2021 மே மாத நடுப்பகுதியில் இருந்து தொற்றுக்களில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான வாராந்த அதிகரிப்புக் காணப்பட்டது.



*2020 இல் 1 வது முழுஅடைப்பு நிறைவடைந்து சில நாட்களின் பின்னர் காலிமுகத்திடல் கடற்கரை, சகுனா கமகே*

துரிதமாக அதிகரித்த தொற்றாளர்களின் வீதத்தின் காரணமாக நிலைகுலைந்த சுகாதார முறைமையினை அரசாங்க அதிகாரிகளும் ஊடக அறிக்கைகளும் கள மட்ட அறிக்கைகளும் சுட்டிக்காட்டின. இந்தச் சூழ்நிலையினால் சுகாதாரத் துறைப் பணியாளர்களும் சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களும் அதிகரித்த அழுத்தத்தின் கீழ் பணியாற்றினர். போதிய நிதியிடல் இல்லாமையாலும் வினைத்திறனற்ற முகாமைத்துவத்தினாலும் வேறு பல பிரச்சினைகளும் இதன்போது உருவாகின.

2021 ஜூன் மாதத்தில் கொவிட் - 19 டெல்டா திரிபின் முதலாவது சமூகத் தொற்றினை இலங்கை உறுதிப்படுத்தியது. 2021 ஆகஸ்ட் முதல் செப்டெம்பர் வரையில் டெல்டா தொற்றின் உச்சத்தின் மத்தியில் நாட்டில் ஒவ்வொரு மணித்தியாலமும் சுமார் மூன்று நோயாளிகள் இறந்தனர். இதில் இளம் வளர்ந்தோரும் சிறுவர்களும் அடங்கியிருந்தனர். ஐந்து மாதங்கள் வரை நீடித்த பகுதியளவிலான முழுமுடக்கத்தின் மூலம் மூன்றாம் அலையினைக் கட்டுப்படுத்த அரசாங்கம்

முயற்சித்தது. முன்னரங்கில் பணியாற்றியவர்களுக்கு நாளாந்தம் நிகழ்ந்த தொற்றாளர்களின் மரணங்களுக்கு முகங்கொடுப்பதற்கும் வீட்டில் அன்புக்குரியவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ள செய்திகளைச் செவிமடுப்பதற்கும் நேரிட்டது. இலங்கையில் மரணம் எங்கும் வியாபித்துக் காணப்பட்டது. அதேவேளை, கொவிட் - 19 தொற்றால் இறப்பவர்களின் அடையாளம் பற்றிய விரிவான செய்திகளையும் அவர்கள் வாழ்ந்த வாழ்வினையும் ஊடகங்கள் முன்பு வெளியிட்டு வந்தன. ஆனால் டெல்டா தொற்றினால் மரணங்களின் எண்ணிக்கை எகிறத் தொடங்கியதும் இந்தத் தகவல்கள் மறைந்து போயின. ஏராளமானவர்கள் இறந்ததால் அவர்களின் மரணங்களுக்காக இரங்குவதற்கோ அல்லது அவர்களுக்குரிய அந்திம கௌரவத்தினை வழங்குவதற்கோ இயலாமல் போய்விட்டது. 2021 ஆம் ஆண்டின் முடிவில், சுகாதார மேம்பாட்டுப் பணிமனையின் தரவுகளின் படி மொத்தமாக 586,746 தொற்றுக்களும் 14,962 இறப்புக்களும் அறிக்கையிடப்பட்டன.



*கல்கிசையில் நடமாடும் தெருவோர உணவு வியாபாரி, சகுனா கமகே*

கொவிட் - 19 பெருந்தொற்று மருத்துவ அவசரநிலைக்கும் கணிசமான பொருளாதார நெருக்கடிக்கும் இட்டுச்சென்ற அதேவேளை, இலங்கையில் தொடர்ந்து காணப்பட்ட பொருளாதார நெருக்கடி பெருந்தொற்று ஏற்படுத்தியதை விடப் பரந்த மற்றும் நீண்ட மறைமுகமான தாக்கங்களைச் சமூகத்தின் குறிப்பிட்ட அடுக்குகளில் ஏற்படுத்தியது.

பல்வேறு பின்புலங்கள் சார்ந்து மக்களின் வாழ்க்கையில் பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை ஆழமாக ஆராய்வதற்காக இந்த தொலைதூர / தொலைபேசி நேர்காணல்கள் நடத்தப்பட்டன. அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு கொள்கை மாற்றங்களின் விளைவு மற்றும் மக்களுக்காக அவற்றினைத் துரிதமாக அமுல்படுத்தியமையின் செயற்திறன் ஆகியவற்றினை அவதானிப்பதுவும் மற்றொரு முக்கியமான நோக்கமாக அமைந்திருந்தது.

**காலச்சட்டகம் மற்றும் முறையியல்**



*தெஹிவளை கடற்கரையில் மீன் வியாபாரி*

இந்த நேர்காணல்கள் கொவிட் - 19 பெருந்தொற்றில் அதிகரிப்பு ஏற்பட்ட மூன்றாம் அலையின் பின்னரும் பயணத் தடைகள் மற்றும் முழுமுடக்கத்தின் தொடர்ச்சியின் போதும் 2021, மே முதல் ஒக்டோபர் வரையான மாதங்களில் நடத்தப்பட்டன. நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததாலும் நேரடியாக நேர்காணல்களை நடத்த முடியாதிருந்ததாலும் இந்த நேர்காணல்கள் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் நடத்தப்ப்டன.

நபரின் வயது, பால்நிலை, சமயம், மாவட்டம் அல்லது புவியியல் அமைவிடம், தொழில் மற்றும் வாழ்வாதாரக் கரிசணைகள் உள்ளிட்ட பல்வகைமைமிக்க பின்புலங்களே நேர்காணப்பட்டவர்களைத் தெரிவுசெய்வதற்கான தெரிவடிப்படையாக அமைந்திருந்தது. இடம்பெற்று வரும் சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுடன் நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ள மக்களில் மிகைக் கவனம் செலுத்தப்பட்டது. விவசாயிகள், இளைஞர்கள், ஆசிரியர்கள், விளிம்புநிலைக் குழுக்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்றவர்கள். நேர்காணல்களில் பெரும்பான்மையானவை பெருந்தொற்றுடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களை ஆராய்ந்தன.

இவை அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து இலங்கையர்களின் குரல்களையும் அவர்களின் வாழ்வு பெருந்தொற்றினால் வரையறுக்கப்பட்ட அளவிலும் தனிப்பட்ட அளவிலும் பாதிக்கப்பட்ட விதத்தினையும் வெளிப்படுத்தும் அனுபவங்களின் கலவையாக அமைந்திருந்தது.

# மக்களின் கதைகள்

**நேர்காணல் 01**

**கிழக்கு மாகாணத்தின் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும் 38 வயதான போர்த்துக்கேயப் பறங்கிய சமுதாயத்தினைச் சேர்ந்த ஆண் ஒருவருடன் நேர்காணல் நடத்தப்பட்டது. கடந்த காலங்களில் இலங்கை போர்த்துக்கேய பறங்கிய சமுதாயத்தில் சிறுபான்மையினர் உரிமைகள் செயற்பாட்டியத்திலும் கலாசார ஒன்றுகூடல்களிலும் இவர் ஈடுபட்டுவந்தார்**




*போர்த்துக்கேய பறங்கிய சமுதாயத்தினைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலாசார நிகழ்த்துகை ஒன்றின் போது.*

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

எமது நடமாட்ட சுதந்திரத்தின் மீதான தாக்கமே எமக்கிருந்த மிகப் பெரிய சவாலாக இருந்தது. ஒரு வருடத்திற்கும் மேலாக எம்மால் எங்கும் செல்ல முடியவில்லை. நான் அரசாங்கத் துறையில் பணியாற்றுகின்றேன். எனது வீடு மட்டக்களப்பில் வாழைச்சேனையில் இருப்பதால் நான் வார நாட்களில் திருகோணமலையிலேயே தங்கியிருந்தேன். பெருந்தொற்றின் பின்னர் நான் வீட்டுக்கு நாளாந்தம் பயணம் செய்யவேண்டி நேரிட்டது. இது எனது அபாயநேர்வினையும் அசௌகரியத்தினையும் அதிகரித்தது.

**வாழ்வாதாரம்**

போர்த்துக்கேய பறங்கிய சமுதாய உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் தச்சர்களாக அல்லது மெகானிக்குகளாக வேலை செய்கின்றனர். இவர்களின் வாழ்க்கை நாட்சம்பளத்திலேயே தங்கியுள்ளது. சிலர் சுற்றுலாத் துறையிலும் ஈடுபட்டுள்ளனர். மிகச் சொற்பமானவர்களே அரசாங்கத் துறையில் வேலை செய்கின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் தங்களின் வருமான மூலத்தினையும் தொழில் பாதுகாப்பினையும் இழந்துள்ளனர். இவர்கள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

முழுமுடக்கத்தின் போது ஒரு சில கடைகளே பிரதான வீதியில் திறந்திருந்தன. பிரதான வீதியில் இராணுவமும் பொலிசாரும் நிலைகொண்டிருந்ததால் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவது எமக்குக் கஷ்டமாக இருந்தது. முழுமுடக்கத்தின் போது நாம் உணவினைக் களஞ்சியப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் நாட்கூலி வேலை செய்பவர்களிடம் போதிய பணம் இல்லாத காரணத்தினால் அவர்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

கடந்த வருடம் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கின. இந்த உதவிகள் மாவட்டச் செயலகத்தின் மூலம் வழங்கப்பட்டன. ஆனால் இந்த உதவிகள் நாம் வாழும் வாழைச்சேனைக்கு அரிதாகவே வந்தன. நாங்கள் பிரதேசத்தின் தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம். சொற்பமான குடும்பங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படுகின்றன. 5 குடும்பங்கள் தமிழ்ப் பிரதேசத்தில் வாழ்கின்றன மற்றும் ஏனைய 5 குடும்பங்கள் முஸ்லிம் பிரதேசத்தில் வாழ்கின்றன.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்று அந்தச் சந்தர்ப்பத்தில் உதவி வழங்கியது. வீதி அருகில் வாழ்ந்தவர்கள் பலனடைந்தனர். ஆனால் பிரதான வீதியில் இருந்து தூரமாக உட்பிரதேசங்களில் வாழ்ந்தவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. எமது சமுதாயத்தில் விதவைகள் உள்ளனர். அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. சமுதாய உறுப்பினர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவினர் ஆனால் நாங்கள் ஏழைகளாக இருப்பதால் எம்மால் இதனைத் தொடர முடியாது.

**அரசாங்க உதவி**

ஏனைய சமுதாயங்களுடன் ஒப்பிடுகையில், எமது சமுதாயத்திற்குக் குறைந்த உதவியே கிடைத்தது. அரசாங்கத்தின் உதவிப் பொறிமுறை கிராமசேவையாளரினால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அவர் வாழைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள எமக்கு

எப்போதும் அவற்றினை அறிவிப்பதில்லை. பிரதேசத்தில் உள்ள வேறு சிலர் மூலமாகவே எமது சமுதாயம் உதவி பற்றி அறிந்துகொண்டது. சில சந்தர்ப்பங்களில் எமது சமுதாய உறுப்பினர்களில் சிலர் உதவி வழங்கப்படும் இடங்களுக்குச் சென்றபோது தாம் ஏற்கனவே மானியங்களை விநியோகித்துவிட்டதாகவும் காலக்கெடு முடிந்துவிட்டதாகவும் கிராமசேவையாளர் அவர்களுக்குக் கூறியுள்ளார். முழுமுடக்கத்தின் காரணமாகப் போர்த்துக்கேயப் பறங்கிய சமுதாயத்தினருக்கு வெளியே செல்ல முடியவில்லை என்பதுடன் அவர்களுக்கு தகவல்களும் கிடைக்கவில்லை.

எமக்கெனப் போர்த்துக்கேயப் பறங்கியர் சங்கம் ஒன்று உள்ளது. இந்தச் சங்கம் மட்டுமே சமுதாயத்திற்கான கூட்டு அமைப்பாகும். 2020 ஆம் ஆண்டு எமது நாட்டினைப் பெருந்தொற்றுத் தாக்கி 6 மாதங்களின் பின்னர் மிகவும் சொற்பமானவர்களுக்கு மட்டுமே உலர் உணவுப் பொதி ஒன்று விநியோகிக்கப்பட்டது. மட்டக்களப்பில் விதவைகளுக்கு 1000 ரூபா பொதி கிடைத்தது. அரசியல்வாதிகள் பிரதேசத்தில் உள்ள அவர்களின் ஆதரவாளர்களுக்கு உலர் உணவுகளை வழங்கியது எனக்குத் தெரியும்.

எமது சமுதாயத்தில் இருந்து நகர சபையில் கூட அல்லது பிரதேச சபையில் கூட அரசியல் பிரதிநிதித்துவம் இல்லை. நாம் மிகவும் சொற்பமானவர்கள் என்பதால் எம்மால் யாரையும் தேர்வுசெய்ய முடியாது.

### தொற்று விகிதாசாரமும் இறப்புக்களும்

முன்னதாக, சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கூடத் தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் அண்மையில் எமது சமுதாய உறுப்பினர்களில் சிலருக்குத் தொற்று ஏற்பட்டது. திருகோணமலையில் ஏப்ரல் மாத 3 ஆம் அலையின் போது எமது சமுதாய உறுப்பினர்கள் மூவர் இறந்தனர். முழுமுடக்கம் தளர்த்தப்பட்ட பின்னர் பல உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தமையினால் கடற்கரை நிரம்பி வழிந்தது. அதன் பின்னர் கொரொனா வைரசால் திருகோணமலை பாதிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கும் மேல் அங்கே முழுமுடக்கம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### சுகாதாரத் துறை உதவி

மூன்று வாரங்களுக்கு முன்னர் எனது சகோதரிக்குத் தொற்று ஏற்பட்டது. அவர்கள் (சுகாதார அதிகாரிகள்) அண்டிஜென் பரிசோதனையினை மட்டுமே செய்தனர். எவ்வாறாயினும் வீட்டுக்கு வெளியே அவர்கள் எச்சரிக்கை அறிவித்தலை ஒட்டவில்லை. அவர்கள் ஏனைய குடும்ப உறுப்பினர்களைப் பரிசோதிக்கவுமில்லை. தொற்றுத்தடைகாப்பின் கீழ் இருப்பவர்களுக்கு அரசாங்கம் உலர் உணவுப் பொதிகளை வழங்கிவந்தது. ஆனால் எமது விடயத்தில் அது வழங்கப்படவில்லை. இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருட்களை வழங்கி அயலவர்கள் எமக்கு உதவினர். ஆனால் எமது கட்டாயத் தொற்றுத்தடைகாப்பின் பின்னர் எமது செலவுகளுக்காக அவர்கள் செலவிட்டவற்றினை நாம் மீண்டும் செலுத்த நேரிட்டது.




*யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் சுகாதார அறிவுறுத்தல்களடங்கிய அறிவித்தல்கள்*

### தடுப்பூசியேற்றல்

60 வயதினையுடையவர்களுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் அதிகாரிகள் தடுப்பூசியேற்ற ஆரம்பித்தனர். தடுப்பூசியேற்றலைச் சுகாதார அதிகாரிகளே மேற்கொண்டனர், இராணுவம் அல்ல. எமது பிரதேசத்தில் தடுப்பூசியேற்றத் தொடங்கியபோது அவர்கள் எமக்கு அறிவிக்கவில்லை. ஏனையவர்கள் தடுப்பூசி பெறச் சென்றபோதே நாம் அது பற்றி அறிந்துகொண்டோம். சில பிரதேசங்களில் மக்களுக்கு அறிவிப்பதற்கு ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்பட்டன. முதலாவது தடுப்பூசி பெறுவதற்காக எனது பெற்றோர்கள் சென்றபோது அவர்களிடம் இரண்டு நாட்கள் கழித்து வருமாறு கூறப்பட்டது. அவர்கள் அவ்வாறே சென்றனர். அவர்கள் இரண்டு மணித்தியாலங்கள் வரிசையில் காத்திருந்தனர். பின்பு வந்தவர்களுக்கு முன்பு வந்தவர்களுக்கு முன்னரே தடுப்பூசி ஏற்றப்பட்டது. இந்தப் பாகுபாடு எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது.

30 வயதுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசியேற்றும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்ட

பின்னர் நான் தடுப்பூசியேற்றச் சென்றேன். தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தடுப்பூசியேற்றப்பட்டது. நான் அங்கே காலை 9 மணியளவில் சென்றேன். அங்கே நான் மதியம் 2.30 மணி வரை காத்திருக்க நேரிட்டது. அவர்கள் எனக்கு ஒரு படிவத்தினையும் பிறகு ஓர் அட்டையினையும் தந்தார்கள். ஆனால் தடுப்பூசியினை ஏற்றவில்லை. பி.ப 3 மணியளவில் அவர்கள் வந்து தடுப்பூசி முடிந்துவிட்டது எனக் கூறினார்கள். பிள்ளையான் உள்ளிட்ட அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் இருந்தார்கள். அவர்கள் தங்களின் ஆதரவாளர்களுக்குத் தடுப்பூசியினை முதலில் ஏற்றுவதற்காக செயன்முறையில் செல்வாக்குச் செலுத்தினார்கள். அடுத்த நாள் நான் தடுப்பூசியேற்றுவதற்கு முஸ்லிம் பிரதேசத்துக்குச் சென்றேன். அது நன்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தடுப்பூசியேற்ற வெறும் அரை மணித்தியாலங்கள் மட்டுமே சென்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரண்டாவது தடுப்பூசியினையும் என்னால் ஏற்றிக்கொள்ள முடிந்தது. பிரதேச செயலகத்தினதும் கிராமசேவையாளரதும் தலைமையில் தடுப்பூசியேற்றலை நிர்வகிப்பதற்குப் பல உப பிரதேசங்களில் உரிய நடவடிக்கைமுறைகள் காணப்பட்டன. ஆனால் இங்கே ஏனைய பிரதேசங்களைப் போன்று அது வேலை செய்யவில்லை.

60 வயதுக்கு மேற்பட்டவர்களையும் முன்னரங்குப் பணியாளர்களையும் அவர்கள் முன்னுரிமைப்படுத்துவதாகக் குறிப்பிட்டாலும், அரசியல்வாதிகளின் ஆதரவினாலும் செல்வாக்கினாலும் வயது குறைந்த பலருக்கும் தடுப்பூசியேற்றப்பட்டது.

**கல்வி**

கல்வி பாதிக்கப்பட்டது. ஒன்லைன் கல்வி நகரப் பிரதேசங்களுக்கும் செல்வந்தக் குடும்பங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டது. நிதிக் கஷ்டமுடைய கிராமியக் குடும்பங்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தன. கல்வி அமைச்சு பாடசாலை முறைமைக்கும் மாணவர்களுக்கும் எதையும் செய்யவில்லை.

பாடசாலை மட்டத்தில், கல்விச் செயன்முறையினைத் தொடர்வதற்கு பல்வேறு முன்னெடுப்புக்கள் காணப்பட்டன. கிழக்குப் பல்கலைக்கழகம் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் இலவச தளத்தினை வழங்குவதற்காக Zoom உடன் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. பல்கலைக்கழகத்திற்கு இலவச இணைய வசதி வழங்கப்படுகின்றது. ஆனால் பாடசாலை மட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சொற்பமான வசதிகளும் தொழில்நுட்பம் பற்றிய வரையறுக்கப்பட்ட அறிவுமே காணப்படுகின்றன.



*பயணக் கட்டுப்பாடு முடிவடைந்த பின்னர் மாணவர்கள் மாலை நேரத் தனியார் வகுப்பில் கல்வி கற்கின்றனர்.*

தொலைபேசிகளுக்காகவும் தரவுக் கட்டணங்களைச் செலுத்துவதற்காகவும் அவர்கள் தங்களின் சொந்தப் பணத்தினைச் செலவழிக்க வேண்டியிருந்தது. சில ஆசிரியர்கள் கற்கைத் தொகுதிகளையும் பத்திரங்களையும் தயாரித்து அச்சிட்டனர். மேலும் அச்சிடுவதற்கான மற்றும் விநியோகிப்பதற்கான செலவினை அவர்களே எவ்வித உதவியும் இன்றி ஏற்றுக்கொண்டனர். போட்டோ கொப்பி எடுக்கும் இடங்களைத் தேடி ஆசிரியர்கள் கஷ்டப்பட்டனர். ஏனெனில் அவற்றுள் அதிகமானவை முழுமுடக்கத்தினால் மூடப்பட்டிருந்தன.

மாணவர்களுக்கான அனைத்துப் பாடங்களையும் பகிர்வதற்கான மும்மொழியிலான இணையத் தளமொன்றினை அரசாங்கம் முன்னெடுக்க முடியும் என நான் நினைக்கின்றேன். பாடசாலைப் பாடவிதானம் ஒன்றாக இருப்பதால் பாடங்களை நடத்துவது இலகுவாக இருக்கும், செலவும் குறைவாக இருக்கும் என்பதுடன் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இது ஒரு நிவாரணத்தினையும் வழங்கும். மேலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி, யுடியுப் ஆகியவற்றினை மாணவர்களுடன் உள்ளடக்கங்களைப் பகிர்வதற்கான தளங்களாகப் பயன்படுத்த முடியும். போர்த்துக்கலில் பெருந்தொற்றின் போது கல்வி முறைமை இந்த முறையால் நடத்தப்பட்டது என்பதை நான் அறிந்துகொண்டேன்.

**மனநல சுகாதாரம்**

முழுமுடக்கம் இல்லாதபோது கூட மக்களில் பலரும் வெளியில் செல்வதற்குப் பயப்பட்டனர்.

புறக்கிருத்தியைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடம் இருக்கவில்லை. இளைஞர்கள் அவர்களின் தொலைபேசிகளுக்கு அடிமையாகினர். மேலும் அவர்களில் சிலர் கேம்களுக்கு அடிமையாகினர். அவர்களின் தூங்கும் பாணியும் அவர்களின் சிந்தனைப் பாங்கும் கூட மாறிப்போனது. பெருந்தொற்றுடன் உருவான மனநல சுகாதார அம்சங்களைச் சுகாதாரத் துறையினால் கையாள முடியாது. உதவி வழங்கி வழிகாட்டல் வழங்கக்கூடிய மக்களும் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

**இராணுவமயமாக்கம்**

கடந்த ஒன்றரை வருடங்களில் தொற்றுத்தடைகாப்புச் சட்டத்தினை அமலாக்குவதற்காக இராணுவமும் பொலிசாரும் எமது வீதிகளில் நின்றனர். அவர்கள் வீதிகளில் ரோந்து சென்று மக்களின் வாழ்க்கைப் பாங்கினைப் பரிசோதித்தனர். வெளியில் சென்ற சிலரை அடித்தனர். இளைஞர்கள் குழுக்கள் பிரதான வீதிகளில் மோட்டார்சைக்கிளில் சுற்றித்திரிவதையும் அவர்களைக் கண்ட பொலிசாரும் இராணுவமும் அவர்களை அடித்து வீட்டுக்கு அனுப்பியதையும் நான் அவதானித்துள்ளேன். என்னுடைய கண்ணோட்டத்தில் நோக்கும்போது, அவர்களின் பொறுப்பற்ற நடத்தைக்காக அது நடக்கவேண்டும். அவர்கள் பெருந்தொற்றுடன் இணைந்துள்ள அபாயநேர்வினைப் பற்றிய கரிசணை இன்றி நடந்துகொண்டனர். உட்பிரதேசங்களில் மக்கள் முழுமுடக்கம் பற்றிய கரிசணை இன்றிச் சுற்றித் திரிகின்றனர். தொற்றுத்தடைகாப்புச் சட்டங்கள் பற்றிய கரிசணை இன்றி சுற்றித்திரிந்த சில முஸ்லிம்களைப் பகிரங்கமாக விசேட அதிரடிப்படையினர் மண்டியிடச் செய்த சம்பவம் ஒன்று ஏறாவூரில் நடந்துள்ளது. அந்தச் சம்பவத்தின் பின்னர் அதில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதுடன் சுற்றித்திரியும் மக்களுக்கு இராணுவமும் பொலிசாரும் எதையும் சொல்வதில்லை. முகக்கவசம் இன்றிப் போனால் கூட அவர்கள் எதையும் சொல்ல மாட்டார்கள். இப்போது கூட நாங்கள் முழுமுடக்கத்திலேயே இருக்கின்றோம். மக்கள் சுற்றித் திரிவதை என்னால் பார்க்க முடிகின்றது. அவர்களில் சிலர் வீதியோரமாக அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர். நாங்கள் அத்தியாவசியான விடயங்களுக்கு மாத்திரமே வெளியில் செல்கின்றோம்.

**பரிசீலிப்பும் மருத்துவ வசதிகளும்**

எனது உடன்பிறவாச் சகோதரர் ஒருவர் குருணாகலில் சிறைச்சாலை அதிகாரியாக இருக்கின்றார். சிறைச்சாலைக்குச் செல்வதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் அவர் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இதனால் அவர் சுகாதார மருத்துவ அதிகாரியின் அலுவலகத்திற்குச் சென்று தனது தேவைப்பாட்டினைக் கூறினார். அதனைக் குறிப்பிட்ட நேரத்தினுள் வழங்க முடியாதிருக்கும் என அந்த அதிகாரி கூறினார். பின்பு எம்மைத் தனியார் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அவர்கள் கூறினார்கள். அங்கே பிசிஆர் பரிசோதனைக்கு அவர்கள் 9000 ரூபா கட்டணம் அறவிட்டனர்.

ஒரு மாதத்திற்கு முன்னர் எனது தந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. அவருக்குக் கொவிட் - 19 தொற்று ஏற்பட்டிருக்குமோ என்ற பயத்தில் நான் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்று அண்டிஜென் பரிசோதனை செய்யுமாறு கேட்டேன். அவ்வாறாயின் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டும் எனக் கூறினார்கள். அவ்வாறு அனுமதிக்க விரும்பாவிடின் அவரைச் சுகாதார மருத்துவ அதிகாரியிடம் அழைத்துச்சென்று மருந்து எடுத்து வீடு செல்லவேண்டும் எனக் கூறினார்கள். வைத்தியசாலை நீண்ட காலமாகத் துப்பரவு செய்யப்படவில்லை. வாட்டுக்களும் கழிப்பறைகளும் மிகவும் அழுக்காக இருந்தன. நான் ஒரு கடிதத்தினை எழுதித் தந்தையை வீட்டுக்கு அழைத்து வந்தேன். ஏனெனில் வைத்தியசாலையின் சுகாதாரக் கேடு தொற்றினை இன்னும் மோசமாக்கலாம்.



*A9 வீதியில் கிளிநொச்சியில் வெட்டப்பட்ட கனமரங்கள் ஊர்திகளில் எடுத்துச்செல்லப்படுகின்றன.*

**சுற்றாடல் தாக்கம்**

மக்கள் சமையலுக்காக விறகுகளைச் சேகரிப்பதை வழமையாகக் கொண்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்டிடிஈ)

தோற்கடிக்கப்பட்ட பின்னர் யாருக்கும் விறகு சேகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இது சட்டவிரோதமானதாகக் கருதப்படுகின்றது. அதிகமான விறகுகள் கரிக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. மண் அகழ்வு மிக உக்கிரமாக எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றது. இது அரசியல்வாதிகளின் செல்வாக்குடன் ஒரு மாபியாவினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. அண்மையில் கூட அரசியல் செல்வாக்கினால் அரசாங்க அதிபர் அகற்றப்பட்டார். முன்னர் விடுதலைப் புலிகளால் காணிகள் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசத்தின் நிர்வாகத்தில் அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்டிருந்தார். காணிகள் மாடு வளர்ப்புக்காக வழங்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டிருந்தது. கருணா, பிள்ளையான், மற்றும் முதலமைச்சர் அனுராத யஹம்பத் ஆகியோரின் செல்வாக்கினால் சில சிங்களவர்கள் பயிர்ச்செய்கைக்காக அக்காணிகளை வாங்கியுள்ளனர். அரசாங்க அதிபர் அகற்றப்பட்டுள்ளார்.

**வீட்டு வன்முறையும் போதைப்பொருள் பாவனையும்**

போதைப்பொருள் பாவனை என்பது இங்கே சாதாரண மக்களின் வியாபாரமல்ல. இராணுவமும் பொலிசும் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. ஒரு தடவை அவர்கள் அயலிலுள்ள வீட்டில் இருந்து போதைப்பொருட்களைக் கைப்பற்றினார்கள். பின்பு அவர்கள் அவற்றை வங்கிக்கு எடுத்துச்சென்று தங்கம் மற்றும் நகைகளின் எடை கணிக்கும் நிறைகளைக் கொண்டு அவற்றின் எடையினைக் கணித்தார்கள். கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களில் அரைவாசியினை விற்பதற்காக அல்லது தமது பாவனைக்காகப் பொலிசார் எடுத்துச் சென்றதாக வங்கியில் வேலை செய்யும் எனது சகோதரி கூறினார்.

**சாதகமான அம்சங்கள்**

வீட்டுத் தோட்டம் செய்தல், குறிப்பாக மரக்கறிகளையும் கீரைகளையும் வளர்த்தல் சமுதாயத்தின் மத்தியில் அதிகரித்துள்ளது.

**நேர்காணல் 02**

**மலைநாட்டில் வசிக்கும் பிராந்திய ஊடகவியலாளராகப் பணியாற்றும் 25 வயதுடைய முஸ்லிம் சமுதாயத்தினைச் சேர்ந்த ஆண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

நான் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பட்டம் பெற்றேன். எனது எதிர்காலம் தொடர்பாக நான் பெரும் கனவுகளைச் சுமந்திருந்தேன். பெருந்தொற்றின் பின்னர் தொழில் ஒன்றினை எடுப்பது எனக்கு மிகவும் கடினமானதாக மாறியது. இப்பொழுது கூட தொழில் பாதுகாப்பு மற்றும் தொழில் உறுதிப்பாடு தொடர்பில் நான் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றேன். எனது பிரதேசத்தில் நாட்கூலிகளாக வேலை செய்யும் ஏனைய பலர் இந்தப் ''புதிய வழமைச்'' சூழ்நிலையுடன் போராடி வருகின்றனர். நாளாந்தம் உணவு பெறுவது இவர்களுக்குக் கடினமானதாக இருக்கின்றது.

**வாழ்வாதாரம்**

பெருந்தோட்டத் துறையில் சம்பந்தப்பட்டுள்ள சொற்பமான மக்கள் இந்தப் பிரதேசத்தில் உள்ளனர். இப்பிரதேச மக்களில் சிலர் கொழும்பில் வேலை செய்கின்றனர். சிலர் ஆடைத் தொழிற்துறையிலும் சுற்றுலாத் துறையிலும் வேலை செய்கின்றனர். எவ்வாறாயினும் கடந்த வருடம் இவர்களில் பலர் பெருந்தொற்றின் காரணமாகத் தங்களின் தொழில்களை இழந்து வருமான மூலங்களையும் இழந்துள்ளனர். தொற்று ஏற்படும் என மக்கள் பயப்படுவதால் நாட்கூலிகளுக்கு வேலை கிடைப்பதில்லை. வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதுடன் சிலர் கடைகளை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது. சில்லறை விற்பனையில் ஈடுபட்டிருந்தவர்களுக்குப் பெரிய பிரச்சினைகள் ஏற்படவில்லை. அவர்கள் நடமாடும் விற்பனைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

மக்களின் மனநல சுகாதாரத்திலும் உளவியலிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளதை நான் அவதானித்துள்ளேன். எனது கிராமத்தில் அதிகமான மக்கள் முஸ்லிம்களாவர். தகனம் செய்தல் தொடர்பாக அவர்களுக்குப் பல பிரச்சினைகளும் அச்சங்களும் காணப்படுகின்றன. மக்கள் பிசிஆர் பரிசோதனை செய்வதற்குப் பயப்படுகின்றனர். ஏனெனில் தொற்று ஏற்பட்டவர்களுக்கு மரணம் ஏற்பட்டால் அதனால் பல பிரச்சினைகளுக்கும் தகனத்திற்கும் உட்பட நேரிடும் என மக்கள் அறிவார்கள். பிரதேச ரீதியான ஈமச்சடங்கு நடைமுறைகளை அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும்.

### கொவிட் தொற்றுக்களும் இறப்புக்களும்

முதலாவது அலையின் போது மிகச் சொற்பமான நோயாளர்களே அடையாளம் காணப்பட்டனர். ஆனால் இரண்டாவது அலையின் போது இது அதிகரித்ததுடன் மூன்றாம் அலை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. 2021 ஏப்ரில் மாதத்தின் பின்னர், தொற்று ஏற்பட்ட காரணத்தினால் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஏப்ரில் முடிவின் போது எமது பிரதேசத்தில் 300 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் பெரும்பான்மையானவர்களுக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. எனவே முழுமுடக்கம் செய்யப்பட்ட பிரதேசமாகச் சுகாதார அதிகாரிகள் எமது பிரதேசத்தினைத் தனிமைப்படுத்தினர்.

### சுகாதாரத் துறை உதவி



*கொழும்பில் சஹஸ்புர வீடமைப்புத் திட்டத்தில் தடுப்பூசியேற்றுவதற்காக மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர். பட மூலம்:TRT World*

நிகழ்ந்த இறப்புக்கள் பற்றி ஒவ்வொருவரும் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்தனர். மேலும் சிலருக்குத் தொற்றுக்கள் ஏற்பட்டதும் அதிகாரிகள் தொற்றாளர்களின் 1 ஆம் மற்றும் 2 ஆம் தொடர்புகளை அடையாளம் கண்டு தொற்றுத்தடைகாப்புச் செயன்முறையினை உரிய முறையில் மதிப்பிட்டனர். அவர்கள் பல பரிசோதனைகளையும் நடத்தினர். பொதுவாக, பெறுபேறுகளை அறிவிக்க ஐந்து நாட்கள் வரை எடுத்தது.

தடுப்பூசியேற்றல் செயன்முறை பற்றிச் சுகாதார அதிகாரிகள் உரிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தினர். இயலுமான அளவு விரைவாகத் தடுப்பூசியேற்றுமாறு அவர்கள் மக்களை ஊக்குவித்ததுடன் பிரதேசத்தில் தடுப்பூசியேற்றும் செயன்முறையினை அவர்கள் நன்றாக நடத்தினர். எனது கிராமத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட பெரும்பான்மையான மக்கள் பூரணமாகத் தடுப்பூசியேற்றியுள்ளனர்.

### அரசாங்க உதவி

எனது கிராமத்தில் உள்ளக உதவிச் சேவைகள் சிறப்பாக அமைந்திருந்தன. ஆனால் தொற்றுத்தடைகாப்பில் இருந்த மக்களுக்கு 10,000 ரூபா அத்தியாவசியப் பொருட்களின் பங்கீட்டினை அவர்கள் வழங்கவில்லை. அது 14 நாட்கள் தொற்றுத்தடைகாப்பில் இருந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் எனக் கூறினார்கள். எமது பிரதேசத்தில் தொற்றுத்தடைகாப்புக் காலப்பகுதி 10 நாட்களுக்கு உட்பட்டதாக இருந்து. பிரதேசத்தில் சமுர்த்திப் பயனாளிகள் இருந்தனர். ஆனால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கே மானியம் வழங்கப்பட்டது. இப்போது அவர்கள் 2000 ரூபாவினை மானியமாக வழங்க ஆரம்பித்துள்ளனர். இச்செயன்முறைகளைப் பற்றி எனக்குப் பெரிதாக எதுவும் தெரியாது என்பதுடன் அவை நன்கு முகாமைத்துவம் செய்யப்படுகின்றனவா என்பதுவும் தெரியாது. இப்பிரதேசத்தில் செயன்முறைக்கு உதவுவதில் அரசியல் பிரதிநிதிகள் சம்பந்தப்படவில்லை. ஆனால் அருகில் உள்ள கொத்மலை மற்றும் பூண்டுலோயா பிரதேசங்களில் அமைச்சர்களில் ஒருவர் உதவியதாக நான் கேள்விப்பட்டேன்.




*கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கையாக விதிக்கப்பட்டிருந்த பிராந்தியங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாட்டின்போது யாழ்ப்பாணத்தில் ஆணையிறவில் சோதனைச் சாவடியில் இலங்கைப் பொலிசின் விசேட அதிரடிப்படையினர் முகக்கவசம் அணிந்தவாறு காவலில் நிற்கின்றனர்.*

### இராணுவமயமாக்கம்

இரண்டாம் அலையின் போது, தொற்றில் இருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது பற்றியும் நெருக்கடியை எதிர்கொள்வதற்கான கூட்டு முயற்சிக்கான தேவை பற்றியும் பாதுகாப்பு அதிகாரிகள் கிராம மக்களுடன் கூட்டம் ஒன்றினை நடத்தினர். ஒவ்வொருவரும் சூழ்நிலையினைப் புரிந்துகொள்ள முயற்சித்து

அதற்கமைவாகச் செயற்படவேண்டும். தகனம் செய்யும் விடயத்தின் தாக்கத்தினைத் தவிர சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக வேறு பிரச்சினைகள் இல்லை. எனது கிராமத்தில் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம்களாக இருந்தபோதிலும் நாங்கள் சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுடன் ஒற்றுமையாக வாழ்கின்றோம்.

**கல்வி**

நிதி வசதிகளும் ஒன்லைன் கல்விக்கான வசதிகளும் இல்லாத மக்களுக்கு ஒன்லைன் கல்வி நடைமுறைச் சாத்தியமற்றதாகும். எனவே, கல்வித் துறை பாதிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் பாலர் பாடசாலைக்குச் சென்ற பிள்ளை இப்போது முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் உள்ளது. இப்போது 5 ஆம் வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்கு 4 ஆம் தரத்தில் இருந்து பயிற்சியினைப் பெற முடியவில்லை. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஒன்லைனில் கற்பிப்பதற்கான முயற்சிகள் நடைமுறைச் சாத்தியமானவையுமல்ல அல்லது செயற்திறன்மிக்கவையும் அல்ல. ஒன்லைன் முறைமையினைத் தாமே கல்விச் செயன்முறையுடன் ஒருங்கிணைப்பது கடினமானதாகும். சிலர் வகுப்புக்களில் முறையாகப் பங்குபற்றுவதில்லை மேலும் மாணவர்கள் உளவியல் ரீதியான சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றனர்.

இந்த ஒன்றரை வருடங்கள் கல்வித் துறையில் பெரிய இடைவெளியினை உருவாக்கியுள்ளன. புறக்கிருத்தியைச் செயற்பாடுகளில் அல்லது விளையாட்டுக்களில் மாணவர்கள் ஈடுபடவில்லை. ஒன்லைன் கல்விக்கான செலவும் அதிகமாகக் காணப்படுகின்றது. ஏனெனில் சில பிரதேசங்களில் உரிய இணைப்பும் ஏனைய உபகரண வசதிகளும் இல்லை.

**சுற்றாடல்**

கழிவுப் பொருட்களை அகற்றல் முகாமைத்துவம் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. மேலும் சேகரிப்பாளர்கள் இரண்டு நாட்களுக்கொரு தடவை வந்து முறையாக அவற்றினை அகற்றிச்சென்றனர். கொவிட் பயத்தின் காரணமாக அவர்கள் வராத நாட்களும் இருந்தன.

**மனநல சுகாதாரம்**

இது பெருந்தொற்றினால் மறைமுகமாக எழுந்துள்ள பிரச்சினை என நான் நினைக்கின்றேன். சகலரினதும் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் பொருளாதரத்தின் காரணமாகவும் அவர்களின் வாழ்வாதாரங்களின் காரணமாகவும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இறப்பு நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி யாராவது கேள்விப்படுகையில் அவர்கள் பயமடைகின்றனர். ஒவ்வொருவரும் அவர்களின் வாழ்க்கைத் திட்டங்களுடன் போராடிவருவதுடன் தங்களின் எதிர்கால வாய்ப்புக்கள் பற்றி நம்பிக்கையின்றி இருக்கின்றனர்.

**வீட்டு வன்முறை, போதைப்பொருள் நுகர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள்**

மதுபானப் பாவனையும் ஏனைய போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளன. மொபைல் தொலைபேசிக்கு அடிமையாகியுள்ளமை மற்றொரு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

அதிகமான வீட்டு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் இவற்றில் அதிகமானவை அரிதாகவே வெளியில் வருகின்றன. சம்பவங்களில் சுமார் 10 சதவிகிதமானவற்றினை மட்டுமே ஊடகங்கள் வெளியிடுகின்றன என நான் நினைக்கின்றேன். பெரும்பான்மையான மக்கள் முறைப்பாடுகளைத் தாக்கல் செய்வதில்லை.

**சாதகமான தகவமைத்தல்கள்**

வீட்டுத் தோட்டம் செய்வதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது சாதகமானதாகும். திருமணம் மற்றும் மரணச் சடங்குகளில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டமை சாதகமானதாகும். மக்கள் இயந்திர வாழ்வினையே வாழ்ந்து வந்தனர். முழுமுடக்கம் அவர்களுக்குச் சற்று ஆசுவாசத்தினை வழங்கி அவர்கள் குடும்ப வாழ்வில் கவனம் குவிக்க வழியேற்படுத்தியுள்ளது. சிலர் பிளாஸ்திக் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சிக்காகப் பாவித்த பொருட்களைச் சேகரித்தல் என ஏதாவது புதிதாகச் சிறு தொழில்களைத் தொடங்கியுள்ளனர். கைவினைத் தொழில்களும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

**ஏனைய கருத்துக்கள்**

இந்த நெருக்கடி எப்போது முடியும் என நமக்குத் தெரியாது. ஆனால் மனநல சுகாதாரப் பிரச்சினைகளைக் கையாளுவதற்குப் பிரதானமாக ஒரு பொறிமுறையினைக் கண்டுபிடிக்க வேண்டும். இது ஒரு முக்கியமான அம்சம். இதில் உதவ யாருமில்லை.

நாட்டிலுள்ள பலருக்கு இது ஒரு பொதுவான போக்காக இருக்கின்றது. பெருந்தொற்று பொதுவான சில பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. ஆனால் எடுக்கப்படவேண்டிய முக்கியமான தீர்மானங்கள் தாமதிக்கப்பட்டன. இப்போது அவர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் இது காலங்கடந்த ஒரு செயற்பாடாகும். பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான ஒரே வழி நாம் கூட்டாக இதைத் தீர்ப்பதற்கு முன்வருவதேயாகும்.

**நேர்காணல் 03**

**ஆய்வாளராகவும் நாடகக் கலைஞராகவும் செயற்படும் மட்டக்களப்பில் வசிக்கும் தமிழ்ச் சமுதாயத்தினைச் சேர்ந்த 28 வயதான ஆண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

பெருந்தொற்றின் போது வீட்டில் இருந்து வேலை செய்யும் தெரிவு எனக்கு இருந்தது. எனது பிரதேசத்தில் உள்ள ஏனையோருடன் ஒப்பிடுகையில் எனக்கு நிதிப் பிரச்சினைகளோ அல்லது வேறு பிரச்சினைகளோ இருக்கவில்லை. ஆனால் எனது கிராமத்தைச் சேர்ந்த பலர் பல சவால்களுக்கு முகங்கொடுத்தனர். இவர்களில் அதிகமானவர்கள் விவசாயத்திலும் கடற்றொழிலிலும் ஈடுபடுபவர்கள். ஏனைய சிலர் நாட்கூலிகளாகவும் புலம்பெயர் தொழிலாளர்களாகவும் உள்ளனர். இந்தப் பெருந்தொற்று அவர்களையும் அவர்கள் வாழ்வாதாரங்களை ஈட்டும் வழிகளையும் மோசமாகப் பாதித்துள்ளது. முழுமுடக்கத்தின் காரணமாக அவர்களினால் வெளியே சென்று அவர்களின் விளைச்சலை விற்க முடியவில்லை. காணியில்லாதவர்கள் நாட்கூலிகளாக வேலைசெய்து வருமானம் ஈட்டுபவர்களாக இருந்தனர். அவர்களும் தங்களின் வருமானத்தினையும் தொழில் பாதுகாப்பினையும் இழந்துள்ளனர்.

**அரசாங்க உதவி**

எனது கிராமத்தில் 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்கள் சமுர்த்தி பெறுபவர்கள். இது அவர்களுக்கு இந்த நெருக்கடியின் போது பயனளித்துள்ளது. ஆனால் சிலவேளைகளில் மானியங்கள் உரிய நேரத்தில் வரவில்லை. இப்பிரதேசத்தில் இவற்றினை விநியோகிப்பதற்கு நான்கைந்து நாட்களுக்கு மேல் எடுத்தது. சில சந்தர்ப்பங்களில் மானியங்களை நிர்வகித்த மக்கள் பயனாளிகளிடம் பாடசாலையினைத் துப்பரவுசெய்தல், வைத்தியசாலைகளைத் துப்பரவுசெய்தல் போன்ற ஏதாவது வேலைகளைச் செய்யுமாறு கோரினர். இந்தச் சந்தர்ப்பத்தில் இது ஒரு சிறந்த நடவடிக்கை அல்ல. ஏனெனில் மக்கள் ஒன்றுகூடுவதில் உள்ள ஆபத்துக் காரணமாக - இது முழுமுடக்கத்தின் நோக்கத்திற்கு எதிரானதாகும். மானிய உணவுப் பொருட்களை நிர்வகித்து விநியோகிப்பதில் வேறு பிரச்சினைகளும் காணப்பட்டன. சில மக்களுக்கு மானியப் பொருட்களுக்கான தகைமை இல்லாதிருந்தும் அல்லது அவர்களுக்கு அவ்வகையான உதவிக்கான தேவை இல்லாதிருந்தும் அவர்களுக்கு அவை வழங்கப்பட்டன. அவர்கள் சக்திவாய்ந்த மக்களுடன் தொடர்புபட்டவர்கள்.



*முழுமுடக்கத்தினர் போது தமது வாழ்வாதாரங்களை இழந்த மக்களுக்கு அரசாங்க மானியமான 5000 ரூபாவினைப் பெறுவதற்கு நிரப்பவேண்டிய படிவம்.*
*பட மூலம்: Newswire.lk*

பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சிவில் சமூகம் மற்றும் டயலொக் போன்ற சில தனியார் கம்பனிகளும் மக்களுக்கு உதவி வழங்கின. ஆனால் இந்த முன்னெடுப்புக்கள் வரையறுக்கப்பட்டவையாக இருந்தன. வட மாகாணத்தினைத் தளமாகக் கொண்ட சில அரசியல் கட்சிகளும் சில உதவிப் பொறிமுறைகளை முன்னெடுத்தன. ஆனால் இவை பெரிய அளவிலானவையாக இருக்கவில்லை.

**சட்டமும் ஒழுங்கும்**

முழுமுடக்கம் முதலில் விதிக்கப்பட்டபோது, அது இறுக்கமாகப் பின்பற்றப்பட்டது. ஆனால் தற்போதுள்ள முழுமுடக்கத்தின் கீழ் கட்டுப்பாடுகளை மக்கள் உரிய முறையில் பின்பற்றுவதில்லை என்பதுடன் அவர்கள் வெளியிலும் செல்கின்றனர். இதற்குச் சில காரணங்களும் உண்டு. மக்கள் பிரதானமாக உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கே வெளியில் செல்கின்றனர். பொலிசாரும் அரசாங்கமும் இதற்கான பொறுப்பினை ஏற்காது முழுமுடக்கத்தினை அமலாக்குவதைப் பற்றி

அலட்டிக்கொள்ளாதிருப்பது போல் தெரிகின்றது. மேலும், பொருளாதார நிலை காரணமாகவும் மக்களின் குறைந்த வருமானத்தின் காரணமாகவும் அவர்கள் எதையாவது உழைக்கவேண்டும் என்ற தீவிர தேவையில் இருக்கின்றனர். இந்தச் சூழமைவில் முழுமுடக்கம் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பது எமக்கு நிச்சயமாகத் தெரியாதிருக்கின்றது. கிராமப் பிரதேசங்களில் இந்த நிலைமை மோசமாக இருக்கின்றது.

கிராமப் பிரதேசங்களில் விதிகளை மீறிச் செல்பவர்களைப் பற்றிப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்யும் இரகசியமான தகவலாளர்கள் உள்ளனர். மக்கள் வெளியில் சென்றபோது அவர்களை அடித்த சம்பவங்களும் நடந்துள்ளன. இது சட்டத்தினை அமுல்படுத்துவதற்கான குரூரமான வழியாகும். வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னைய சூழலில் பாதுகாப்புப் படைகளுடன் பல தமிழர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். அங்கே இது ஒரு பரிச்சயமான போக்காகும். இதற்கான உதாரணமாக ஏறாவூரில் நடந்த ஒரு சம்பவத்தினைக் குறிப்பிடலாம். அங்கே முஸ்லிம் ஆண்கள் சிலர் முகக்கவசம் அணியாத காரணத்தினால் அவர்களைப் பாதுகாப்புப் படையினர் முழந்தாளிடச் செய்துள்ளனர்.

**சுகாதாரத் துறை உதவி**



*உடல் தொடுகையற்ற புறஊதா வெப்பமானியினை மாணவர்கள் பயன்படுத்துகின்றனர்.*
*பட மூலம்: த ஐலன்ட்*

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினதும் (PHI) சுகாதார அமைச்சினதும் (MOH) இந்த அணுகுமுறைகள் காலப்போக்கில் மாற்றமடைந்தன. பெருந்தொற்றின் ஆரம்பக் கட்டத்தின் போது அவர்கள் செயன்முறை மீது கடப்பாடு கொண்டிருந்தனர். இப்போது தொற்றுக்காளகியுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் உணவு மற்றும் ஏனைய வசதிகள் உள்ளிட்ட தொற்றுத்தடைகாப்பு வசதிகள் சிறந்தவையாக இல்லை. எவ்வாறாயினும், தடுப்பூசியேற்றல் செயன்முறையினை அவர்கள் நிர்வகித்த விதம் தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆதிகமான கிராமங்களில் 30 வயதிற்கும் அதற்கும் மேற்பட்ட மக்களில் 90 சதவிகிதமானவர்கள் பூரணமாகத் தடுப்பூசியேற்றப்பட்டுள்ளனர்.

**கல்வி**

தற்போதுள்ள கல்வி முறைமை பிரதானமாக ஒன்லைன் முறைமையாக உள்ளது. ஆனால், இது மிகவும் வரையறுக்கப்பட்டதாகவும் நகரப் பிரதேசங்களில் உள்ளவர்களினால் மாத்திரம் அணுகக்கூடியதாகவும் உள்ளது. நிதிப் பின்புலம் உள்ளவர்களினால் மாத்திரமே இதில் இருந்து நன்மையடைய முடிகின்றது. கிராமப் பிரதேசங்களில் உள்ள மக்களால் இந்த வசதிகளையோ அல்லது அறிவினையோ பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்க முடியாதுள்ளது. ஒன்லைன் கல்விக்கு இன்றியமையாததான தொழில்நுட்பத்துடன் ஆசிரியர்கள் பரிச்சயமற்றவர்களாக உள்ளனர். பென் டிரைவ் என்றால் என்னவென்று தெரியாத மாணவர்கள் இருப்பதை நான் அவதானித்துள்ளேன். மட்டக்களப்பில் கிராமப்புறங்களில் இணைய இணைப்பு மிக மோசமாக இருக்கின்றது. இந்தச் சூழமைவின் கீழ் கற்பித்தலுக்கான மாற்று வழியாக ஒன்லைன் கல்வி தொடரப்பட்டால் ஆசிரியர்களுக்கு உதவியும் பயிற்சியும் தேவை. சில ஆசிரியர்கள் குறிப்புக்களை அவர்களே அச்சிட்டு மாணவர்களின் மத்தியில் விநியோகித்துள்ளனர். ஆனால் இதற்கான செலவு உயர்வானதாகும். சில கிராமங்களில் பிரிண்டிங் கடைகளுக்குச் செல்ல 30 கிலோ மீற்றர்கள் செல்லவேண்டியுள்ளது. சில தனிநபர்களும் சிவில் சமூகமும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவின. ஆனால் அரசாங்கமும் கல்வி அமைச்சும் உரிய உதவியினை வழங்கவில்லை.

**சுற்றாடல்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தின் பின்னர் மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். பல நீரியல் வளங்கள் அழிக்கப்பட்டு கடல் விலங்குகள் இறந்தன. மட்டக்களப்பின் கடற்கரையோரப் பகுதிகளில் விலங்குகள் இறந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. பிரதேசத்தில் உள்ள பல மக்கள் வெளிநாட்டில் வேலை செய்கின்றனர். குறிப்பாக மத்தியகிழக்கில் வேலை செய்கின்றனர். இவர்கள் பெருந்தொற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். இவர்களிடம் போதிய

வளங்கள் இல்லை. இவர்களில் சிலர் சட்டவிரோதமான மணல் அகழ்விலும் காடழிப்பிலும் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சட்டவிரோதமான நடவடிக்கைகள் பெருந்தொற்றுக்கு முன்னரும் இடம்பெற்றன. ஆனால் இப்போது இவை அதிகரித்துள்ளள.

**தவறான தகவல்கள்**

பெருந்தொற்றின் பாங்குகள் மற்றும் அதன் அபாயநேர்வுகள் பற்றி மக்களிடம் ஒரு புரிதல் இல்லாதிருக்கின்றது. அவர்கள் பொதுவாக வதந்திகளையே செவிமடுக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் அபாயநேர்வுகளை அவர்களுக்குப் புரியவைப்பது மிகக் கடினமாக இருக்கின்றது. சிறந்த விழிப்புணர்விற்கான தேவை எப்போதும் இருக்கின்றது.

**மனநல சுகாதாரமும் வீட்டு வன்முறையும்**

மக்கள் பலர் மரணம் பற்றிய பயத்துடன் வாழ்கின்றனர். அவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலத்தினைப் போன்று அவர்களினால் மரணச் சடங்குகளை நிறைவேற்ற முடியாதுள்ளது. வெகு சிலருக்கு மாத்திரமே இறந்தவர்களின் உடல்களைப் பார்க்கக் கிடைக்கின்றது. இது மக்களில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் அவர்களை மனோரீதியாகவும் பாதித்துள்ளது. மேலும், நடமாட்டக் கட்டுப்பாடுகளினால் சிறுவர்களும் இளைஞர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நிதி இக்கட்டுக்களும் ஏனைய தடைகளும் மேலதிக மனக் கவலைகளை உருவாக்குகின்றன.

25 முதல் 30 வயதான இளம் நபர்களின் மத்தியில் பிரதானமாக போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன்னர் பாதுகாப்புப் படையினர் இதற்கு உதவி வந்தனர்.

**சாதகமான தகவமைப்புக்கள்**



*அம்பாறை, பானமயில் விவசாயக் களத்தில் வேலை செய்யும் விவசாயி*

உணவுப் பாதுகாப்புக்கான தேவை மற்றும் மக்களிடம் பணம் இல்லாமை தோட்டம் செய்தல் போன்ற செயற்பாடுகளை ஊக்குவித்துள்ளது. ஏதோ ஒரு மரத்தினை நட்டுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றனர்.

மேலும், இந்தக் காலப்பகுதியில் மனிதநேயச் செயற்பாடுகளும் முன்னெடுப்புக்களும் அதிகரித்துள்ளன. இந்த நேரமே அனைவரும் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்தும் விளையாட்டுக் கழகங்களில் இருந்தும் சங்கங்களில் இருந்தும் சமய நிறுவனங்களில் இருந்தும் உதவியினை நாடும் தருணமாகும். சங்கங்கள் உதவி வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. நான் இதனை ஒரு சாதகமான முன்னேற்றமாகவே பார்க்கின்றேன்.

சில இளைஞர்கள் பணம் சம்பாதிப்பதற்காகக் கைவினைப் பொருட்களைச் செய்ய ஆரம்பித்துள்ளதுடன் ஏனைய சுய தொழில்களிலும் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். மேலும், பல கலந்துரையாடல் மன்றங்கள் உருவாக்கப்பட்டு சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள் போன்ற உள்ளூர்ப் பிரச்சினைகள் தொடர்பான கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**நேர்காணல் 04**

**அநுராதபுரத்தில் சமுதாயப் பணியாளராகவும் விவசாயியாகவும் வேலை செய்யும் 46 வயதுடைய சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்த பெண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

முழுமுடக்கத்தின் போது தேவைப்படும் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கு நாம் மிகவும் முயற்சி செய்தோம். இந்த நடவடிக்கைகளில் பெரும்பான்மையானவை எமது வாழ்வாதாரங்களுக்குச் சவால் ஏற்படுத்தியுள்ளன. அதிகமான நேரங்களில் நான் சமுதாயம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வந்தேன். எமது கிராமத்தில் சமுதாயப் பணிகளில் ஈடுபடுவோருக்கு இந்தப் பெருந்தொற்றுப் பல தடைகளை உருவாக்கியுள்ளது. பெருந்தொற்றின் காரணமாக எம்மால் முன்பு ஒன்றுகூடிக் கலந்துரையாடியதைப் போன்று கலந்துரையாட முடியவில்லை.

2019 டிசம்பரில் எனது தந்தை இறந்துவிட்டார். அதன் பின்பு விடயங்கள் துரிதமாக மாறிவிட்டன. எம்மால் எதையும் செய்ய முடியவில்லை. தந்தைக்கான மூன்றாம் மாத அன்னதானம் வழங்கல் நிகழ்வினைக் கூட நடத்த முடியவில்லை.

**வாழ்வாதாரம்**



*அநுராதபுரத்தில் பெண் விவசாயிகள்.*
*புகைப்படம்: அமில உடகெதர*

எனது கணவர் ஒரு விவசாயி. நாம் குத்தகை விவசாய முறைமையின் கீழ் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோம். நோய்த் தொற்றுப் பற்றிய பயத்தின் காரணமாகவும் வைரஸ் பரவல் காரணமாகவும் மக்களால் ஒன்றுசேர்ந்து வேலை செய்ய முடியவில்லை. ஒவ்வொருவரும் மற்றவரை மிகுந்த சந்தேகத்துடன் பார்க்க ஆரம்பித்தனர். ஏனெனில் எம்மால் வைரசை மற்றவருக்குப் பரப்ப முடியும்.

நாம் பழங்களையும் மரக்கறிகளையும் பயிர்செய்வதை வழமையாகக் கொண்டிருந்தோம். இக்காலப் பகுதியில் வாழையிலும் ஏனைய மரக்கறிகளிலும் எமக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. ஆனால் அவற்றினை விற்பதில் நாம் சிரமங்களுக்கு முகங்கொடுத்தோம்.

இரண்டாம் அலையின் பின்னர் எம்மால் பொருட்களை வாங்க முடியவில்லை. அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு நாம் மிகவும் கஷ்டப்பட்டோம். வீட்டுத் தோட்டத்தில் இருந்து எமது உணவுத் தேவைகளை எம்மால் நிறைவேற்ற முடிந்தது. சில மாதங்களுக்கு முன்னர் இரசாயண உரத் தடை விதிக்கப்பட்டதுடன் எமது விவசாயத்தில் நாம் சில பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தோம்.

**அரசாங்க உதவி**

முன்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. நடமாடும் கடைகள் இருந்தன. ஆனால் அவற்றில் விலை உயர்வாகக் காணப்பட்டன. ஆரம்பத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோக நிகழ்ச்சித்திட்டம் காணப்பட்டது. அனைவருக்கும் இது கடந்த வருடம் கிடைத்தது. ஆனால் இது தொடர்ச்சியாக நடைபெறவில்லை. மேலும் எமக்கு “சமுர்த்தி” 5000 ரூபா மானியம் கிடைத்தது. கடந்த மே மாதம் எமக்கு முழுத் தொகையும் கிடைக்கவில்லை. எமக்குக் கிடைக்கின்ற மாதாந்த “சமுர்த்தி” நலன்களை அதிகாரிகள் குறைத்து எமக்கு மீதித் தொகை மட்டுமே கிடைக்கின்றது என்பதை நாம் கண்டறிந்தோம். குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே இது கிடைத்தது. இதற்கெனப் பதியாதவர்களுக்கு இது கிடைக்கவில்லை.

**சுகாதாரத் துறை உதவி**

எனது கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் புது வருட காலம் முடியும் வரையில் பெருந்தொற்றின் தாக்கங்கள் பெரிதாக இருக்கவில்லை. பின்பு இங்கேயும் பலருக்குத் தொற்று ஏற்பட்டமை பற்றி அறிக்கையிடப்பட்டது. கடந்த மாதம் கல்நாவயில் 80 வயதான ஒருவர் இறந்தார். சுகாதாரத் துறையும் அதிகாரிகளும் பிரதேசத்தில் சிறந்த முறையில் உதவிகளை வழங்கினர். முன் ஆலோசனைகள் வழங்கப்பட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. பிரதேச செயலகத்தில் இருந்தும் பிரதேசத்தின் கிராமசேவை உத்தியோகத்தரிடம் இருந்தும் சிறந்த உதவிகள் கிடைத்தன. சுகாதார அதிகாரிகள் பிசிஆர் பரிசோதனைகளையும் அண்டிஜென் பரிசோதனைகளையும் நடத்தினர். வீட்டில் தொற்றுத்தடைகாப்புச் செயன்முறையினையும் முன்னெடுத்தனர். கடந்த ஏப்ரில் மாதத்தில், எமது அயலவர்களில் ஒருவரின் மகள் கொழும்பில் இருந்து கிராமத்திற்கு வந்திருந்தார். அவருக்குக் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது. பின்னர் அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்களைத் தொற்றுத்தடைகாப்பில் வைப்பதற்கு அதிகாரிகள் கிராமத்தவர்களுக்கு உதவினர். பிரதேச செயலகம் அத்தியாவசியப் பொருட்களையும் தேவைகளையும் பெறுவதற்கு உதவி வழங்கின. மேலும், கஷ்ட காலத்தில் கிராமத்தவர்கள் ஒருவர் மற்றவருக்கு இயலுமான அளவு உதவி செய்தனர்.

**தடுப்பூசியேற்றல்**




*கொழும்பில் 2021 ஜனவரியில் சுகாதார அதிகாரி ஒருவருக்கு அஸ்ட்ரா ஜெனிகா கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றப்படுகின்றது மூலம்: REUTERS புகைப்படம்: தினுக லியனவத்த*

தடுப்பூசியேற்றும் செயன்முறை நன்கு நிர்வகிக்கப்பட்டது. கடந்த வாரம் எமக்கு முதலாவது ஊசி ஏற்றப்பட்டது. அடுத்த மாதம் எமக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்படும். கிராமத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் முன்பு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பாகத் தயக்கம் காணப்பட்டது. ஆனால் பின்பு சில விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. நிர்வாகச் செயன்முறை நன்கு நடத்தப்பட்டது. அவர்கள் ஒரு நிலையத்தில் 3 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குத் தடுப்பூசியேற்றினார்கள். அதிகாரிகளால் நிலையத்தில் எவ்விதமான பரபரப்பும் இன்றிச் சமூக இடைவெளியினையும் சுகாதார வழிகாட்டல்களையும் பேணக்கூடியதாக இருந்தது.

**கல்வி**

இது எனது கிராமத்தில் உள்ள குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. பெருந்தொற்றினால் பாடசாலைகள் மூடப்பட்ட பின்னர் கல்வி முன்னெடுப்புக்களில் அதிகமானவை ஒன்லைனுக்கு மாற்றப்பட்டன. இதற்காக எமக்குத் தொலைபேசி, தரவுகள் மற்றும் சிறந்த இணைப்பு உள்ளிட்ட பல வசதிகள் தேவைப்படுகின்றன. கிராமத்தில் உள்ள அதிகமான குடும்பங்களிடம் தொலைபேசியோ அல்லது அதற்கான நிதி வசதிகளோ இல்லாதிருக்கின்றன. மற்றொரு பிரதான பிரச்சினை இணைய இணைப்பும் சமிக்ஞை கிடைத்தலுமாகும். இந்தத் தொலைபேசி அழைப்பினை எடுப்பதற்குக் கூட நான் சமிக்ஞை கிடைக்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரவேண்டி இருந்தது. அந்த இடத்தினை நாம் முன்பே அடையாளம் கண்டிருந்தோம். எனது மகள் 5 ஆம் வகுப்பில் கற்கின்றார். அவர் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகின்றார். எனவே, அதிகமான வேளைகளில் அவருக்கு தனிப்பட்ட வகுப்பின் உதவியும் தேவைப்படுகின்றது. அதற்காக அவர் ஒன்லைன் வகுப்பில் கலந்துகொள்ள வேண்டியிருக்கின்றது. அவர் கூறுவதைப் பார்க்கையில், ஒன்லைன் அடிப்படையிலான மெய்நிகர் கல்வி சற்றுக் கடினமானதாக இருக்கின்றது. வசதிப்படுத்தலில் மட்டுமன்றி கற்றலில் தொடர்ந்து கவனம் குவித்தலும் சிரமமானதாக உள்ளது. சில குடும்பங்களில் பாடசாலை செல்லும் வயதுடைய இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஒன்லைனிலேயே கற்கவேண்டியுள்ளது. அதிகமான சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு தொலைபேசியினை வழங்குவது கடினமானதாக உள்ளது. மேலும், சில பிரதேசங்களில் சில மாணவர்கள் ஒரு தொலைபேசி மூலமாக இணைய முயற்சிப்பதை நான் பார்த்துள்ளேன்.

சில மாணவர்கள் இதனைக் கைவிட்டு விவசாய வேலைகளிலும் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அச்சிடுவதற்கான வசதிகளைக் கொண்ட ஆசிரியர்கள் மெய்நிலைக் கல்வியின் சிரமங்களை எதிர்கொள்வதற்கான ஒரு வழியாக மாணவர்களின் மத்தியில் கற்கைக்கான குறிப்புக்களை அச்சிட்டு விநியோகித்துள்ளனர்.

**மனநல சுகாதாரம்**

பொருளாதாரப் பிரச்சினைகளாலும் வாழ்வாதாரப் பிரச்சினைகளாலும் பல கிராமங்கள் சூழ்நிலை சார்ந்த அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றன. பொதுவாக, கிராம மக்கள் ஒன்றுசேர்ந்து விடயங்களைச் செய்வதிலும் பேசுவதிலும் கூட்டாகச் செயற்படுபவர்கள். ஆனால் அதற்கான அவகாசம் அவர்களுக்கு இருக்கவில்லை.

**வீட்டு வன்முறை**


மக்களின் குடும்ப வாழ்க்கை முடக்கப்பட்டுள்ள காரணத்தினால் சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. பாதுகாப்புக் காரணங்களினால் போதைப்பொருள் பாவனையும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் சிலர் மதுபானம் அருந்துகின்றனர். சிலவேளைகளில் இதனால் தம்பதிகளுக்கு இடையில் சண்டைகள் உருவாகியுள்ளன.

**சுற்றாடல்**

காடழிப்புத் தொடர்பான சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பிரதேச சபை உறுப்பினர்களில் ஒருவர் நிர்மாணப் பணிகளுக்காக மரங்களைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார். பின்னர் கிராமத்தவர்கள் அதிகாரிகளிடம் முறையிட்டதைத் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதையல்களைத் தோண்டி எடுக்கும் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

**தவறான தகவல்கள்**

சில செய்திகளை யாராவது ஒருவர் அறிந்த பின்னர் அவர்கள் நேரடியான நடவடிக்கையினை எடுப்பதற்குப் பதிலாக அதனை ஏனையோர் மூலம் உறுதிப்படுத்த முயற்சிக்கின்றனர். பெருந்தொற்றுக் காலப்பகுதிக்கு முன்னரே பாலியல் தொந்தரவு தொடர்பான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள பிரதான பிரச்சினை மக்களிடம் விழிப்புணர்வில்லை என்பதும் யாருமே எதையும் முறைப்பாடு செய்வதில்லை என்பதுமாகும். இது கூட்டாக மாறவேண்டிய ஒன்றாகும். கிராமத்திலுள்ள சங்கங்களினால் குடும்ப சுகாதார அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கிராமத்தில் உள்ள இவ்வாறான எத்தனிப்புக்களை மாற்றுவதற்கு யாரும் எவ்விதமான முன்னெடுப்புக்களையும் எடுக்கவில்லை.




*பட மூலம்: Groundviews*

**சாதகமான தகவமைத்தல்கள்**

வீட்டுத் தோட்டத்தின் பரவல் ஒரு சாதகமான தகவமைத்தலாகும். மக்கள் அதிகமான நேரம் வீடுகளிலேயே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு இதற்கு நேரம் இருக்கின்றது. இந்தத் தகவமைத்தலின் காரணமாக இப்பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படவில்லை.

**ஏனைய கருத்துக்கள்**

இரசாயண உரங்களின் மீது விதிக்கப்பட்ட திடீர்த் தடையின் காரணமாக விவசாயத் துறையில் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. விவசாயத்திற்கு நீர்ப் பற்றாக்குறை காணப்படுவதும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. விவசாயத்தினையும் ஏனைய வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதற்கு வழங்கப்படும் உதவி இந்தச் சூழ்நிலைகளின் கீழ் மிகவும் முக்கியமானதாகும்.

**நேர்காணல் 05**

**நாட்கூலியாக வேலை செய்யும் அநுராதபுரம், கெக்கிராவயைச் சேர்ந்த இரண்டு மகன்களின் தாயான 42 வயதுப் பெண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

எனது கணவரும் நானும் நாட்கூலிகளாக வேலை செய்கின்றோம். எமது மூத்த மகன் பாடசாலைக் கல்வியினைப் பூர்த்திசெய்துள்ளார். அவர் தொழிற்பயிற்சி பெறுகின்றார். மற்றைய மகன் ஐந்தாம் தரத்தில் கற்கின்றார். பெருந்தொற்றின் காரணமாக கணவர் வேலைக்குச் செல்லவில்லை. இந்தக் காலப்பகுதியில் எமக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டது. நாங்கள் பெரும்பாலும் வீட்டுத் தோட்டம் செய்வதிலேயே ஈடுபட்டிருந்தோம். நாங்கள் அவரையும் மரவள்ளியும் வெண்டியும் கத்தரியும் ஏனைய சில பயிர்களும் பயிரிட்டோம். அந்தப் பயிர்களின் விளைச்சலால் எமது உணவுத் தேவையில் அதிகமானவற்றினை எம்மால் பூர்த்திசெய்ய முடிந்தது. அதைத் தவிர சமுர்த்தி கொடுப்பனவு நீங்கலாக எமக்கு வேறு எவ்விதமான வருமானமும் இல்லை. ''சவித்ரி'' எனும் அரச சார்பற்ற நிறுவனமும் மே மாதத்தில் எமக்கு உணவுப் பொதியினை வழங்கியது. ஒன்லைன் கல்விக்கான வசதி எமக்கில்லாத காரணத்தினால் எனது இளைய மகனின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

**வாழ்வாதாரம்**

எமது கிராமம் தொலைதூரக் கிராமமாகும். கிராமத்தவர்கள் யுத்தத்தின் போது இக்கிராமத்தில் குடியேறியவர்கள். அரசாங்கம்

எங்கள் அனைவருக்கும் காணிகளை வழங்கியது. பாரிய அளவில் விவசாயம் செய்வதற்கு யாரிடமும் விசாலமான காணிகள் இல்லை. தற்போது, ஒரு காணித் துண்டில் மூன்று அல்லது நான்கு குடும்பங்கள் வாழ்கின்றன. ஆனால் இவர்களில் பலரும் மரக்கறிகளையும் பழங்களையும் பயிரிட்டு வீட்டுத் தோட்டம் செய்வதற்குத் தகவமைத்துள்ளனர். மேலும் சிலர் தையல் மற்றும் கைவினைப் பொருட்களைத் தயாரித்தல் போன்ற சுயவேலைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இங்கே செங்கல் தயாரிப்புக்கான மூலப்பொருளான களிமண்ணும் பொருத்தமான மண்ணும் கிடைக்கின்ற காரணத்தினால் ஏனைய சிலர் செங்கல் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அதிகமான சந்தர்ப்பங்களில் அவர்கள் செங்கல்லைச் சுடுவதற்கு முன்னர் உலர்த்திய செங்கல்லை விற்பனை செய்கின்றனர். ஏனைய சிலர் வியாபாரக் கட்டளைகளுக்காகச் சீமெந்துக் கற்களைத் தயாரிக்கின்றனர். கட்டுப்பாடுகள் நிலவும் சூழ்நிலையினால் இவற்றினை எடுத்துச் செல்வதில் சிரமங்கள் இருப்பதால் இந்த முன்னெடுப்புக்கள் வெற்றியடைவது கடினமானதாக இருக்கின்றது. பாரிய வருமான இழப்பின் காரணமாக எமது வாழ்வாதாரங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

**அரசாங்க உதவி**

கடந்த வருடம் எமக்கு 5000 ரூபா சமுர்த்திக் கொடுப்பனவு கிடைத்தது. ஆனால் இந்த வருடம் அத்தொகை குறைக்கப்பட்டு எமக்கு 3000 ரூபாவே கிடைத்தது. எவ்வாறாயினும் ஏனைய சில சமுர்த்திப் பயனாளிகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 5000 ரூபாவினைப் பெற்றுக்கொண்டனர். சில பிராந்திய அரசியல்வாதிகள் இந்தச் செயன்முறையில் செல்வாக்குச் செலுத்திய காரணத்தினால் சமுர்த்தி உதவி பெறத் தேவையற்ற அவர்களின் ஆதரவாளர்கள் சிலர் இந்த மானியத்தினைப் பெற்றுக்கொண்டனர். சில குடும்பங்களுக்கு இது பற்றிக் கிராமசேவை உத்தியோகத்தர்களும் ஏனைய அதிகாரிகளும் அறிவிக்காத காரணத்தினால் அவர்களுக்கு இந்தத் தொகை கிடைக்கவில்லை.

**சுகாதாரத் துறை உதவி**

இந்தக் காலப்பகுதியில் சுகாதார அதிகாரிகள் எமக்கு நன்கு உதவினர். அயல் கிராமங்களில் உள்ள சிலருக்குத் தொற்று ஏற்பட்டது. தொற்று ஏற்பட்டவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்கள் என 4 கிராமத்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன் பின்னர் அவர்களைத் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்த நேரிட்டது. சுகாதார அதிகாரிகள் அவர்களுக்கு வழிகாட்டல்களைக் கொண்டு உதவி அக்குடும்பங்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை வழங்கினர். கிராமத்தில் உள்ள ஏனையவர்கள் அவர்களுக்குக் கூட்டாக உதவினர். பிரதேச செயலக அலுவலகம் கிராமசேவையாளரின் ஒத்துழைப்புடன் 10000 ரூபா உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியினை விநியோகித்தது. சுகாதார அதிகாரிகள் பிசிஆர் பரிசோதனைகளையும் அண்டிஜென் பரிசோதனைகளையும் நடத்துவதற்கு உதவினர்.

**தடுப்பூசியேற்றல்**

தடுப்பூசியேற்றல் செயன்முறை நன்கு நிர்வகிக்கப்பட்டது. இற்றைவரையில் 30 வயதுக்கு மேற்பட்ட கிராம மக்களுள் 90 சதவிகிதமான மக்களுக்குப் பூரணமாகத் தடுப்பூசியேற்றப்பட்டுள்ளது. தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாகக் கிராமத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது. தடுப்பூசியேற்றும் நிலையங்களிலும் அதிக நேரம் எடுக்காது பரபரப்பின்றி அவர்கள் தடுப்பூசிகளை ஏற்றினர். ஆரம்பத்தில் தடுப்பூசி பற்றிய சில அச்சங்கள் காணப்பட்டதுடன் சிலர் அதனைப் பற்றிப் பேசுவதையும் தவிர்த்து வந்தனர். ஆனால் பின்னர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டதும் இவை தீர்க்கப்பட்டன. மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைத்து ஹல்பிடிகம பாடசாலையில் அதிகாரிகளால் தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

**கல்வி**



*இடைவேளையின் போது பாடசாலை மாணவர்கள் கொழும்பு, பன்னிப்பிடியவில் கூட்டு அவதானிப்பில் ஈடுபடுகையில் 2021*

கல்வி முழுவதுமாக ஒன்லைன் முறைமைக்கு மாற்றப்பட்டமையினால் பல சிரமங்கள் ஏற்பட்டன. மக்களில் பெரும்பான்மையானவர்களிடம் தொழில்நுட்ப

வசதிகள் இல்லாத காரணத்தினால் அவர்களால் ஒன்லைன் கல்வியை அணுக முடியவில்லை. இந்தப் பிரதேசத்தல் இணைய இணைப்பு மிகவும் பலவீனமானதாக உள்ளது. எமது பிரதேசத்தில் உள்ள அதிகமான குடும்பங்களால் ஒன்லைன் கல்வியினை அணுகுவதற்கான தரவுக் கட்டணங்களைச் செலுத்த முடியாதிருந்தது. குறிப்பாகச் சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பல சிரமங்களுக்கும் முகங்கொடுத்தனர். அவர்களுக்குத் தேவையான பாடங்களை அவர்களால் கற்க முடியவில்லை. அவர்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதும் கல்விச் சாதனங்களைப் பெற்றுக்கொள்வதும் கடினமானதாக இருந்தது. நூலகங்களையும் யாராலும் அணுக முடியவில்லை. கல்வி அமைச்சில் இருந்தும் ஏனைய கல்வி அதிகாரிகளிடம் இருந்தும் எவ்வித உதவியும் கிடைக்கவில்லை.

**மனநல சுகாதாரம்**

முழுமுடக்கத்தின் போது மக்கள் மீது மனநிலை சார்ந்த பல அழுத்தங்கள் காணப்பட்டன. பலரும் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்ததுடன் அவர்களின் பிள்ளைகள் ஒன்லைன் கல்வியில் பல சிரமங்களுக்கும் முகங்கொடுத்தனர்.

**வீட்டு வன்முறை**



*பட மூலம்:: கொழும்பு கெசட்*

குறிப்பிட்ட சில குடும்பங்களில் வன்முறையில் சில அதிகரிப்புக் காணப்பட்டது. வாழ்வாதாரச் சிரமங்கள் உள்ளிட்ட அவர்களின் கஷ்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களே இதற்கான காரணங்களாகும். மேலும், குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் முன்பு இல்லாதவாறு வீட்டில் தொடர்ந்திருந்தனர்.

**சாதகமான தகவமைத்தல்கள்**

இந்தக் காலகட்டத்தில் கிராமத்தவர்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு வெவ்வேறு வழிகளில் உதவி வந்தனர். வீட்டுத் தோட்டத்தின் மூலம் வெவ்வேறு குடும்பங்கள் வெவ்வேறு பயிர்களைப் பயிரிட ஆரம்பித்தன. அறுவடை கிடைத்ததும் தம்மிடம் இல்லாத மரக்கறிகளையும் பழங்களையும் மற்றவர்களிடம் இருந்து பரிமாற்றத்தின் மூலம் மக்கள் பெற்றுக்கொண்டனர். அவர்கள் பண்டமாற்று முறைமையினை மீள் அறிமுகம் செய்தனர். தமது வீட்டுத் தோட்டத்தில் தம்மால் இயலுமான எதையும் பயிர்செய்ய முயற்சித்ததன் மூலம் மக்கள் வீட்டுத் தோட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டனர்.

**நேர்காணல் 06**

**சமுதாயப் பணியாளராகவும் பயிர்ச்செய்கையாளராகவும் பணியாற்றும் அநுராதபுரத்தைச் சேர்ந்த சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்த 61 வயதுப் பெண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

எனது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அதுபோல் கிராமத்தில் உள்ள ஏனையோருக்கும் இது ஒரு கடினமான காலமாக அமைந்துள்ளது. எமது வாழ்வாதாரத்தின் மீது பல இக்கட்டுக்கள் ஏற்பட்டுள்ளன. மக்களின் நிதி நிலைமைகள் தற்போது சிறந்த நிலையில் இல்லை. எமது குடும்பத்தில் ஐந்து பேர் உள்ளனர். எனது கணவர் ஒரு தச்சர். அவர் கொழும்பில் தங்கி வேலை செய்துவந்தார். ஆனால் முழுமுடக்கத்தின் காரணமாக அவர் 2020 ஏப்ரலில் கிராமத்திற்குத் திரும்ப வேண்டி நேரிட்டதால் அவரின் வருமானத்தினை இழந்துவிட்டார். திரும்பி வந்த பின்னர் அவர் வீட்டுத் தோட்டம் செய்வதிலும் விவசாய வேலைகள் செய்வதிலும் பிரதானமாக ஈடுபட்டுள்ளார்.

எனக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். இவர்கள் அனைவரும் மணமுடித்து எம்முடனேயே வாழ்கின்றனர். நான் வீட்டுத் தோட்டத்தில் பயிர்களை நட்டுவந்தேன். எமது அறுவடையினை நாம் அநுராதபுரச் சந்தையில் விற்று நல்ல வருமானம் ஈட்டி வந்தோம். ஆனால் கொவிட் தாக்கிய பின்னர் அந்த வாய்ப்பு இல்லாமல் போயுள்ளதுடன் வருமானமும் இல்லாமல் போய்விட்டது.

**வாழ்வாதாரம்**

அவர்களில் பலர் நன்கு வருமானம் ஈட்டக்கூடிய ஏதாவது புதிய ஒன்றினைச் செய்வதற்கு முயற்சிக்கின்றனர். கடந்த வருட முழுமுடக்கத்தின் பின்னர் நான் கீரைக் கஞ்சி விற்கும் ஒரு சிறு கடையினை ஆரம்பித்தேன். நான் குரக்கன் கஞ்சி, மூலிகைக் கஞ்சி, சவ்வரிசிக் கஞ்சி ஆகியவற்றினைக் காலையில் விற்றுவந்தேன். எனக்கு அரசாங்க அலுவலகங்களில் இருந்தும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்களிடம இருந்தும் எனது தயாரிப்புக்கான மேலதிக கட்டளைகள் கிடைத்தமையினால் நான் ஓரளவு நல்ல வருமானத்தினை ஈட்டிவந்தேன். இந்த நாட்களில் அந்த வியாபாரத்தினை நடத்துவதும் சற்றுக் கடினமானதாக இருக்கின்றது. நான் வாசனைத் திரவியங்களான மிளகு, கறுவா, குரக்கன் மற்றும் ஏலம் விற்கும் சிறு கடை ஒன்றினை நடத்தினேன். எள்ளுருண்டை செய்தும் விற்றுவந்தேன். இவ்வாறான சிறு வியாபாரங்களில் ஏனைய பல பெண்களும் ஈடுபட்டுள்ளனர். கிராமத்திலுள்ள பெண்கள் முன்னெடுக்கும் சுய வியாபாரங்களாக இவை இருக்கின்றன.

**அரசாங்க உதவி**

சமுர்த்தி கடன் வசதி வழங்கப்பட்டது. ஆனால் அதிகமான உதவி முன்னெடுப்புக்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுக்குச் சார்பானவையாக இருந்தன. அரசியல்வாதிகள் அவர்களின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே உதவுகின்றனர். அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்குத் தொழில்வாய்ப்பு வழங்கப்படுவது போன்றதே இதுவும். ஏற்கனவே சமுர்த்தி உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கே 5000 மானியம் வழங்கப்பட்டது. ஏனையோருக்கு அவை கிடைக்கவில்லை. இந்தத் திட்டத்தின் கீழ் 5000 ரூபா பெற்ற சிலர் தற்போதைய சூழமைவில் உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த வருமானம் பெறும் நிலையில் உள்ளனர். உதவியற்ற ஏனைய பல மக்களுக்கு எவையும் கிடைக்கவில்லை. இந்தக் காலப்பகுதியில் இதுவரை எமக்கு இரண்டு தடவைகள் 5000 ரூபா சமுர்த்தி கிடைத்திருக்கின்றது. 2020 ஆம் ஆண்டு ஒரு தடவையும் 2021 மே மாதம் ஒரு தடவையும் கிடைத்தன.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மற்றைய 5000 ரூபா மானியம் வழங்கப்பட்டது. எமது கிராம மக்கள் சிலருக்கும் இது கிடைத்தது.

**சட்டமும் ஒழுங்கும்**



*கொழும்பு வெள்ளவத்தயில் துப்பரவுத் தொழிலாளி*

பொதுவாக, மக்களில் அதிகமானவர்கள் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றினார்கள். ஆனால் முழுஅடைப்பு மக்களின் வாழ்வாதாரங்களிலும் வருமானத்திலும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. எமது விளைச்சலை விற்பதிலும் அத்தியாவசியமான பொருட்களை வாங்குவதிலும் நாம் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றோம். எம்மைக் கவனிப்பதற்கு யாரும் இல்லை. மொத்தத்தில் கள மட்டத்தில் வறிய மக்களில் தாக்கம் செலுத்திய இந்தச் சூழ்நிலையினைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய திட்டமிடல் இல்லை என்கின்ற உணர்வு மேலோங்கியிருந்தது.

**சுகாதாரத் துறை உதவி**

அன்னதானம் வழங்கிய சமய நிகழ்வு நடைபெற்ற வீடு ஒன்றில் பலபேர் கூடிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனை யாரும் பரிசீலிக்கவில்லை என்பதுடன் இங்கே எவ்விதமான விதிகளும் கடைப்பிடிக்கப்படவில்லை. சுகாதார மருத்துவ அதிகாரிகள் யாரும் இதனைப் பரிசோதிக்க வரவில்லை. நாம் 1990 இற்கு அறிவித்தோம். ஆனால் யாரும் வரவில்லை. இதில் பங்குபற்றியவர்களுக்கு அண்டிஜென் பரிசோதனையினை அல்லது பிசிஆர் பரிசோதனையினை நடத்தக்கூடிய ஒரு வழியும் இருக்கவில்லை. இது எட்டு நாட்களுக்கு முன்னர் நடந்தது. ஆனால் இதைப் பற்றிப் பரிசீலிக்க யாரும் வரவில்லை.

கொவிட் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணியவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களைத் தனிமைப்படுத்துவதற்கு முன்பு அரசு உதவி வழங்கியது. அந்தக் காலப்பகுதியில் இந்த மக்களுக்குக் கிராமத்தவர்களே உதவினர்.

**தடுப்பூசியேற்றல்**

தடுப்பூசியேற்றல் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது. 30 வயதுக்கு மேற்பட்ட பெரும்பான்மையானவர்கள் குறைந்தது ஒரு தடுப்பூசியினையாவது இதுவரையில் பெற்றுள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். முன்னதாக முதியவர்கள் சிலர் தடுப்பூசியேற்றுவது தொடர்பில் சந்தேகங்கள் கொண்டிருந்தனர். ஆனால் சுகாதார அதிகாரிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தினர்.

**சமுதாயச் சங்கங்கள்**

பெருந்தொற்று ஏற்பட முன்னர் சில சிறந்த முன்னெடுப்புக்கள் காணப்பட்டன. கிராமத்தில் உள்ள 15 பெண்கள் சேர்ந்து ஒரு சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிக்கக்கூடியதாக இருந்தது. இப்போது எம்மிடம் குறிப்பிட்ட அளவிலான சேமிப்பு உள்ளது. எனவே இந்தக் காலப்பகுதியில் குறைந்த வட்டியிலான கடன்களை வழங்குவதற்காக இச்சேமிப்பினைப் பயன்படுத்தி பெண்களின் கூட்டின் மூலமாக நாம் ஒரு கடன் முன்னெடுப்பினை ஆரம்பித்தோம். இதுவரையில் இந்த முன்னெடுப்பு சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இதை விஸ்தரிப்பதற்கு நாம் மற்றொரு நடவடிக்கையினைப் பூர்த்தி செய்யப் போகின்றோம்.

**சாதகமான தகவமைத்தல்கள்**

நாம் கஷ்டப்பட்டிருந்த இந்தக் காலப்பகுதியில் வீட்டுத் தோட்டம் அதிகரித்தது. பெருந்தொற்றுக்கு முன்னர் கடந்த வருடம் விவசாயத் திணைக்களத்தினால் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. மேலும், கைவினைப் பொருட்களின் தயாரிப்புப் போன்ற சிறு தொழில்களைப் பலர் ஆரம்பித்துள்ளனர். கிராமத்தவர்கள் பலரும் சில காலமாகச் சேதன விவசாயத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் இரசாயண உரத்தின் மீதான சடுதியான தடை இவர்களைப் பெரிதும் பாதிக்கவில்லை. குறிப்பாக நடுத்தர அளவிலான மற்றும் சிறிய அளவிலான விவசாயிகளைப் பாதிக்கவில்லை. ஆனால் பாரிய அளவில் விவசாயம் செய்யும் விவசாயிகளை இது பாதித்துள்ளது. குறிப்பாக நெல் விவசாயிகளைப் பாதித்துள்ளது.

கிராமத்தவர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள கூட்டு விழிப்புணர்வு இக்காலப்பகுதியில் ஒரு சாதகமான அம்சத்தினை எடுக்க முடியும்.

**கல்வி**

கல்வித் துறை முற்று முழுவதும் வீழ்ச்சியடைந்துள்ளது. எனது மகளின் மூத்த மகன் 7 ஆம் வகுப்பில் கற்கின்றார். இந்த நாட்களில் கல்வி நடவடிக்கைகள் பிரதானமாக ஒன்லைனிலேயே நடத்தப்படுகின்றன. அவர்களிடம் தொலைபேசிகளோ அல்லது ஏனைய வகை உபகரணங்களோ இல்லாதிருக்கின்றன. அதிகமான சந்தர்ப்பங்களில் நான் எனது தொலைபேசியினை அவருக்குக் கொடுக்கின்றேன். ஆனால் நான் அதிகமான சமுதாயப் பணிகளை மேற்கொள்கின்றேன் மேலும் ஒன்லைன் கூட்டங்களையும் நான் நடத்துகின்றேன். இரண்டும் ஒரே நேரத்தில் வருகையில் இது பிரச்சினைக்குரியதாக மாறுகின்றது. எமக்கு இணைய இணைப்புத் தொடர்பான பிரச்சினைகளும் சமிக்ஞைப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. சிலவேளைகளில் சமிக்ஞையினைப் பெறுவதற்காக நாம் நீண்ட தூரம் செல்லவேண்டியிருக்கின்றது. கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள சிரமங்களைத் தீர்ப்பதற்கு உரிய திட்டமோ அல்லது தீர்வோ இல்லாதிருக்கின்றது. கடந்த வருடம் மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட குறிப்புக்களின் பட்டியலையும் குறிப்புக்களையும் அனுப்பிவைப்பதற்கு ஆசிரியர்கள் சில முயற்சிகளை எடுத்தனர். மேலும், வட்ஸ்அப் மூலமாகச் சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கான வேலைகளை அனுப்பி அதனைப் பின்தொடர்ந்துள்ளனர். ஆனால் இதனையும் முறையாகத் தொடர முடியவில்லை. 2020 மார்ச் மாதத்தில் இருந்து மாணவர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்துவருவதுடன் மாணவர்களின் அறிவுக்கும் கற்றலுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இது அடுத்த தலைமுறை மாணவர்களின் மீது மிகவும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். சிலர் தங்களின் கல்வியினைக் கைவிட்டு வேறு தொழில்களை முயற்சித்து வருகின்றனர். ஆனால் சிலர் பல்கலைக்கழகங்களுக்கும் செல்கின்றனர். அவர்களுக்குப் பிரச்சினைகள் இல்லை. அவர்கள் தங்களின் வேலையினை உரிய முறையில் தொடர்கின்றனர்.

**வீட்டு வன்முறை**

வீட்டு வன்முறை என்பது பெருந்தொற்றின் முன்பும் முழுஅடைப்பின் முன்பும் ஒரு பிரச்சினையாக இருந்தாலும் இப்போது இதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சில தற்கொலை முயற்சிகளும் நிகழ்ந்துள்ளன. ஆனால் நாம் கூட்டாக அவற்றினைத் தடுப்பதற்கு

உதவியுள்ளோம். இதேபோல் போதைப்பொருள் பாவனையும் மதுபானப் பாவனையும் அதிகரித்துள்ளன.

**மனநல சுகாதாரம்**

இந்தக் காலகட்டத்தில் இளம் நபர்கள் மனநல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர். குடும்ப சுகாதார அதிகாரிகள் வழிகாட்டல் தேவைப்படும் அனைவருக்கும் உதவி வந்தனர். சில சந்தர்ப்பங்களில் தொல்லைகொடுத்தல் பற்றிய முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாம் அவை பற்றிய தகவல்களைச் சேகரித்து சட்ட உதவியினை அணுகியுள்ளோம்.

**ஏனைய கருத்துக்கள்**

சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்கவேண்டும். அவர்களின் கவனயீனம் மிகவும் ஏமாற்றமளிப்பதாக இருக்கின்றது. குறிப்பாக வறியவர்கள் என்று வருகையில் இந்த நிலை காணப்படுகின்றது. அவர்கள் நகர மக்களைப் பற்றி மட்டுமே கரிசனை கொண்டுள்ளனர். அடிமட்டத்தில் உள்ள யதார்த்தத்தினைப் பற்றி யாரும் அறியாதுள்ளனர். அரசாங்கத்தின் பதிற்செயற்பாடு மிகவும் பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது. தேர்தல் நேரத்தின் போதுதான் அனைவரும் கிராமத்திற்கு வருகின்றனர்.

**நேர்காணல் 07**

**பயிர்ச்செய்கையாளராகவும் நாட்கூலியாகவும் சமுதாயப் பணியாளராகவும் பணியாற்றும் அநுராதபுரம் இபலகமவைச் சேர்ந்த சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்த 52 வயதான பெண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

நான் இபலகம பிரதேசத்தில் சமுதாயப் பணிகளில் ஈடுபட்டுள்ளேன். நான் பிரதேசத்தின் பிரதான பெண்கள் சங்கத்தின் செயலாளராக இருக்கின்றேன். எனது மகள் கடந்த வருடம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். அவரின் தவணை ஆரம்பித்துள்ளது.



*அநுராதபுரத்தில் பெண் விவசாயி ஒருவர்*
*புகைப்படம் : அமில உடகெதர 2021*

கொவிட் பெருந்தொற்று எமது பிரதேசத்தினையும் மக்களையும் மோசமாகப் பாதித்துள்ளது. நான் கிராமத்தில் நாட்கூலியாக வேலை செய்துவந்தேன். ஆனால் இப்போது நான் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளேன். எமது பிரதேசத்தில் உள்ள சிலருக்குத் தொற்று ஏற்பட்டது. அவர்கள் இப்போது முழுமுடக்கத்தில் உள்ளனர். இது சற்றுக் கடினமான நிலைதான்.

இதற்கு முன்னரும் நாம் வாழ்வில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றோம். ஆனால் நாம் இவ்வகையான ஒரு சூழ்நிலையினை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. எம்மைப் பொறுத்த அளவில் தைரியமாக இருப்பது முக்கியமானதாகும். நாம் எமது வாழ்வாதாரத்தில் அதிகமானவற்றினை இழந்துவிட்டோம். நிலவுகின்ற சூழ்நிலை எமது ஆரோக்கியத்திற்கும் நல்லதல்ல அல்லது நாட்டின் பொருளாதாரத்திற்கும் நல்லதல்ல.

**வாழ்வாதாரம்**



*அநுராதபுரத்தில் பெண் விவசாயிகள்*
*புகைப்படம்: அமில உடகெதர 2021*

எமது கிராமத்தில் நாட்கூலிகளாக வேலை செய்பவர்கள் பலர் உள்ளனர். எங்களுக்கு நல்ல காணிகளோ அல்லது சொத்துக்களோ இங்கில்லை. நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவுக்கு அண்மையில் அமைந்திருந்த திருகோணமலை மொறவெவ எனும் எல்லைக் கிராமத்தில் வாழ்ந்தோம். யுத்தத்தின் போது அப்பிரதேசத்தில் வன்முறை அதிகரித்ததால் அரசாங்கம் இபலகமவில் காணிகளை வழங்கியது. இதனால் நாங்கள் 1985 ஆம் ஆண்டில் இங்கே குடியேறினோம். எமக்கெனப் பெரிய வயல் நிலங்கள் இல்லை. நாம் நெல் பயிரிடவேண்டுமாயின் '*And be*' காணிக் குத்தகை முறைமைக்கு அமையவே அதனைச் செய்யவேண்டும். பிரதேசத்தில் உள்ள சிலர் இராணுவத்தில் வேலை செய்கின்றனர். ஆனால் கிராமத்தில் பெரும்பான்மையானவர்கள் நாட்கூலிகளாகவே வேலை செய்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் செய்வதற்கு வேலை இருந்தாலும் யாரும் எமக்கு வேலை தருவதில்லை. தொற்று ஏற்படும் என்ற பயத்தினால் மேசன்மாருக்கும் தச்சன்மாருக்கும் அரிதாகவே தொழில் கிடைக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் மக்களுக்குப் பாரிய வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு எவ்வளவு காலம் செல்லவேண்டும் என எமக்குத் தெரியாது. எம்மில் பலர் வீட்டுத் தோட்டம் செய்வதில் ஈடுபட்டுள்ளதுடன் மரக்கறிகளையும் பழங்களையும் பயிரிடுகின்றனர். முன்பு நாம் மிகையான விளைச்சலை வாராந்தச் சந்தையிலும் ஞாயிறு சந்தையிலும் விற்றுவந்தோம். ஆனால் இப்போது நிலவும் முழுமுடக்கத்தின் போது எம்மால் அதைச் செய்ய முடியவில்லை. நாம் அந்த வருமானத்தினையும் இழந்துவிட்டோம். அதிகமான பயிர்ச்செய்கை சேதனப் பயிர்ச்செய்கையாகவே மேற்கொள்ளப்பட்டது.

**அரசாங்க உதவி**

எமக்கென விசேட உதவி எதுவும் வழங்கப்படவில்லை. எம்மிடம் சொற்பமான சேமிப்பு உள்ளது. அதுதான் உதவியது. பெண்கள் அமைப்புக்கள் எமக்கு உதவியதுடன் ஏனைய உறுப்பினர்களின் மத்தியில் நாம் உணவுப் பொதிகளை விநியோகித்தோம். எமக்குக் கிடைத்த சில நிதியுதவிகளைக் கொண்டு நாம் அவற்றினைக் கொள்வனவு செய்தோம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு உறுப்பினருக்கு மட்டுமே சமுர்த்திக் கொடுப்பனவு கிடைத்தது. சிலர் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு மற்றும் முதியோருக்கான கொடுப்பனவு போன்ற ஏனைய மானியத் திட்டங்களை அணுகினர். சகல பயனாளிகளையும் கொண்ட குடும்பங்களுக்கு ஒரு கொடுப்பனவு மட்டுமே கிடைத்தது..

பெருந்தொற்றின் ஆரம்பத்தில் அரசியல்வாதிகளும் பிரதிநிதிகளும் சில முன்னெடுப்புக்களை எடுத்தனர். உறுப்பினர்களில் ஒருவர் அத்தியாவசியப் பொருட்களின் பொதிகளை விநியோகிப்பதை முன்னெடுத்தார். ஆனால் முதலாவது விநியோகத்தின் பின்னர் எதுவும் நடைபெறவில்லை. மேலும் சில மட்டுப்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. தேவையுள்ள அதிக மக்கள் உள்ளனர் ஆனால் அவர்களுக்குப் பெரிதாக எந்த உதவியும கிடைக்கவில்லை.

**சுகாதாரத் துறை உதவி**

அவர்கள் பெரிதும் உதவினர். குறிப்பாக கிராம மக்களின் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். கிராமத்தில் ஒரு வீட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்வொன்று நடைபெற்றது. அதில் தொற்றுக்குள்ளான நபர் ஒருவர் பங்குபற்றியதால் பெரும் பிரச்சினை ஏற்பட்டது. நான் உள்ளிட்ட ஏனைய பலர் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டோம். ஏனைய 5 குடும்பங்களும் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டன. அனைவரும் உதவினர் - எமது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு சுகாதாரத் துறையும் கிராமசேவை அதிகாரியும் கிராமத்தவர்களும் உதவினார்கள் எமக்கு 10000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களுக்கான பொதி கிடைத்தது.

**தடுப்பூசியேற்றல்**

தடுப்பூசியேற்றல் நன்கு நிர்வகிக்கப்பட்டது. இதன்போது தேவையற்ற அவசரமோ அல்லது வேறு பிரச்சினைகளோ இருக்கவில்லை. ஆரம்பத்தில் சில மக்கள் அதைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர் அவர்களும் தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டனர்.

**கல்வி**

தற்போதைய சூழ்நிலையின் கீழ் மோசமாகப் பாதிக்கப்பட்ட பாரிய பரப்புக்களில் கல்வியும் ஒன்றாகும். எனது மகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானாள். அவளின் வேலைகளில் அதிகமானவை ஒன்லைனிலேயே இடம்பெறுகின்றன. இன்னும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் பல்வேறு

சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஒன்லைன் கல்வி முறை சகலருக்கும் செயற்திறனானது அல்ல. கல்வியினை ஒன்லைனில் தொடர்வதற்கு அவர்களிடம் வசதிகளோ அல்லது சரியான வகை உபகரணங்களோ அல்லது நிதி வளமோ இல்லை. இந்தப் பிரதேசத்தில் இணைய வலையமைப்புக்கான சமிக்ஞை மிகவும் பலவீனமாகக் காணப்படுகின்றது. தொலைபேசியில் கலந்துரையாடலை நடத்தும்போது நீங்களும் அச்சிரமங்களுக்கு முகங்கொடுத்திருப்பீர்கள் என நான் நினைக்கின்றேன். இப்போது கூட நான் சமிக்ஞை சிறந்ததாக இருக்கும் ஓரிடத்திற்கு வந்துள்ளேன். தொலைபேசி அழைப்பினை எடுப்பதற்கு நாங்கள் அனைவரும் இந்த இடத்திற்குத்தான் வருகின்றோம்.




*யாழ்ப்பாணம், நெடுந்தீவில் ஆரம்ப் பாடசாலையில் மகளை விடும் தந்தை*

**தவறான தகவல்கள்**

தடுப்பூசி பற்றிப் பல சந்தேகங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் சுகாதார அதிகாரிகளால் தடுப்பூசியேற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதும் அந்தச் சந்தேகங்கள் தெளிவாக்கப்பட்டன..

**மனநல சுகாதாரம்**

மக்கள் அதிகளவான மனநல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர் என நான் நினைக்கின்றேன். இதற்கான குறிப்பான காரணம் கிராம மக்களில் பலர் அவர்களின் வருமானத்தினை இழந்துள்ளமையாகும். இதன் விளைவாக, அவர்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன் அச்சமுடையவர்களாகவும் உள்ளனர். பொதுவாக, மக்கள் அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தினை இழந்துள்ளதுடன் ஒன்றுகூடுவதற்கான அவகாசம் அவர்களுக்கு இல்லாதிருக்கின்றது. இளைய தலைமுறை வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களுக்கு முகங்கொடுக்கும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளது. அவர்கள் எதிர்காலம் பற்றி மிகவும் சந்தேகம் கொண்டுள்ளனர்.

**சாதகமான தகவமைத்தல்கள்**

ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டம் செய்வதிலும் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு உணவுப் பற்றாக்குறை இல்லை. ஒருவர் மற்றவருக்கு உதவி செய்து மிகையானவற்றினைப் பரிமாறியுள்ளனர். கைவினைகள் மற்றும் கைத்தறி வேலைகள் போன்ற ஏனைய சிறு முன்னெடுப்புக்களும் அதிகரித்துள்ளன. அவர்கள் இவற்றினை முன்பு விற்பனை செய்து வந்தனர். ஆனால் முழுமுடக்கத்தினால் இதற்கான வாய்ப்புக் குறைவடைந்துள்ளது.

**நேர்காணல் 08**

**ஆடைத் தொழிற்சாலை ஊழியராகவும் பயிர்ச்செய்கையாளராகவும் பணியாற்றும் அநுராதபுரம் இபலகமவைச் சேர்ந்த 61 வயதான பெண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

பெருந்தொற்றின் ஆரம்பத்தில் எனது கணவரின் சகோதரனின் மகனுக்குத் தொற்று ஏற்பட்டது. கடற்படையில் பணியாற்றும் அவர் கொழும்பில் வேலை செய்துவந்தார் அவர் அதன் பின்னர் தொற்றுத்தடைகாப்பில் இருந்தார். கொவிட் நோயுடனான எனது முதலாவது நேரடி அனுபவம் அதுவாகும்.

தொற்று ஏற்பட்டவர்களை மக்கள் வித்தியாசமாகப் பார்க்க ஆரம்பித்தமை நான் அவதானித்த ஒரு விடயமாக இருந்தது. அவர்களைப் பார்த்த விதத்தினை மக்கள் மாற்றியிருந்ததுடன் அவர்களுடன் தொடர்பாடுவதற்கு அவர்கள் விரும்பவில்லை. நோயுடன் உறவுகளின் பாங்கும் மாறிவிட்டது. அதிகாரிகளும் அவ்வாறுதான் இருந்தனர்.

**வாழ்வாதாரம்**



*யாழ்ப்பாணம் காரைநகரில் மீனவ சமுதாயம்*

வாழ்க்கை என்பது மிகவும் கடினமானதாக மாறியுள்ளது. அரசாங்கத்திடம் இருந்து எமக்குப் போதிய உதவி கிடைக்கவில்லை. நாம் கடன்கள் எடுத்துள்ளோம். அதன் வட்டி மிக உயர்வாக உள்ளது. அவற்றினை மீளச் செலுத்துவதற்கு நாங்கள் கஷ்டப்படுகின்றோம். எனது மகளின் கணவர் குத்தகைக்கு ஒரு வாகனத்தினை வாங்கியுள்ளார். அதற்கான கட்டணத்தினைச் செலுத்துவதற்கும் நாங்கள் கஷ்டப்படுகின்றோம். ஒரு சிறு வியாபாரத்தினை நடத்துவதற்கே நாங்கள் அதனை வாங்கினோம். ஆனால் குத்தகை செலுத்துவது கடினமானதாக மாறியதால் நாங்கள் அதனை வாடகைக்காக இராணுவத்திற்கு வழங்கியுள்ளோம். எனது மருமகன் நிர்மாண வேலைகள் செய்துவந்தார். ஆனால் பெருந்தொற்றால் அதனைத் தொடர முடியவில்லை. எவ்வாறாயினும் எமது வீட்டுத் தோட்டத்தின் காரணமாக எமது உணவுப் பாதுகாப்பில் எவ்வித பிரச்சினைக்கும் நாம் முகங்கொடுக்கவில்லை.

**அரசாங்க உதவி**

சமுர்த்தி பயனாளர் கொடுப்பனவான 5000 ரூபா எமக்குக் கிடைத்தது. அயலில் கொவிடால் ஒரு மரணம் ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் தொற்றுத்தடைகாப்பின் கீழ் இருந்த குடும்பங்களுக்கு 1000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. எனது கணவரின் சகோதரரின் மகன் தொற்றுத்தடைகாப்பின் கீழ் இருந்ததால் எமக்கு 10000 ரூபா பெறுமதியான பொதிகள் கிடைத்தன. பிராந்தியத்தில் உள்ள சமுர்த்தி அதிகாரிகளும் கிராமசேவை அதிகாரிகளும் உதவியினை நன்கு நிர்வகித்து வழங்கினர்.

அரசியல் பிரதிநிதிகளிடம் (பாராளுமன்ற உறுப்பினர்கள்) இருந்து எவ்விதமான உதவியும் கிடைக்கவில்லை. பிரதேச சபைத் தவிசாளர் மட்டுமே எமக்கு உதவி வழங்கி எம்மைக் கவனித்தார்.

**சட்டமும் ஒழுங்கும்**

மக்களில் அதிகமானவர்கள் அறிவுறுத்தல்களை ஒழுங்காகப் பின்பற்றுவதில்லை. அதிகமான மக்கள் இதைப் பொருட்படுத்துவதில்லை என்பதை நான் காண்கின்றேன். சிரமங்கள் உள்ளன. ஆனால் சகல மக்களும் இதனை ஒரு பொறுப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும். வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அனைவரும் இயைபுறவேண்டும். சிலர் கிராமங்களில் முகக்கவசத்தினைக் கூட அணிவதில்லை. கொவிடால் இருவர் இங்கே இறந்துள்ளனர். ஆனால் அதைப் பற்றி ஒரு பிரச்சினையும் இல்லாதிருக்கின்றது.

**சுகாதாரத் துறை உதவி**

இந்தப் பிரதேசத்தில் சுகாதார அதிகாரிகளிடம் இருந்து சொற்பமான உதவிகளே கிடைக்கின்றன. விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இங்கே இரண்டு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. அந்த வீடுகளில் ஒன்றில் முதலில் இளைய மகளுக்குத் தொற்று ஏற்பட்ட பின்னர் மூத்த மகளுக்குத் தொற்று ஏற்பட்டு அவர் இறந்தார். பின்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வந்து அவர்களைத் தொற்றுதடைகாப்பினில் வைத்தார். தாயை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக 1990 இற்கு அழைப்பு ஏற்படுத்தினோம். அவர் வைத்தியசாலையில் இறந்துவிட்டார். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் உரிய முறையில் பதிலளிக்காத சந்தர்ப்பங்களும் இருந்தன. அண்மையிலுள்ள வைத்தியசாலை கிராமத்தில் இருந்து 4 கிலோ மீற்றர் தூரத்தில் கெக்கிராவயில் உள்ளது. மற்றைய வைத்தியசாலை 6 கிலோ மீற்றர் தூரத்தில் கெக்கிராவயில் உள்ளது.

**இராணுவமயமாக்கம்**

எனது மகன்களில் ஒருவர் இராணுவத்தில் இருக்கின்றார். அவர் கொமாண்டோ படையில் இருக்கின்றார். சுகாதார அதிகாரிகளின் உதவியுடன் சேர்த்து இவர்களின் சேவைகளையும் நாம் மெச்சவேண்டும். இவர்கள் யுத்த காலத்தில் நிறைய தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். இப்போது சுகாதார நெருக்கடியின் போதும் அவ்வாறே செய்கின்றார்கள். இராணுவத்தில் அதிகமானவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக எனது மகன் கூறினார். எனது மகனுக்குத் தொற்று ஏற்பட்ட பின்னர் அவரை

விமர்சித்த சிலருடன் நான் வாதிட்டேன். இந்த சுகாதார நெருக்கடியின் போதும் அவர்கள் மக்களுக்காகச் செய்த முயற்சிகளையும் தியாகங்களையும் நாம் அங்கீகரிக்கின்றோம் என நான் அவரிடம் கூறினேன். மக்களுக்குப் பாதுகாப்பான நாடுதான் தேவை. இது எங்களுக்கும் மிகவும் வேதனையளிப்பதாக உள்ளது.

**தடுப்பூசியேற்றல்**

தடுப்பூசியேற்றல் நடைபெற்று வருகின்றது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். நானும் பெற்றுக்கொண்டேன். கலேவல மற்றும் தங்காலையைச் சேர்ந்த இரண்டு பேர் எமது கிராமத்தில் வசிக்கின்றனர். இவர்களுக்கு அவர்கள் தடுப்பூசி வழங்கவில்லை. கலேவலயைச் சேர்ந்த நபர் சென்று பெற்றுக்கொண்டார். ஆனால் 68 வயதான மற்றைய நபருக்கு அங்கு சென்று அதைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய பெயர்களைத் தேருனர் பட்டியல்களில் உள்ளடக்க வேண்டுமெனவும் முழுமுடக்கத்தின் காரணமாக அதனைச் செய்ய முடியவில்லை எனவும் கிராமசேவை அதிகாரி குறிப்பிட்டார். அவர்களுக்குத் தடுப்பூசியேற்றப்படல் வேண்டும். ஏனெனில் அவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

சிலருக்குத் தடுப்பூசி தொடர்பான சந்தேகங்கள் உள்ளதால் அவற்றினைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

**கல்வி**

10 முதல் 15 பிள்ளைகள் வரை பாடசாலை செல்கின்றனர். வசதியுள்ளவர்கள் தொலைபேசியினை வாங்கி ஒன்லைன் கல்வியினைத் தொடர்கின்றனர். ஆனால் பெரும்பான்மையானவர்களினால் அதனை வாங்க முடியாதுள்ளது. தற்போது பிள்ளைகள் ஒன்லைனில் நடத்தப்படும் மேலதிக வகுப்புக்களில் கலந்துகொள்கின்றனர். அண்மையிலுள்ள கரபாவ பாடசாலையில் ஒன்லைன் முன்னெடுப்பு எதுவும் நடத்தப்படுவதில்லை.

**சுற்றாடல் பிரச்சினைகள்**

எமது கிராமம் வரலாற்றுச் சிறப்புமிக்க விஜிதபுர கோட்டைப் பிரதேசத்திற்கு அண்மையில் உள்ளது. கல்நிதியாய என்றொரு இடம் உள்ளது. இது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும். இந்த இடத்தில் புதையல் தோண்டுவது தொடர்பாகச் சில பிரச்சினைகள் காணப்பட்டன. இதன் பின்னர் தமது காணியில் கழிப்பறைக் குழிகளுக்காகப் பள்ளம் தோண்டினாலும் மக்கள் சந்தேகப்படும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. பெருந்தொற்றுக்கு முன்னரே இந்தப் பிரச்சினை காணப்பட்டது. அண்மையில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் காடழிப்புத் தொடர்பாகக் குறிப்பிட்ட பிரச்சினைகள் எவையுமில்லை. ஏனெனில் கிராமத்தினைச் சுற்றிக் காடுகள் இல்லை. மக்கள் மரம் வெட்டுவதற்கு முன்னர் கிராமசேவை உத்தியோகத்தரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

குப்பைகளைச் சேகரிப்பது தொடர்பாகவும் பிரச்சினைகள் காணப்பட்டன. சில கிராமத்தவர்கள் குப்பைகளை இங்கே போடும் பழக்கத்தினைக் கொண்டிருந்தனர். பின்பு, கழிவுகளில் இருந்து கூட்டுப் பசளை தயாரிப்பதற்கான மற்றும் உரம் தயாரிப்பதற்கான முன்னெடுப்புக்களைப் பிரதேச செயலகம் முன்னெடுத்தது.

**தவறான தகவல்கள்**

கிராமத்தில் நிகழ்ந்த கொவிட் இறப்புக்கள் தொடர்பாகக் கிராமத்தவர்கள் மத்தியில் சில சந்தேகங்களும் தவறான தகவல்களும் காணப்படுகின்றன.



**வீட்டு வன்முறை, போதைப்பொருள் நுகர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள்**

போதைப்பொருள் நுகர்வு தொடர்பாகப் பல பிரச்சினைகள் உள்ளன. இது அதிகரித்துள்ளதுடன் இது ஒரு நீண்ட காலப் பிரச்சினையாக உள்ளது. இதனைப் பொலிசாருக்கு அறிவிப்பதில் எவ்வித பயனும் இல்லை. பொலிஸ் இவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்கின்றது. கிராமத்தில் சட்டவிரோதமாக வடிக்கப்பட்ட மதுபானம்

கிடைக்கின்றது. அவர்கள் குடித்துவிட்டு வந்து குடும்பங்களில் உள்ள ஏனையோருடன் சண்டையிடுகின்றனர்.

**சாதகமான தகவமைத்தல்கள்**

வீட்டுத் தோட்டத்திலும் சேதனப் பயிர்ச்செய்கையிலும் ஏற்பட்ட அதிகரிப்புச் சாதகமானதாக இருக்கின்றது. நானும் அதில் ஈடுபட்டுள்ளேன். நாங்கள் சில பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றோம். ஆனால் நாம் அதனைத் தொடர்கின்றோம்.

சவிஸ்திரி மூலமாக நாம் சமுதாயப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் அதைச் செய்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். அதிகமான சந்தர்ப்பங்களில் நாம் அதனை ஒன்லைனில் செய்கின்றோம்.

**ஏனைய கருத்துக்கள்**

பொருளாதாரச் சூழ்நிலை பல சிரமங்களை உருவாக்கியுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு, சீனி, பால் மற்றும் ஏனைய பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இவற்றினை உள்நாட்டில் உற்பத்தி செய்வதில் நாம் கவனம் குவிக்கவேண்டும்.

**நேர்காணல் 09**

**மாத்தறை, தெனியாயவில் வசிக்கும் மலையகச் சமுதாயத்தினைச் சேர்ந்த 24 வயது ஆண் ஒருவருடனான நேர்காணல். இவர் தொழில் தேடிக்கொண்டிருக்கின்றார்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

வயது வித்தியாசமின்றி அனைவரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். நான் முன்பு வேலை செய்துவந்தேன். ஆனால் என்னால் அதைத் தொடர முடியவில்லை. கல்வியினைத் தொடர்ந்திருக்க வேண்டிய என் வயதை ஒத்த இளம் நபர்களால் தற்போதைய சூழ்நிலையில் எதனையும் தொடங்க முடியவில்லை. இளம் நபர்கள் வித்தியாசமான முயற்சிகளைச் செய்து பார்க்கவேண்டிய வயது இதுதான். ஆனால் இதற்குப் பல தடைகள் காணப்படுவதுடன் எமது நேரம் வீணாக்கப்படுகின்றது.

வானொலி ஊடகத்துறையில் தொழில்புரிவது எனது கனவாக இருக்கின்றது. இதற்கு நான் கொழும்புக்குச் சென்று எனது தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏதாவது உழைக்கவேண்டும். முன்னர் நான் எனது தொழில் மூலம் உழைத்து அதற்காகச் சேமித்தும் வந்தேன். ஆனால் இப்போது என்னால் அதைச் செய்ய முடியாதுள்ளது. ஏனைய வருமான மூலங்கள் இல்லாதிருக்கின்றது.

**வாழ்வாதாரம்**



*ஹப்புத்தளையில் உள்ள தோட்டத்தில் பறித்த தேயிலைக் கொழுந்துடன் ஒரு தொழிலாளி 2017*

மக்களில் அதிகமானவர்கள் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்கின்றனர். அவர்கள் தேயிலைத் தோட்டத்தின் சகல அம்சங்களிலும் சம்பந்தப்பட்டுள்ளனர் - கொழுந்து பறித்தல், போக்குவரத்து, நிர்வாகம். மக்களில் 90% ஆனோரின் வாழ்வாதாரம் தேயிலையில் இருந்து வருகின்றது. எனது வீட்டில் எனது தாய், தந்தை, மாமாக்கள் நாட்கூலிகளாக இருக்கின்றனர். இவ்வாறுதான் நாங்கள் எம் வாழ்வினையும் தேவைகளையும் முகாமைத்துவம் செய்கின்றோம். இதன் அடிப்படையில், நாம் எமது நாளாந்த வருமானத்தினை இழக்கின்ற ஒவ்வொரு நாளும் அது முழுக் குடும்பத்தினையும் பாதிக்கின்றது. எனது பாட்டனும் பாட்டியும் மிகவும் வயது முதிர்ந்தவர்கள். அவர்களுக்கு மருந்து தேவை. அவற்றினை முகாமைத்துவம் செய்வதில் நாம் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றோம்.

ஏனைய சில குடும்பங்களில் இளம் பிள்ளைகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். ஏனெனில் ஏனையோர் வயது முதிர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களினால் எதையும் செய்ய முடியாதுள்ளது. அவர்களைப் பார்த்துக்கொள்ள யாருமில்லை. இளம் நபர்கள் குறைந்தது எதையாவது முயற்சி செய்துகொண்டுதான் இருக்கின்றனர்.

**தொற்றுக்களும் இறப்புக்களும்**

கொவிட் தொடர்பான இறப்புக்கள் அறிக்கையிடப்படவில்லை. ஆனால் சிலருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களையும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களையும் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்த வேண்டியிருந்தது. பெருந்தோட்டத் துறையில் அதிகமானவர்கள் லைன் வீடுகளிலேயே வாழ்கின்றனர் (சிறிய தோட்ட வீடுகள்). இந்த வீடுகள் நெருக்கமாகக் குறிப்பிட்ட இடத்தினுள் சிறிய அறைகளைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன. நவகமுவ என்று ஓர் இடம் இருக்கின்றது - இந்த இடத்தில் மட்டுமே வீடுகளுக்கு இடையில் போதிய இடைவெளி காணப்படுகின்றது. ஏனைய இடங்களில் ஒவ்வொரு வீட்டுக்கும் இடையில் 10 அடி இடைவெளி கூட இல்லை. இவ்வாறான சூழ்நிலையில், எமது பக்கத்து வீட்டில் ஒருவர் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டால் நாங்களும் ஓரிடத்திற்கும் போகக் கூடாது. இப்போது 9 வீடுகள் தொற்றுத்தடைகாப்புக்கு உட்பட்டுள்ளன. நான் பகுதி நேர அடிப்படையில் அச்சகம் ஒன்றில் வேலை செய்தேன். எனவே இந்த 9 வீடுகளும் தொற்றுத்தடைகாப்புக்கு உட்பட்ட போது என்னாலும் வேலைக்குச் செல்ல முடியவில்லை. வேறு பலரும் இந்தச் சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்து அவர்களின் வருமானத்தினை இழந்துள்ளனர்.

**அரசாங்க உதவி**

2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நாங்கள் முழுமுடக்கத்தின் கீழ் இருந்தபோது அரசாங்கம் 5000 ரூபா கொடுப்பனவினை விநியோகித்தது. அது நன்கு நிர்வகிக்கப்பட்டது. தேயிலைத் தோட்டங்களின் மேற்பார்வையாளர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் உள்ளிட்ட ஏனைய பலர் எமக்கு உதவினர். எனக்குத் தெரிந்தவாறு, மக்களில் 95% ஆனோருக்கு இந்த உதவி கிடைத்துள்ளது. எனது பாட்டனாருக்கு 2000 ரூபா கொடுப்பனவு கிடைத்தது. ஆனால் எனது வீட்டுக்கு இரண்டு வீடுகள் தள்ளி இருக்கும் மற்றொரு பாட்டனாருக்கு அது கிடைக்கவில்லை. நான் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் குறிப்பிட்ட விதத்திலேயே தாம் வகைப்படுத்துவதாகவும் அதற்கமைவாகவே தாம் அதை நிர்வகிப்பதாகவும் குறிப்பிட்டனர். ஆனால் எனக்கு அந்த விடயம் தெளிவற்றதாக உள்ளது. எமது பிரதேசத்தில் தமிழ்ச் சமுதாயத்தினருக்குச் சமுர்த்தி கிடைக்கவில்லை. நாம் முயற்சித்தோம். ஆனால் எமக்கு அது கிடைக்கவில்லை.

**சட்டமும் ஒழுங்கும்**

அதிகமான மக்கள் விதிகளைப் பின்பற்றுகின்றனர். ஆனால் குறிப்பாக இளம் நபர்கள் வெளியே செல்கின்றனர். நாம் கிராமத்திற்கு வெளியே உள்ளவர்களிடம் இருந்து பல உதவிகளைப் பெற்றுள்ளோம். ஆசிரியர்கள், அதிபர்கள், சில அரசியல் பிரதிநிதிகள் மற்றும் நண்பர்கள் போன்றவர்கள் அவர்களால் இயலுமான அளவு எங்களுக்கு உதவினர். தொற்றுத்தடைகாப்பு விதிகளை மீறிய பிரச்சினை எதுவும் இருக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைச் சேகரித்து வீட்டில் தங்கிவிட்டனர். ஆனால் முகமூடி அணிவதும் தொற்றுநீக்கியினைப் பயன்படுத்துவதும் உரிய முறையில் பின்பற்றப்படவில்லை. பொறுப்பினை ஏற்காமல் முகக்கவசம் அணியாத பலரை நான் கண்டேன்.

**சுகாதாரத் துறை உதவி**

எனது கிராமத்தில் அவர்கள் எமக்கு நன்கு உதவினர். அவர்கள் அனைவரும் கடப்பாடு கொண்டிருந்தனர். யாராவது தொற்றுத்தடைகாப்புக்கு உட்பட்டால் அவர்கள் இரண்டு நாட்களுக்கொரு தடவை வந்து அவர்களின் நிலைமையினைப் பரிசீலித்தனர். அவர்களின் உதவியினை நாம் மெச்சுகின்றோம். எனது கிராமத்தில் அவர்கள் எனக்கு நன்கு உதவினார்கள். ஆனால் தெனியாயவில் உள்ள ஏனைய பிரதேசங்களைப் பற்றி எனக்கு அவ்வளவு தெரியாது. எவ்வாறாயினும், சமூக ஊடகத்தின் மூலமாக மக்கள் அவர்களை மெச்சியுள்ளதை நான் பார்த்துள்ளேன்.

**தடுப்பூசியேற்றல்**

அதிகாரிகள் தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டதினை அறிவித்து சினோபாம் வழங்கினர். முதலில் அவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கினர். அவர்கள் விசேட வேண்டுகோளின் பேரில் தெனியாயயில் உள்ள தொழிற்சங்க உறுப்பினர்களுக்குத் தடுப்பூசியினை வழங்கினர். எனக்கு 24 வயது. தொழிற்சங்கம் மூலமாக நான் வேண்டுகோள் விடுத்தேன். எனக்கும் இரண்டு தடுப்பூசிகளும் வழங்கப்பட்டன. செயன்முறைக்குப் பிரதேச செயலாளரும் உதவி வழங்கினார். குறிப்பிட்ட எந்தப் பிரச்சினை பற்றியும் முறைப்பாடு செய்யப்படவில்லை. சிலர் தடுப்பூசியேற்ற மறுத்துவிட்டனர். ஆனால் பின்பு சமுதாயத்தினர் வழிகாட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தியதும் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டனர்.



*ஹம்பாந்தோட்டை, சூரியவேவயில் முகக்கவம் அணிந்த பிள்ளை*

**கல்வி**

கல்வியின் மீது கொவிட் பெருந் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் கல்வியின் தரம் பூச்சியமாகியுள்ளது. எனது இளைய சகோதரன் 5 ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்றார். அவர் ஒன்லைன் வகுப்புக்களில் கலந்துகொள்ள வேண்டும். ஆனால் இது செயற்திறன் மிக்கதல்ல. இது வகுப்பறையில் கற்பது போன்றதல்ல. ஒன்லைன் வகுப்புக்களுக்கு ஒதுக்கப்படும் நேரம் மாணவர்களுக்குப் பாடங்களைப் புரிய வைப்பதற்குப் போதாததாக இருக்கின்றது. ஒன்லைன் முறை எனது சகோதரருக்கு விரக்தியினை ஏற்படுத்தியுள்ளது. நாம் பிள்ளைகளை பலவந்தப்படுத்த முடியாது. அவர்களுக்குக் கற்பிப்பதற்கு அல்லது குடும்பம் அவர்களுக்கு உதவுவதற்கு மிகச் சொற்பமான வழிகளே உள்ளன. அதிகமான மாணவர்கள் அவர்களின் அடிப்படைக் கல்வியினை மறந்துவிட்டனர். அவர்களுக்கு வகுப்புக்கள் இல்லை, செய்திப் பத்திரிகைகள் இல்லை, அவர்கள் பரீட்சைக்குப் படிக்க விருப்பமின்றி இருக்கின்றனர். அதிகமான மாணவர்களிடம் தொலைபேசிகளோ அல்லது ஏனைய வசதிகளோ இருக்கவில்லை. முன்பு நான் எனது தொலைபேசியினை எனது சகோதரனிடம் படிப்பதற்காகக் கொடுப்பேன். ஏனைய சில மாணவர்களும் அவருடன் இணைந்துகொள்வார்கள். ஏனெனில் அவர்களிடம் வசதிகளும் உபகரணங்களும் இருக்கவில்லை. தேவையான உபகரணங்களையும் தரவுகளையும் பெறுவதற்கு அவர்கள் அதிகமான பணத்தினைச் செலவழிக்க வேண்டியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆசிரியர்கள் கற்கைக் குறிப்புக்களையும் பரீட்சை வினாத்தாள்களையும் மாணவர்களிடம் விநியோகித்து வந்தனர். ஆனால் தற்போது ஆசிரியர்களின் பணி நிறுத்தத்தின் காரணமாக இது நடக்காதிருக்கின்றது.

**தவறான தகவல்கள்**

தொற்று ஏற்பட்டவர்கள் தொடர்பாகவும் ஏனையவர்களுக்கு தொற்று ஏற்படுத்தாதவர்கள் தொடர்பாகவும் தொற்று ஏற்படாதவர்கள் தொடர்பாகவும் அதிகமான வதந்திகள் உலாவந்தன.



*பெருந்தொற்றின் போது ஊடகம்*

**மனநல சுகாதாரம்**

மக்களில் பலர் தோல்வியடைந்த மனப்பாங்குடன் வாழ்ந்து வருகின்றனர். இளைஞர்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நானும் பல விடயங்களை முயற்சி செய்துவந்தேன். ஆனால் என்னால் எதையும் செய்ய முடியவில்லை. இவ்வாறுதான் பல இளைஞர்கள் உணர்கின்றனர். என்ன நடக்கின்றது என்பதைச் சிறுவர்களால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. அவர்கள் வாழ்வின் விளையாட்டுத்தனமான அறிந்துகொள்ளும் ஆர்வம் தொடர்பான அம்சங்களை இழந்துள்ளனர். எனது இளைய சகோதரனும் அவ்வாறுதான் இருக்கின்றார். அவன் வீட்டிலேயே முடங்கியிருப்பதால் அவனால் நண்பர்களுடன் விளையாட முடியவில்லை. அவர்கள் தங்களின் வயதில் எது முக்கியமானதோ அதைச் செய்வதன் மூலம் கற்றுக்கொள்வதற்கான நேரத்தினையும் அவகாசத்தினையும் இழந்துள்ளனர் என நான் நினைக்கின்றேன். இது அவர்களின் வாழ்வில் ஒரு பெரிய இடைவெளியினையும் வெற்றிடத்தினையும் உருவாக்கும் என நான் நினைக்கின்றேன்.

அவர்களின் இந்த வாழ்க்கை அம்சத்திற்கு யாரும் உதவி செய்யவில்லை. சிறு ஆற்றுப்படுத்தல் மூலம் அவர்களுக்கு நன்மை கிடைத்திருக்கும். எமக்கு அதிக உதவிகள் கிடைத்தன. ஆனால் இந்த அம்சங்கள் தொடர்பாக அல்ல. மேலும், உதவக்கூடிய மக்களும் அவர்களுக்குப் பல விதமான பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால்

உதவ முடியாதிருக்கின்றனர். பலரும் சமூக ஊடகங்களான முகப்புத்தகத்திற்கும் வட்ஸ்அப்புக்கும் அடிமையாகியுள்ளனர். அவர்கள் தங்களின் மொபைல் தொலைபேசியினை இரவும் பகலும் பயன்படுத்துகின்றனர். அவர்கள் எப்போது பற்றரியினைச் சார்ஜ் செய்வது என்பது கூடத் தெரியாதிருக்கின்றனர். அவர்கள் தேயிலைத் தொழிற்சாலையில் வேலைக்குச் சென்று உழைத்து விலையுயர்ந்த தொலைபேசிகளை வாங்கியுள்ளனர். கஷ்டப்பட்டு உழைத்த பணத்தினைப் பயனற்ற விடயங்களில் பயன்படுத்திவருகின்றனர். அவர்களின் இளமைக்காலம் என்று வரும்போது இது மிகவும் அதிருப்தியினை ஏற்படுத்துகின்றது.

**வீட்டு வன்முறை, போதைப்பொருள் நுகர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள்**

சில பிரச்சினைகள் இருக்கின்றன. இளம் தலைமுறையினர் மதுபானத்திற்கு அடிமையாகியுள்ளனர். வயது குறைந்த சில சிறு பிள்ளைகள் கூட மதுபானம் அருந்துவதற்கும் பீடி குடிப்பதற்கும் ஆரம்பித்துள்ளனர்.

இளைஞர்களிலும் சிறுபிள்ளைகளிலும் பெரும்பான்மையானவர்கள் தொலைபேசிகளுக்கும் மொபைல் கேம்சுக்கும் அடிமையாகியுள்ளனர். சில வேளைகளில் நான் யாரையாவது அழைத்தால் அது அவர்களின் காதுகளில் விழுவதில்லை. அவர்கள் வேறு ஓர் உலகில் இருக்கின்றனர். அவர்கள் யதார்த்தத்தில் இருந்து மிகவும் தூரமாகி இருக்கின்றனர். இது ஒரு பிரச்சினையாக மாறி வருகின்றது. அவர்கள் நல்ல விடயத்தினைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. அவர்களுக்குப் பாடாசலைக்குச் செல்ல முடியாதிருப்பதும் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. அவர்களுக்கு நண்பர்களும் இல்லாததால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**சாதகமான தகவமைத்தல்கள்**

கூட்டுப் பசளைத் தயாரிப்பு மற்றும் வீட்டுத் தோட்டம் பற்றிய சில முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மழையின் காரணமாகவும் காலநிலை மாற்றத்தின் காரணமாகவும் சிலரால் அதனைத் தொடர முடியவில்லை. நான் பொழுதுபோக்கிற்காக புறாக்களும் மீனும் வளர்த்தேன். ஆனால் இப்போது ஏதாவது மேலதிக வருமானம் வரும் வழியினையே நாம் முன்னெடுக்க முயற்சிக்கின்றோம்.

**இராணுவமயமாக்கம்**

கொவிட் நிலைமையினைக் கட்டுப்படுத்துவது எம் அனைவரினதும் பொறுப்பாகும். நாம் இப்போது முழுமுடக்கத்தில் இருக்கின்றோம். ஆனால் யாருமே எதையும் உரிய முறையில் பின்தொடர்வதில்லை. நான் இப்போது தெனியாய நகரத்திற்குச் சென்றால், மக்களில் பலர் சுற்றித் திரிவதையே காண்கின்றேன். மக்கள் விதிகளைப் பின்பற்றவேண்டும் என்பதுடன் சுகாதார அதிகாரிகளின் மூலமாகவும் பாதுகாப்பு அதிகாரிகளின் மூலமாகவும் அதனை நிர்வகிப்பதற்குச் சிறந்த பொறிமுறை இருக்கவேண்டும். யார் இதற்குப் பொறுப்பு மற்றும் யார் இதனை நிறைவேற்றாதிருக்கின்றனர் என்பது எனக்குத் தெரியாது.

சூழ்நிலையினை நாம் விரைவில் மாற்றவேண்டுமாயின், நாம் கூட்டாக அதனை நிறைவேற்ற வேண்டும். ஆனால் இது நடக்கவில்லை. அண்மையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓர் அறிக்கையினை வெளியிட்டிருந்ததை நான் கண்டேன். ஆதில் கொவிட் பெருந்தொற்று சுகாதார அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விடயம் என்றும் அது இராணுவத் தளபதியின் விடயம் அல்ல என்றும் குறிப்பிட்டிருந்தார். அது உண்மை. இதில் கேள்வி என்னவென்றால், சுகாதார நெருக்கடியினைக் கட்டுப்படுத்துவதற்குப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் போதிய அறிவு இருக்கின்றதா என்பதேயாகும்.

**ஏனைய கருத்துக்கள்**

மன விரக்திக்குள்ளாகி தோல்வியடைந்த மனநிலைக்கு ஆளாகியிருக்கும் மக்களை, குறிப்பாக இளம் நபர்களை ஆற்றுவதற்கு ஒரு மாற்று உபாயமார்க்கம் வழங்கப்பட்டிருந்தால் அது சிறந்ததாக இருக்கும். இது மிக முக்கியமானதாக இருக்கும். மேலும், இளம் தலைமுறையினருக்குச் சிறந்த வழிகாட்டலும் தேவைப்படுகின்றது.

**நேர்காணல் 10**

**தெனியாய, மாத்தறையில் பிராந்திய விவசாய அமைப்பில் கள உத்தியோகத்தராகப் பணியாற்றும் 24 வயதுடைய சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்த பெண் ஒருவருடனான நேர்காணல். இவர் ஒரு மாணவியுமாவார்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

பெருந்தொற்றுக்கு முன்னர் நான் எனது கல்வியில் கவனம் செலுத்தி வந்தேன். ஆனால் இந்தச் சூழ்நிலை பல கஷ்டங்களை உருவாக்கியுள்ளது. எனது கிராமப் பிரதேசத்தில் வாழும் பல உத்தியோகத்தர்களினதும் நிலை இதுதான். நான் பாடசாலைக் கல்வியினை முடித்துவிட்டு விவசாயத்தில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றேன். பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்கும் அதேவேளை நான் ஒன்லைனில் மேலதிக கற்கைநெறி ஒன்றினையும் பயின்று வருகின்றேன். எனது வீடு அமைந்துள்ள பிரதேசத்தில் இணைய இணைப்பு இல்லாதிருக்கின்றது. சில வேளைகளில் நான் வேறு ஒரு வீட்டுக்குச் சென்று எனது உறவினர்களுடன் தங்கவேண்டியுள்ளது.

**வாழ்வாதாரம்**

இங்குள்ள மக்களில் அதிகமானவர்கள் தேயிலைத் தோட்டங்களிலும் தேயிலைத் தொழிற்சாலைகளிலும் வேலைசெய்கின்றனர். ஆனால் அவர்களில் பலரால் நாளாந்தம் வேலைக்குச் செல்ல முடியாதிருக்கின்றது. அந்தத் தொழிற்சாலைகளில் உள்ள நிர்வாகம் அதிக தொழிலாளர்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பதற்காக முறைமாற்று வேலையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது தொழிலாளர்களின் சம்பளத்தினைக் குறைத்துள்ளது. இந்த மக்கள் அவர்களின் நாளாந்த வேலைக்குப் பொருத்தமான சம்பளத்தினைப் பெற்றுவந்தனர். ஆனால் இப்போது இவர்கள் தொழிற்சாலையில் வேலை செய்யும் மணித்தியாலங்களுக்கான சம்பளத்தினை மட்டுமே பெறுகின்றனர்.

பெருந்தோட்டத் துறையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தேயிலைத் தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களில் அதிகமானவர்கள் மிக நெருக்கமாக அமைந்துள்ள லைன் வீடுகளிலேயே வாழ்கின்றனர். இது வைரஸ் தொற்றினை உருவாக்கியுள்ளது. தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்பட்டதுடன் பல மக்கள் இறந்துள்ளனர். இவர்களுக்கான துப்பரவேற்பாட்டு வசதிகளும் வரையறுக்கப்பட்டதாக இருப்பதுடன் ஒரு தொகுதி லைன் அறைகளுக்கு ஒரு கிணறே இருக்கின்றது.

முடிதிருத்தும் நிலையங்களையும் உணவுக் கடைகளையும் நடத்தி வருமானம் ஈட்டியவர்களும் அவர்களின் நாளாந்த வருமானத்தினை இழந்துள்ளனர். உதாரணமாக, இப்பிரதேசத்தில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தினைச் சேர்ந்த பலர் முடிதிருத்தும் நிலையங்களையும் அழகுச்சிகிச்சை நிலையங்களையும் நடத்திவந்தனர். ஆனால் கட்டுப்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்களால் தங்களின் தொழில்களைத் தொடர முடியாதுள்ளது. மேலும் தொற்று ஏற்படும் என்ற அச்சத்தினால் மக்கள் இவ்வாறான இடங்களுக்குச் செல்லப் பயப்படுகின்றனர்.

**அரசாங்க உதவி**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவினைக் கிராமத்தவர்களில் பலரும் பெற்றுக்கொண்டனர். மேலும், கடந்த மே மாதம் வரையில், தொற்றுத் தடைகாப்பில் இருந்தவர்களுக்கு 10000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஆனால் பிறகு தொற்றுத்தடைகாப்பில் இருந்த மக்களுக்கு இந்த உதவி வழங்கப்படவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் முழுமுடக்கத்தின் போது எமது கிராமத்தில் ஒரே ஒரு நபருக்கு மட்டும் 2000 ரூபா வழங்கப்பட்டது. பிரதேசத்தில் சொற்பமான சமுர்த்திப் பயனாளர்களே உள்ளனர்.

பெருந்தொற்றின் ஆரம்பக் கட்டத்தின் போது தொற்றுநீக்கிகளையும் முகக்கவசங்களையும் வழங்குவதற்கு அரசியல்வாதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டனர். தொற்றுத்தடைகாப்பில் இருக்கவேண்டியவர்களுக்கு உதவும் சில முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. இவற்றினைத் தவிர பெரிதாக எதுவும் நடக்கவில்லை.

**சுகாதாரத் துறை உதவி**

இந்தப் பிரதேசத்தில் முதலாவது தொற்றாளர் பற்றி 2021 பெப்ரவரியில் அறிக்கையிடப்பட்டது. அவ்வப்போது எழுமாறான தொற்றுக்கள் பற்றி அறிக்கையிடப்பட்டன. ஆனால் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் பின்னர் தொற்றுக்களில் அதிகரிப்பு ஏற்பட்டது. தெனியாயவில் கொவிடினால் வயது முதிர்ந்த ஒருவர் இறந்தார். நேற்று 24 வயதுடைய நபர் ஒருவர் இறந்தார். சுகாதார அதிகாரிகள் மக்களுக்கு நன்கு உதவினர். முன்பு பிரதேசத்தில் ஒரு தொற்றாளர் அடையாளம் காணப்பட்டால் அவருடன் நெருங்கிய

தொடர்பினைக் கொண்டிருந்த அனைவருக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அண்டிஜென் பரிசோதனையினையும் பிசிஆர் பரிசோதனையினையும் மேற்கொள்வார். தொற்றுத்தடைகாப்பில் இருந்தவர்களுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வழிகாட்டலும் விழிப்புணர்வும் வழங்கித் தொடர்ச்சியாக அவதானித்துவந்தனர். இப்போது வீட்டில் தொற்றுத்தடைகாப்பில் இருப்பது ஊக்குவிக்கப்படுகின்றது. ஆனால் நெரிசல் காரணமாகவும் வசதிகள் இல்லாத காரணத்தினாலும் இது பெருந்தோட்டத் துறையில் வாழும் அயலாண்மையில் சற்றுக் கடினமானதாகும்.

### தடுப்பூசியேற்றல்

ஏப்ரில் மற்றும் மே மாதங்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசியேற்ற ஆரம்பித்தார்கள். ஜூன் மாதத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசியேற்ற ஆரம்பித்தார்கள். எனக்கு 24 வயது. ஆனால் எனது வேலைத்தளத்தினால் விடுக்கப்பட்ட விசேட வேண்டுகோளை அடுத்து எனக்குப் பூரணமாகத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. அவர்கள் இதனைச் சிறந்த முறையில் மேற்கொண்டனர்.

### சட்டமும் ஒழுங்கும்

பெருந்தொற்றின் முதற் கட்டத்தில் மக்களில் அதிகமானவர்கள் தொற்றுத்தடைகாப்பு ஒழுங்குவிதிகளை முறையாகப் பின்பற்றினர். ஆனால் அதன் பின்னர் யாரும் அது பற்றிக் கவனம் எடுக்கவில்லை. நகரப் பிரதேசத்தில் பொலிசாரும் ஏனைய பாதுகாப்பு அதிகாரிகளும் சூழ்நிலையினைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்கு இருக்கின்றனர். ஆனால் கிராமப் பிரதேசங்களில் பரிசீலிப்பதற்கு யாரும் இல்லை. மக்கள் தொற்றுத்தடைகாப்பு விதிகளுக்கு இயைபுறவில்லை. கடை ஒன்று முன்பக்கமாக மூடியிருந்தாலும் பின் கதவு வழியாகப் பொருட்களை விற்பதற்கு வழி இருந்தது. மக்களுக்கு வீடுகளில் சலிப்புத்தட்டிய காரணத்தினால் இவ்வாறான இடங்களில் அவர்கள் கூட ஆரம்பித்தனர். அவர்கள் தேனீர் அருந்தி ஊர் வம்பளக்க ஆரம்பித்தனர். எனக்குத் தெரிந்தவரை தொற்றுத்தடைகாப்பு விதிகளை அமுல்படுத்துவதில் பாதுகாப்பு அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை.

### கல்வி

ஒன்லைன் கல்வி தொடர்பாகப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இம்மக்களின் பொருளாதார நிலைமைகள் காரணமாக மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு அண்ட்ரொய்ட் தொலைபேசி வாங்குவது கஷ்டமானதாக இருக்கின்றது. கட்டணங்களைச் செலுத்தாதவர்களுக்கு ஒன்லைன் வகுப்புக்களை அணுக முடியாதுள்ளது. அவர்கள் கட்டணம் செலுத்தாவிட்டால் அவர்கள் வங்கிக்குச் சென்று கட்டணம் செலுத்தவேண்டும். ஆனால் முழுமுடக்கத்தின் காரணமாக இது கடினமானதாக இருக்கின்றது. ஒன்லைன் கொடுப்பனவுக்கான வசதி அவர்களிடம் இல்லாதிருக்கின்றது. அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்த வசதி பற்றி அறியாதிருக்கின்றனர். ஆசிரியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இப்போது எதுவும் நடப்பதில்லை. சில பிரதேசங்களில் பாடங்களை வட்ஸ்அப் மூலமாக அல்லது அச்சடித்து மாணவர்கள் கற்பதற்கு வழிகாட்டுவதற்காக ஆசிரியர்களும் பாடசாலைகளும் அனுப்ப ஆரம்பித்துள்ளமை பற்றி நான் கேள்விபட்டேன். ஆனால் அவ்வாறான ஒரு முன்னெடுப்பு எனக்குத் தெரிந்தவரையில் இங்கே நடைபெறவில்லை. முன்பு ஒன்லைன் மூலம் கற்க வசதியற்ற மாணவர்களுக்கு உதவி வழங்குவதற்கான ஒரு முன்னெடுப்பு இருந்தது. வீட்டில் இருந்து தமது கல்வியைத் தொடர்வதற்குத் தேவைப்படும் கற்றல் குறிப்புக்களை இந்த மாணவர்கள் அண்மையிலுள்ள பாடசாலைக்குச் சென்று சேகரிக்க முடியும். ஆனால் இது இரண்டு நாட்கள் மட்டுமே நடைபெற்றது.

### வீட்டு வன்முறை, போதைப்பொருள் நுகர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள்

இளம் நபர்களின் மத்தியில் மதுபானப் பாவனையும் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துள்ளமையினை நான் அவதானித்துள்ளேன். முழுமுடக்கத்தின் போது கிராமத்தில் மதுபானம் விற்பனை செய்யும் கடைகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் இவை அதிகரித்துள்ளன. பாடசாலையை விட்டு விலகியவர்களில் அதிகமானவர்களும் இளம் நபர்களும் இதற்கு அடிமையாகியுள்ளனர்.

### சாதகமான தகவலமைத்தல்கள்

வீட்டுத் தோட்டம் அதிகரித்து மேம்பட்டுள்ளது. மேலும், கூட்டுப் பசளை உற்பத்தியும் சேதனப் பசளை உற்பத்தியும் அதிகரித்துள்ளன. சடுதியான உரத் தடை மூலம் அரசாங்கமும் இதற்கு உதவி வழங்கிவருகின்றது. சில இளம் நபர்கள் அலங்கார மீன் வளர்ப்புப் போன்ற சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

## நேர்காணல் 11

**பதுளை மாவட்டத்தில் பண்டாரவளையில் வசிக்கும் சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்த 34 வயதான ஆண் ஒருவருடனான நேர்காணல். இவர் தற்போது கொழும்பில் உள்ள தனியார் கம்பனி ஒன்றில் பௌதிகவள முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். இதனால் இவர் அதிகமான சந்தர்ப்பங்களில் தனது சொந்த ஊரில் வசிக்காது தொழில் நிமித்தம் தலைநகர் கொழும்பிலேயே வாழ்கின்றார்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

நான் ஹோமகமவில் உள்ள தனியார் கம்பனி ஒன்றில் பௌதிகவள முகாமையாளராகப் பணியாற்றுகின்றேன். பெருந்தொற்று ஏற்பட்டதும் எமக்குப் பல சிரமங்கள் ஏற்பட்டதுடன் எமது வியாபாரத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டது. எமது கிரமமான விற்பனைகள் உள்நாட்டுச் சந்தையினை அடிப்படையாகக் கொண்டவை என்பதுடன் நாங்கள் சர்வதேச வர்த்தகத்தினையும் முன்னெடுத்து வந்தோம். உலகளாவிய இந்த நெருக்கடியின் காரணமாக எமது ஏற்றுமதிகள் முழுவதுமாக ஸ்தம்பித்துவிட்டன. இதன் காரணமாகக் கம்பனி இப்போது வரையறுக்கப்பட்ட இயக்கத்தினையே கொண்டுள்ளது.

**வாழ்வாதாரம்**




*பொத்துவிலில் மீனவ சமுதாயம்*
*புகைப்படம்: சதுரங்க பிரதீப் 2021*

சூழ்நிலை முற்றுமுழுவதும் எதிர்பாராத ஒன்று என்பதுடன் 2020 மார்ச் மாத முதலாவது முழுஅடைப்புடன் விடயங்கள் சடுதியாக மாறிவிட்டன. அதற்கு முன்னர் நான் கொழும்பில் வாடகைக்குத் தங்கியிருந்தே வேலை செய்துவந்தேன். அதற்கு நான் அதிகம் செலவழிக்க வேண்டியிருந்தது. எனக்கெனப் பெரிதாகச் சேமிப்பு எதுவும் இருக்கவில்லை. நான் வாடகைக்கு இருந்த இடத்திற்கு வைப்பாகவும் முற்கொடுப்பனவாகவும் 75000 ரூபா கொடுத்துவைத்திருந்தேன். முதலாவது முழுமுடக்கத்தின் போது எனது வேலைத்தளம் மூடப்பட்டு நான் எனது சொந்த ஊரான பண்டாரவளைக்குச் சென்றுவிட்டேன். அக்காலப்பகுதியில் எனது வாடகை வீட்டின் உரிமையாளர் எனது வைப்பில் இருந்து 3 மாத வாடகையினைக் கழித்துவிட்டார். நிகழ்ந்த சூழ்நிலைக்கு அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என அவர் கூறிவிட்டார்.

எனது அடிப்படைச் சம்பளத்தினைத் தவிர, என்னால் மேற்கொள்ளப்படும் விற்பனைக்கு அமைவாக எனது வருமானம் அதிகரிக்கும். ஆனால் நாடு முழுவதும் முடக்கப்பட்ட காரணத்தினால் விற்பனைகள் நடக்கவில்லை. வழமையாக நான் மொத்தமாக 75000 ரூபா முதல் 80000 ரூபா வரை சம்பாதிப்பேன். ஆனால் இந்த வருமானம் இப்போது குறைவடைந்துள்ளது. நான் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தேன். ஏனெனில் நான் எடுத்த சில கடன்களை நானே மீண்டும் செலுத்தவேண்டியிருந்தது. எனது வீட்டில் தற்போது எனது தாயாரும் நானும் மட்டுமே வேலை செய்கின்றோம். எனது தாயார் ஆசிரியராக வேலை செய்கின்றார். எனது தந்தை ஓய்வுபெற்றுவிட்டார். எனது தாய்க்கு ஒரு நிலையான வருமான மூலம் உள்ளது. குடும்பத்தின் ஏனைய மூன்று குடும்ப உறுப்பினர்களுக்கும் இது இக்காலப்பகுதியில் பெரிதும் உதவியது. இது எமக்கு இவ்வளவு தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தால் எம்மை விடக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் நாட்கூலிகளுக்கும் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும்? நாம் அதையும் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வாறாயினும், குறைந்த வருமானத்துடனான வாழ்க்கைக்கு நாம் அனைவரும் இப்போது எம்மைத் தகவமைத்துள்ளோம். நாம் இயலுமான அளவு ஏனையோருக்கு உதவ முயற்சிக்கவேண்டும்.

எனது ஊரில் அதிகளவான தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர். இந்தப் பெருந்தொற்றும் முழுமுடக்கமும் அந்தத் துறையில் உள்ள நாட்கூலித் தொழிலாளர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. தொழிற்சாலைகளும் கம்பனிகளும் அவற்றின் உள்ளூர் விற்பனையிலும் சர்வதேச விற்பனையிலும் ஒரு வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. இதுவரையில் உரிய விற்பனை இடம்பெறவில்லை. ஊதியக் குறைப்புக்

காரணமாகவும் ஏனைய பிரச்சினைகள் காரணமாகவும் பல தொழிலாளர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைப் பாங்குகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பண்டாரவளைப் பிரதேசம் மலைப்பாங்கான இடத்தில் அமைந்துள்ளது. பொதுப் போக்குவரத்து வரையறுக்கப்பட்டுள்ளது ஆனால் நகரப் பிரதேசங்களில் கிடைக்கின்றது. ஆனால் சில தூரப் பிரதேசங்களில் ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு பஸ்கள் மட்டுமே வேலை செய்கின்றன. அத்தியாவியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

### சட்டமும் ஒழுங்கும்

மக்களால் பயணம் செய்ய முடியாத காரணத்தினால் அவர்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பல சிரமங்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள காரணத்தினால் மக்கள் அவர்களின் நாளாந்த உணவுகளைப் பெறுவதிலும் மாதாந்தச் செலவுகளைப் பூர்த்திசெய்வதிலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். விநியோகத்திற்கும் கேள்விக்கும் இடையில் சமனிலையின்மை காணப்படுகின்றது. இன்றும் கூட எரிபொருள்கள், பால், சீனி மற்றும் அரிசி ஆகியவற்றின் விநியோகம் தொடர்பாகப் பெரிய பிரச்சினை காணப்பட்டது. எனக்கு மாதாந்த வருமானம் இருக்கின்றது. ஆனால் நாளாந்த வருமானம் பெறுபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு எவ்வாறு கல்வி புகட்டுவார்கள்?

### அரசாங்க உதவி

அரசாங்கம் சில உதவிகளை வழங்கியது. ஆனால் அவை போதியவையா என்பதே பிரச்சினையாக இருக்கின்றது. பண்டாரவளைப் பிரதேசத்தில் உள்ள எனது சில தமிழ் நண்பர்களிடம் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். 4 முதல் 6 உறுப்பினர்கள் வரை உள்ள குடும்பத்திற்கு அந்த உதவி போதாது என அவர்கள் குறிப்பிட்டனர். வழங்கிய உதவி பிள்ளைகளின் தேவைகளையும் முதியவர்களின் தேவைகளையும் பூர்த்திசெய்யப் பயன்படுத்தப்பட்டதால் அது இரண்டு நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். பண்டாரவளையில் மானியச் செயன்முறை நன்கு நிர்வகிக்கப்பட்டது. பண்டாரவளைக்கு அருகில் உள்ள கிராமசேவையாளர் பிரிவில் உள்ள கிராமசேவை அதிகாரியும் வேறு சிலரும் மானியத்தினை வேறு விடயங்களுக்காகப் பயன்படுத்திய மோசடி காரணமாக அங்கே சில பிரச்சினைகள் காணப்பட்டன. மொத்தத்தில், செயன்முறை சரியானதாக இருந்தது. ஆனால் அது வெளிப்படைத்தன்மை உடையதாக இருக்கவேண்டும். நகர சபையோ அல்லது ஏனைய அரசியல் பிரதிநிதிகளோ மக்களுக்கு உதவுவதற்கு பெரிதும் முயற்சிக்கவில்லை. ஆனால் பிரதேசத்திலுள்ள சில சமய நிறுவனங்கள் மக்களுக்கு உதவின.

### சுகாதாரத் துறை உதவி

இப்போது நான் அதிகமாக ஹோமாகமயிலேயே வசிக்கின்றேன். அதிகமான வேளைகளில் தொற்றுத்தடைகாப்பு ஒழுங்குவிதிகளும் ஏனைய சுகாதார வழிகாட்டல்களும் மக்களால் சிறந்த முறையில் பின்பற்றப்படுகின்றன. பாதுகாப்பு அதிகாரிகளும் சுகாதாரத் துறையும் இது தொடர்பாகச் சிறந்த முறையில் செயற்பட்டிருக்கின்றன. அவர்கள் மக்களைச் சிறந்த முறையில் நடத்தினர். குறிப்பாக தியத்தலாவ வைத்தியசாலையிலும் பண்டாரவளை வைத்தியசாலையிலும் அவ்வாறு நடத்தினர். நடமாட முடியாத சில முதியவர்களுக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டது. கொத்தணிகள் மூலம் கொவிட் பரவ ஆரம்பித்ததும் அவர்கள் தனிமைப்படுத்தலிலும் தொற்றுத்தடைகாப்புச் செயன்முறையிலும் பெரிதும் உதவினர். குறிப்பாக, சுகாதார மருத்துவ அதிகாரிகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் தொடர்ச்சியான அவதானிப்புக்களுக்கும் வழிகாட்டலுக்கும் உதவினர்.

### தடுப்பூசியேற்றல்

தடுப்பூசியேற்றல் செயன்முறையின் முதலாவது கட்டத்தின் போது சுகாதார மருத்துவ அதிகாரிகள் கொழும்பிலும் மேல் மாகாணத்திலும் கவனம் குவித்தனர். பண்டாரவளையில் அண்மையிலேயே தடுப்பூசியேற்றும் செயன்முறையினை ஆரம்பித்தனர். எனது தந்தைக்கு 63 வயது, தாய்க்கு 60 வயது. இப்போது இப்பிரதேசத்திலும் கொவிட் வேகமாகப் பரவுகின்றது. தடுப்பூசியேற்றல் செயன்முறை பண்டாரவளையிலும் தூரப் பிரதேசங்களிலும் துரிதப்படுத்தப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

### கல்வி

ஒன்லைன் கல்வி முறை ஏமாற்றமளிப்பதாக இருப்பதுடன் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது ஒரு

பரிபூரணமற்ற தீர்வாக இருக்கின்றது. ஒன்லைன் தொழில்நுட்பம் என்பது எமது நாட்டில் இன்னும் வளர்ச்சியடைந்து வரும் ஒன்றாக இருப்பதால் அது மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருக்கின்றது. இந்த முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு பல வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் எமது நாடு இன்னும் வளர்முக நாடாகவே இருக்கின்றது. எமக்குப் பல சிரமங்கள் உள்ளன. இணைய இணைப்பு வரையறுக்கப்பட்டதாக இருக்கின்றது. மக்களில் பெரும்பான்மையினரால் அண்ட்ரொய்ட் தொலைபேசி போன்ற விலைகூடிய சாதனங்களை வாங்க முடியாதுள்ளது. அதிகமான குடும்பங்கள் தமது பிள்ளைகள் படிப்பதற்குத் தேவையான புத்தகங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்கிவந்தனர். ஆனால் இதற்கான விலைகளை ஒன்லைனில் செலுத்துவது இவர்களுக்குக் கடினமானதாக இருக்கின்றது.

ஒன்லைன் கல்வியின் பெறுமதி வரையறுக்கப்பட்டதாக இருக்கின்றது. பாடசாலைக் கல்வி பரந்ததாக இருக்கின்றது – பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளுடன் இடையீடு மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது, விளையாடுவதற்கும், கூட்டாக வேலை செய்வதற்கும் நண்பர்களை உருவாக்குவதற்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. கல்வியில் இருந்து பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய பல விழுமியங்கள் காணப்படுகின்றன. ஒன்லைன் கற்பிப்பு மூலம் கல்வி என்பது பாடவிதானத்திற்கு மட்டும் சுருக்கப்பட்டுள்ளது. பாடசாலைப் பிள்ளைகள் தவறவிட்ட பல விடயங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு நடைமுறை ரீதியான அறிவில்லை. சிறந்த பாடசாலை முறைமையினை உருவாக்குவதன் மூலம் விழுமியங்கள் கற்பிக்கப்பட வேண்டும். உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெருந்தொற்றின் காரணமாகப் பரீட்சையில் ஏற்பட்ட தாமதங்களினால் அதிக அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவர்கள் தங்களின் வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்குப் பாடுபடுகின்றனர். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்களுக்கும் அனுமதிக்காகக் காத்திருப்பவர்களுக்கும் இதே நிலையே காணப்படுகின்றது.

பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தடுப்பூசி ஏற்றிப் பாடசாலைகளை விரைவாக மீண்டும் திறப்பது மிக முக்கியமானது என நான் நினைக்கின்றேன். இது குறைந்தது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காவது வழிவகுக்கும்.

**சுற்றாடல்**




*கொழும்பு மாநகர சபைத் துப்பரவுத் தொழிலாளர்கள் கொம்பனி வீதியில் குப்பைகளைச் சேகரிக்கின்றனர்*

ஹோமகம பிரதேசத்தில் நான் அவதானித்தது போல், கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் செயன்முறையில் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன. பெருந்தொற்றுச் சூழ்நிலையில் இதனை முகாமைத்துவம் செய்வதில் நடைமுறை ரீதியான பிரச்சினைகள் உள்ளன என்பது தெளிவானதாகும். ஒவ்வொருவரும் நகர சபையினைக் குறைகூறுகின்றனர் அல்லது இதில் சம்பந்தப்பட்டுள்ள மக்களை அவர்களே இதற்குப் பொறுப்பு என்ற ரீதியில் குறைகூறுகின்றனர். எவ்வாறாயினும், மக்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் கழிவுகளை வீட்டில் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பினைக் கொண்டுள்ளனர். மக்கள் அவர்களின் நடத்தையினையும் மனப்பாங்கினையும் மாற்றினால் இது மேலும் முன்னேற்றப்படக்கூடிய ஒன்றாகும். ஒவ்வொருவரும் வெளிநாடுகள் எவ்வளவு அழகாக உள்ளன எனப் பேசிக்கொள்கின்றனர். ஆனால் தமது நாட்டினை அழகாக வைத்திருப்பதற்கு யாருமே தனிப்பட்ட ரீதியில் பங்களிப்பு வழங்க முன்வருவதில்லை. அதிகமான மக்கள் குப்பைகளைப் புறநகர்ப் பகுதிகளில் தனியான இடங்களில் எறிவதற்கே முயற்சிக்கின்றனர். முழுமுடக்கத்தின் போது கூட இது பொதுவாக நடக்கின்றது. கழிவு முகாமைத்துவம் என வருகையில் இதனைச் சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காடழிப்பும் இதேபோன்றே நடக்கின்றது.

இந்தக் காலப்பகுதியில் மக்களின் மனப்பாங்கு மாறியுள்ளது. மக்கள் பாரிய அழுத்தங்களின் கீழ் உள்ளனர். யாருமே மற்றவர்களைப் பற்றிச்

சிந்திக்கும் நிலைமையில் இல்லை. மக்கள் தங்களின் நலன்களைப் பற்றியே கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் சமூகத்தினைப் பாதிக்கும் விடயங்களைப் பற்றிப் பொருட்படுத்தாது இருக்கின்றனர்.

**தவறான தகவல்கள்**

முறையான தகவல்களைப் பெறுவது மக்களின் உரிமையாகும். ஆனால் இலங்கையில் சரியான தகவல்கள் பிழையான இடத்தில் பிழையான நேரத்தில் வெளிக்கூறப்படுகின்றன. பெருந்தொற்று ஆரம்பித்த காலம் முதல் இதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மக்களுக்கு உண்மையான நிலை தெரிந்தால், அவர்கள் பொருத்தமான முறையில் பதிற்செயற்பாடாற்றுவார்கள். சமூக ஊடகங்களின் மூலம் வெளிவரும் சில தகவல்கள் மிகவும் பிரச்சினைக்குரியவையாக இருக்கின்றன. இது மக்களைப் பிழையான பாதையில் இட்டுச்செல்லலாம். பாரம்பரிய ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் இவ்வாறுதான் காணப்படுகின்றன. பெருந்தொற்றின் முன்னர் கூட, ஊடகம் பக்கச்சார்புமிக்கதாகவே காணப்பட்டது. மக்கள் அவர்களின் பக்கச்சார்புகளின் ஊடாகவே விடயங்களைப் பார்க்க ஆரம்பித்தனர்.

பண்டாரவளையினை எடுத்துக்கொண்டால், சில இடங்களில் மக்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசைகளை மட்டுமே பார்க்கின்றனர். இந்த அலைவரிசைகளைப் பார்ப்பவர்கள் அந்தக் கண்களினூடாகவே பரந்த சமூகத்தினைப் பார்ப்பதற்குப் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அவர்கள் தவறவிடுகின்ற பல அம்சங்கள் உள்ளன. அந்தப் பக்கச்சார்புகளுடன் அவர்கள் தவறான திசையில் செல்கின்றனர். இதன் விளைவாக, சமனிலை என்பது இல்லாமல் போகின்றது. இதை நாம் பெருந்தொற்றின் போதும் பார்த்தோம். உதாரணமாக, கடந்த மார்ச் மாதம், கொவிடைச் சுகப்படுத்தும் அறிவியல் அடிப்படையற்ற அற்புதமான பாணியினைப் பற்றிய செய்தியினைச் சில தொலைக்காட்சிகள் பிரபலப்படுத்தின. அது ‘தம்மிக பாணி’ என அழைக்கப்பட்டது. இந்தக் கதைகளையும் சில மக்கள் நம்பினார்கள்.

ஊடகம் அவற்றின் செய்திகளில் நெறியினையும் சமனிலையினையும் கொண்டிருக்கவேண்டும். இந்த விடயங்களில் அரசாங்கமும் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். அண்மையில் ஊடகங்கள் எரிபொருள் பற்றாக்குறை பற்றிச் செய்தி வெளியிட்டதால் மக்கள் நீண்ட வரிசைகளில் எரிபொருள் நிரப்பக் காத்திருந்தனர். ஆனால் உண்மையான நிலை வேறாக இருந்தது. இதே நிலைதான் தற்போது காணப்படும் சீனி மற்றும் பால் மாப் பிரச்சினைகளிலும் நிலவுகின்றது. வித்தியாசமான அலைவரிசைகள் வித்தியாசமான விடயங்களை அவற்றின் அரசியல் ஆதாயத்திற்காகக் கூறி வருகின்றன. இவ்வாறான தவறான தகவல்களால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து மக்களுக்குச் சரியான தகவல்களைச் சரியான நேரத்தில் வழங்கவேண்டும். இதுவே சமூக ஊடகங்களின் விடயத்திலும் நிலவவேண்டும். தற்போது அமுலில் உள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் அரசியல் விடயங்கள் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தினை மீறாமல் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காகத் தரமுயர்த்தப்படவேண்டும்.



*ஹம்பாந்தோட்டையின் கிராமத்தில் ஒரு சிறிய கடை*

**மனநல சுகாதாரம்**

எனக்கும் மன அழுத்தங்கள் ஏற்பட்டன. நாடு முதலில் முழுமுடக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட போது ஒரு குறுகிய காலத்திற்கு தனிப்பட ரீதியில் நான் மகிழ்ச்சியாக இருந்தேன். கொவிட் பெருந்தொற்றுக்கு முன்னர் நான் எப்போதும் எனது வேலையிலேயே முழு நேரத்தினையும் செலவிட்டுக்கொண்டிருந்தேன். குடும்பத்துடன் வீட்டில் இருப்பதற்கு எனக்கு நேரம் இருக்கவில்லை. அதற்காவது இப்போது நேரம் கிடைத்ததே என நான் நினைத்தேன். ஆனால் சில காலங்களின் பின்னர் விடயங்கள் மிகக் கஷ்டமானவையாக மாறத் தொடங்கின. வருமான இழப்புக்கள், வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் பல பிரச்சினைகள் தலைதூக்கியபோது மகிழ்ச்சி என்பது ஒரு குறுகிய கால மாயையாகிப் போனது.

அந்தக் காலத்தில் மக்கள் அவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக முழுமுடக்கம் சில நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குத் தளர்த்தப்பட்டது. சிலவேளைகளில் அக்காலப்பகுதியில் கொழும்பிலுள்ள எனது அலுவலகம் எனது சம்பளத்தினை மாற்றவில்லை. இதனால் எனது வாழ்வின் நிதி விடயங்களைக் கையாளுவதற்கு நான் கஷ்டப்பட்டேன். மேலும் இதனால் நான் எனது எதிர்காலத்தினைப் பற்றித் தொடர்ச்சியாகச் சிந்திக்க நேரிட்டது. முழுமுடக்கம் காரணமாக என்னால் வீட்டுக்குச் செல்ல முடியாது. ஏனெனில் இந்தச் சூழ்நிலைகளின் கீழ் நான் முறைமாற்று அடிப்படையில் வேலை செய்ய நேரிட்டது. எனவே நான் கொழும்பில் எனது அலுவலகத்தில் இருக்கவேண்டி நேரிட்டது. எனக்கு வீட்டுக்குச் செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தாலும் அது ஆபத்தானதாக இருந்தது. ஏனெனில் நான் எனது பெற்றோர்களுக்கும் ஏனையோருக்கும் தொற்றினை ஏற்படுத்தும் வாய்ப்பு இருந்தது. இப்போது எனது நண்பர்களைச் சந்திப்பதற்கான ஒரே வழி அவர்களைத் தொலைபேசியில் அழைப்பதுதான். ஆனால் அது உரிய மாற்றீடு அல்ல. மரணம் பற்றிய அச்சம் காணப்படுகின்றது. அது மக்களைச் சந்தேகப்படச் செய்கின்றது. எல்லாம் விரைவில் சரியாகிவிடும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**வீட்டு வன்முறை, போதைப்பொருள் நுகர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள்**

நான் இதனை அவதானிக்கவில்லை ஆனால் வெவ்வேறு பிரச்சினைகள் பற்றி எனது நண்பர்கள் சொல்லிக் கேள்விப்பட்டுள்ளேன். நடமாட்டத்தில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை பலருக்கும் கோபத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய சிலர் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் சந்தேகம் காணப்படுகின்றது. குறிப்பாக கணவன் மனைவிக்கிடையில் சந்தேகம் நிலவுகின்றது. முன்பு ஒரு வித்தியாசமான சமனிலை காணப்பட்டது. ஆனால் பெருந்தொற்று அந்த இயங்கியலை மாற்றிவிட்டது.

**இராணுவமயமாக்கம்**

நான் இந்த விடயத்தில் நடுநிலை வகிக்கின்றேன். நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவம் பொறுப்பாக இருக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இப்போது எமக்குப் பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்பதால் இராணுவத்தைக் கொவிட் கட்டுப்பாட்டுக்குப் பயன்படுத்துவதை நான் ஒரு நல்ல விடயமாகவே பார்க்கின்றேன். எவ்வாறாயினும், சுகாதாரத் துறையின் பரிந்துரைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் அவர்கள் முன்னுரிமை வழங்கவேண்டும். சுகாதாரத் துறையின் அந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான ஓர் உதவிப் பொறிமுறையாகவே அவர்கள் செயற்படவேண்டும். தடுப்பூசியேற்றல் செயன்முறை தற்போது முழுவதும் பாதுகாப்புப் படையினால், குறிப்பாக இராணுவத்தினால் நிர்வகிக்கப்பட்டதை நாம் பார்த்தோம். அவ்வாறாயின், இராணுவத்தில் உள்ள வைத்தியர்களுக்கும் மருத்துவ அதிகாரிகளுக்கும் அவர்கள் முன்னுரிமை வழங்கவேண்டும். அந்த உதவி முக்கியமானது. ஏனெனில் சுகாதாரத் துறையும் இப்போது பாரிய அழுத்தத்தின் கீழ் உள்ளது. ஆனால் பாதுகாப்புப் படையினர் அந்தப் பணிக்கு அப்பால் பலத்தினைப் பிரயோகித்து இராணுவமயமாக்கப்பட்ட முறையில் செல்வார்களாயின் அது சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றிற்கு மிகவும் சிக்கல்மிக்கதாக மாறிவிடும். தடுப்பூசியேற்றுமாறு யாரையாவது வற்புறுத்துவது ஒரு நல்ல விடயமல்ல என்றே நானும் நினைக்கின்றேன்.

**சாதகமான தகவமைத்தல்கள்**

உள்ளூர் மட்டத்தில் வளி மாசாக்கம் தொடர்பில் சுற்றாடலுக்குச் சில சாதகமான விடயங்கள் இடம்பெற்றன. மேலும், மக்கள் ஒருவர் மற்றவருக்கு உதவுவதற்காகக் கூட்டாகப் பணியாற்றினர். சிலர் தங்களின் வாழ்க்கைப் பாங்கினில் பிரச்சினைகள் இருந்தன என்பதை உணர்ந்துகொண்டனர், வீண்விரயம் போன்ற விடயங்கள். அதிகமான மக்கள் எளிமையான வாழ்க்கைப் பாங்கினை ஏற்று நடைமுறைப்படுத்தினர்.

ஆனால் ஏனைய அம்சங்களில் ஏனைய பல விடயங்கள் ஏமாற்றமளிப்பவையாக உள்ளன. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அதன் தவறுகளை மறைப்பதற்கு இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியது. இதற்கு ஓர் உதாரணம் உயிர்த்த ஞாயிறு நிகழ்வாகும். இளைஞர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இது எதிர்காலத்திற்கு நல்லதல்ல. மூளைசாலிகளின் வெளியேற்றம் நாட்டிற்குப் பாரிய ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. நாம் அனைவரும் ஒரு சிறந்த எதிர்காலத்திற்காகக் கூட்டாகப் பணியாற்றவேண்டும்.



*காலி முகத்திடலில் பீடா வியாபாரி.*

**நேர்காணல் 12**

**தங்கொட்டுவயில் வசிக்கும் கொழும்பில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் சிங்களச் சமுதாயத்தினைச் சேர்ந்த 26 வயது ஆண் ஒருவருடனான நேர்காணல்**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

இந்தச் சூழ்நிலை எனக்குப் புதியது. எமது வாழ்க்கைப் பாங்கு இவ்வாறு மாறும் என நான் ஒருபோதுமே நினைக்கவில்லை. நான் வேலை செய்துகொண்டே பட்டப் பின் படிப்புப் படித்துக்கொண்டிருந்தேன். அதனை முற்றுமுழுவதும் ஒன்லைனில் கற்கவேண்டியிருக்கும் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. எவ்வாறாயினும், இந்தச் சூழ்நிலை எமக்குப் பல பாடங்களைக் கற்பித்துக்கொண்டிருக்கின்றது. இதற்கு முன்னர் நாம் ஒரு சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்காகப் பல இலக்குகளின் பின்னால் அலைந்துகொண்டிருந்தோம். என்னை எடுத்துக்கொண்டால், என் குடும்பம் எனக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், நான் பட்டம் பெற்ற பின்னர் சிறந்த தொழில் ஒன்றைத் தேடினேன். அத்துடன் மேலும் திறன்களையும் தகைமைகளையும் சேர்த்து எனது வருமானத்தினை உச்சப்படுத்த நான் முயற்சித்தேன். எமது சமூகம் அதற்குத்தான் எம்மைப் பயிற்றுவித்துள்ளது. நாம் எப்போதும் இந்தச் சுற்றினையே பின்பற்றுகின்றோமே அன்றி வட்டத்திற்கு வெளியே நாம் ஒருபோதும் சிந்திப்பதில்லை. ஆனால் நின்று நிதானித்து சுற்றுமுற்றும் பார்த்து நாம் என்ன செய்துகொண்டிருந்தோம் என்பதைப் பார்ப்பதற்கு இந்தப் பெருந்தொற்று பாதை வகுத்துள்ளது. இது அரசியல், பொருளாதாரம், சுற்றாடல், மேலும் பல கரிசனைகளுடன் தொடர்புபட்டுள்ளது. இது அந்தக் கரிசனைகளை எமக்கு நினைவூட்டுகின்றது. ஆனால், நாம் வாழ்வதற்குப் பயிற்றப்பட்டுள்ள முறையின் காரணமாகப் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றோம் - குறிப்பாக, பொருளாதாரம் மற்றும் பொருளாதார முறைமை. நாம் எதையும் இலவசமாகப் பெற மாட்டோம். நாம் புதிய வழமையினுள் சாதாரண வாழ்வில் மேற்கொண்டது போல் விடயங்களைத் தகவமைக்க விரும்பவேண்டும். இது ஒன்றிரண்டு வருடங்களில் மறைந்துவிடும் என நாம் ஊகிக்கின்றோம். ஆனால் பல விடயங்கள் இல்லாமல் போய்விடும். எமது அன்புக்குரியவர்கள் பலரை நாம் வைரசிற்கு இழந்துவிட்டோம் என்பதை நாம் அறிவோம். இது நடப்பதற்கு முன்னர் 2019 போன்றே உலகம் இருக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது. மேலும், தொழில்நுட்பத்தின் பயன்பாடு நாம் எதிர்பார்த்ததை விட விரிவடைந்துள்ளது.

நாம் என்ன சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பது பற்றியும் நமது வாழ்வாதாரத்தின் மீதான தாக்கங்கள் என்ன என்பது பற்றியும் மக்கள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். சுற்றுலாத்துறை, சிறு வியாபாரம், நாட்கூலி வேலைகள் எல்லாமே பாதிக்கப்பட்டுள்ளன.

**வாழ்வாதாரம்**

தங்கொட்டுவ பிரதேசத்தில் அதிகமான மக்கள் செங்கல் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுத் தொழிற்துறைகளில் ஒன்றாகும். மேலும் மட்பாண்டங்களைத் தயாரிப்பதற்கான மற்றும் ஆடைத் தயாரிப்புக்கான சில கைத்தொழில் வலயங்களும் இங்கு காணப்படுகின்றன. பலரும் இவற்றில் வேலை செய்கின்றனர். இந்தச் சூழ்நிலையினால் பலரும் வீடுகளில் முடங்க நேரிட்டுள்ளது. சில கம்பனிகள் சம்பளங்களைக் குறைத்துள்ள காரணத்தினால் சில தொழிலாளர்கள் அவர்களின் சம்பளத்தில் அரைவாசியினை மட்டுமே பெறுகின்றனர். மேலும் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களில் ஈடுபட்டு வந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேசன்கள், தச்சர்கள் போன்ற பல நாட்கூலி வேலையாட்கள் அவர்களின் வருமானத்தினை இழந்துள்ளனர். சிலர் அவர்களின் உணவுத் தேவையினைப் பூர்த்திசெய்வதற்குக் கஷ்டப்படுகின்றனர் என்பது எனக்குத் தெரியும். அவர்களில் சிலர் தங்களின் பிரதான உணவாகப் பலாக்காயினையும் ஈரப்பலாவினையும் உண்ணவேண்டியுள்ளது என்பது எனக்குத் தெரியும். அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கின்றனர். ஆனால் எங்கேயும் தற்கொலையோ அல்லது அவ்வாறான எதிர்வினையோ நடந்ததை நான் இதுவரையில் காணவில்லை.

**அரசாங்க உதவி**

ஒரு நலன்புரி அரசிடம் இருந்து பெறுவதைப் போன்று மக்கள் அந்த ஆதரவினை எதிர்பார்த்தனர். இந்தப் பிரதேசத்தில் பலரும் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். குறிப்பாக இத்தாலியில். அக்குடும்பங்களுக்கு வங்கிகளின் ஊடாக வருமானம் வருகின்றது. இது பற்றிய உத்தியோகபூர்வ ஆவணப்படுத்தல் இல்லை. இக்குடும்ப உறவினர்களில் சிலர் சிறந்த வருமான மூலத்தினைக் கொண்டுள்ள போதிலும் அவர்கள் 5000 ரூபா மானியத்தினைப் பெற்றுக்கொண்டனர். மேலும், பட்டியலில் பெயருள்ள காரணத்தினால் அந்தப் பணத்தினைப் பெற்ற சிலருக்கு நல்ல வியாபாரம் இருந்தாலும் அவர்கள் அந்தப் பணத்தினைப் பெற்றனர். அவர்களுக்கு அப்பணத்திற்கான தேவை இருக்கவில்லை என்றாலும் அரசாங்க அதிகாரிகளின் ஊழலின் காரணமாக அதைப் பெற்றுக்கொண்டனர். அனைவரும் அல்ல. ஆனால் அவர்களில் சிலர். மானிய விநியோகத்தின் முதற்கட்டத்தில் அரசாங்கம் அதனைப் பலருக்கும் வழங்க முயற்சித்தது. ஆனால் வருடத்தின் போது நிதிப் பற்றாக்குறையினால் அது மாறிவிட்டது. இப்போது பலர் அவர்களின் தொழில்களை இழந்துள்ளனர். சிலருக்கு உணவளிப்பதற்காகக் குழந்தைகள் உள்ளன. இருப்பினும் அவர்களுக்கு சமுர்த்தி போன்ற மானியங்கள் வழங்கப்படுவதில்லை. அவர்களிடம் சேமிப்பும் இல்லை. சிலர் வீடு கட்டுவதற்காக எடுத்த கடன்களைச் செலுத்தவேண்டியுள்ளது. அவர்கள் எவ்விதமான உதவியும் இன்றிப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

**சட்டமும் ஒழுங்கும்**

எனது மாமனார் ஒருவர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளார். ஒரு தடவை அவர் தனது முகக்கவசத்தினைப் பிழையான முறையில் அணிந்திருந்தார். பொலிசார் அவருக்கு 5000 ரூபா குற்றப்பணம் விதித்து நீதிமன்றத்தில் வழக்கினையும் தாக்கல் செய்தனர். அவர் முகக்கவசத்தினை அணிந்த விதத்தில் சில தவறுகள் இருக்கலாம். ஆனால் 5000 ரூபா குற்றப்பணம் விதிப்பது என்பது அவர்களுக்கு ஒரு பெரிய தொகையாகும். அவர்கள் அப்பணத்தினைக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்காவது குடும்பத் தேவைகளுக்காகப் பயன்படுத்தியிருப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் பொலிசார் சட்டங்களை இவ்வாறு நியாயமற்ற முறையில் விதிக்கின்றனர். அரசியல்வாதிகளின் தவறுகளையும் சக்திவாய்ந்தவர்களின் தவறுகளையும் யாரும் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் வறியவர்களையே தாக்குகின்றனர்.


பொதுவாக, இந்நாட்களில் வீதிகளில் அதிக மக்கள் காணப்படுகின்றனர். பல விடயங்கள் அத்தியாவசியமான விடயங்களாக மாறியுள்ளன. குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பின்மை காரணமாக மக்கள் முழுமுடக்கத்தின் போதும் கூடப் பணம் உழைப்பதற்காக ஏதாவது ஒரு தொழிலைச் செய்வதற்கே முயற்சிக்கின்றனர். சிலர் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அதிகமான பொலிஸ் அதிகாரிகளுக்குக் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மையானவர்கள் தொற்றுத்தடைகாப்பில் உள்ளனர். சூழ்நிலையினைக் கண்காணிப்பதற்குப் பொலிசாருக்குப் போதிய மனிதவலு இல்லாதிருக்கின்றது. பலரும் சூழ்நிலை தொடர்பாக விரக்தியடைந்துள்ளனர்.

**இராணுவமயமாக்கம்**

தற்போதைய சூழ்நிலையின் காரணமாக நாட்டுக்கு அவர்களின் உதவி தேவை என நான் நினைக்கின்றேன். ஆனால் அனைத்து நிர்வாக விடயங்களுக்கும் இராணுவ அதிகாரிகளின் உதவியினைப் பெறுவது நல்ல ஓர் அறிகுறியல்ல. அது வேறு ஒரு பாதையில் செல்லலாம். பெருந்தொற்றினைப் பொறுத்த அளவில், இது முன்பு நடந்திராத ஒன்று என்பதுடன் எம்மிடம் எவ்விதமான திட்டங்களும் இருக்கவில்லை. ஆனால் நிர்வாகப் பணிகளைப் பொறுத்த அளவில் அரசாங்கத் துறைகளும் நிர்வாக நிபுணர்களும் உள்ளனர். என்ன செய்யவேண்டும் என்பதை அவர்கள் திட்டமிட்டு அவர்கள் தீர்மானிக்க வேண்டும். மேலும், நிர்வாக அதிகாரிகள் மிகவும் வினைத்திறன்மிக்கவர்களாகவும் இருக்கவேண்டும். இல்லாவிடின் நிர்வாகத்தினை முகாமைத்துவம் செய்வதற்குப் பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்துவது ஒரு சிறந்த

தெரிவு என மக்கள் நம்பத் தொடங்கிவிடுவார்கள்.

### சுகாதாரத் துறை உதவி




*இலங்கை சுகாதார அதிகாரிகளால் விநியோகிக்கப்பட்ட கொவிட் 19 தடுப்பூசியேற்றல் அட்டை*

இந்தச் சூழ்நிலையில் தம்மால் இயலுமான அளவு சிறப்பாகச் செயற்படுவதற்குச் சுகாதார அதிகாரிகள் முயன்றனர். துறையில் வளங்கள் இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது. மேலும் பெருந்தொற்று ஏற்பட்டு இப்போது இரண்டு வருடங்களாகிவிட்டன. நீண்ட காலத்திலும் தேசிய மட்டத்திலும் விடயங்களைப் பார்த்துச் செய்வதற்கு இன்னும் உரிய திட்டங்களோ



அல்லது பொறிமுறைகளோ இருக்கவில்லை. இன்று நான் தடுப்பூசியேற்றச் சென்றேன். அந்த நிலையத்தில் பெரும் நெரிசல் காணப்பட்டது. யாருமே சமூக இடைவெளியினைப் பேணவில்லை. மக்களின் மத்தியில் வைரஸ் மேலும் பரவுவதற்கு இது காரணமாக அமைகின்றது. மக்கள் தடுப்பூசியேற்றுவதற்கு முயற்சித்தனர். சூழ்நிலையினை முகாமைத்துவம் செய்வதற்கு யாருமே அங்கிருக்கவில்லை. மேலும் சில சுகாதார அதிகாரிகள் போலியான காரணங்களைக் காட்டுவதற்கு அனுமதி எடுக்கின்றனர். இந்தக் கட்டத்தில் அவர்கள் அனைவருக்கும் பெரிய பொறுப்பு இருக்கின்றது. இதனை நீக்குவதற்காகப் பணியாற்றுவதற்கு ஒவ்வொருவருக்கும் மனச்சாட்சியும் இதயமும் இருக்கவேண்டும் என நான் நினைக்கின்றேன். மக்களைப் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரக்கூடாது. ஏனெனில் அவர்களின் பக்கத்தில் இருந்து பார்க்கையில் அவர்கள் கஷ்டமான சந்தர்ப்பத்திற்கு முகங்கொடுப்பவர்களாக இருக்க முடியும்.

### தடுப்பூசியேற்றல்

60 வயதிற்கும் 30 வயதிற்கும் மேற்பட்ட அதிகமானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. ஆனால் 30 வயதுக்குக் குறைந்த இன்னும் பலருக்குத் தடுப்பூசி ஏற்றவேண்டியுள்ளது. முன்பு, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசியினை வழங்குவதில் சிறிது தாமதம் காணப்பட்டது. அது திட்டமிடலில் காணப்பட்ட ஒரு பிரச்சினையாகும். இன்று ஒருவருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டால் அவருக்குக் குறிப்பிட்ட நாட்களின் பின்னர் இரண்டாவது தடுப்பூசி போடப்படும் என்ற ஒரு திட்டம் இருக்கும். மேலும், முதலாவது சுற்றில் பலருக்கு சினோபாம் போடப்பட்டது. பின்பு பைசர் போடப்பட்டது. திட்டமிடல் சிறப்பாக இருந்திருக்க வேண்டும்.

### கல்வி

பணமும் சிறப்புரிமைகளும் கொண்ட மக்களைப் பொறுத்த அளவில் அவர்களுக்குத் தங்களின் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆனால் வறிய மக்களைப் பொறுத்த அளவில் அவர்கள் கஷ்டப்படுகின்றனர். அவர்களின் பிள்ளைகள் பட்டம் விடவேண்டியிருக்கின்றது. அதிகமானவர்களிடம் தொலைபேசி இல்லாதிருக்கின்றது. அவர்களிடம் தரவுகளுக்குச் செலவிடப் பணம் இல்லாதிருக்கின்றது. ரீசார்ஜ் செய்வதற்குக் கடைகள் திறக்கவில்லை. இலத்திரனியல் கொடுப்பனவு மூலம் ரீசார்ஜ் செய்வதற்கு அவர்களுக்குத் தெரியாது. அவர்களிடம் வசதிகள் இல்லை. அத்துடன் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் தொடர்பாடல் இல்லாதிருக்கின்றது. ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையும் இருக்கின்றது. ஆசிரியர் ஒருவர் 40 மாணவர்களுடன் தொலைபேசி அழைப்பின் மூலம் இணைப்பினை ஏற்படுத்த வேண்டுமாயின் ஆசிரியரே அதற்காக அவரின் பணத்தினைச் செலவழிக்க வேண்டியுள்ளது. இந்தச் சூழ்நிலையின் கீழ் அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சிலரின் தொலைபேசிகள் உடைந்துள்ளன. அவற்றினைத் திருத்துவதற்கு இடம் இல்லாதிருக்கின்றது. அத்துடன் ஆசிரியர்களிலும் மாணவர்களிலும் பெரும்பான்மையானவர்களுக்கு இதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப அறிவு

இல்லாதிருக்கின்றது. பெற்றேர்களுக்குக் கூட சில எளிய விடயங்கள் தெரியாதிருக்கின்றன. சிலவேளைகளில் அவர்கள் கைவிட்டு விடுகின்றனர். கல்வித் துறையில் இரண்டு மூன்று வருட இடைவெளி இருக்கும். எதிர்காலத்தில் எவ்வகையான விளைவுகள் உருவாகும் என எனக்குத் தெரியாது.

**சுற்றாடல்**

இது தொடர்பாக எனக்குத் தெரிந்தவரையில் பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் சம்பவத்தின் பின்னரான தாக்கத்தினால் நீர்கொழும்பில் வாழும் மீனவ சமுதாயத்தினர் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். இப்போது பலர் கடற்றொழிலுக்குச் செல்கின்றனர். காலநிலைப் பாங்குகள் கூட பருவ மழையுடன் இப்பகுதியில் மாறியுள்ளன. அவர்களினால் வழமைபோன்று விற்பனை செய்ய முடிவதில்லை. அவர்கள் தொற்றுத்தடைகாப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. இங்கு சில தசாப்தங்களாக மணல் மற்றும் களிமண் அகழ்வுப் பிரச்சினைகள் காணப்படுகின்றன..

**தவறான தகவல்கள்**

இது தொடர்பில் எதுவும் நடக்கவில்லை. சிறுபான்மைச் சமுதாயம் தொடர்பாகப் பெரிதாக எதுவும் இல்லை என்றாலும் நீர்கொழும்பில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பாகச் சில சம்பவங்கள் உள்ளன. அவர்கள் அழுக்கானவர்கள் எனவும் விதிகளைப் பின்பற்றாதவர்கள் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

**மனநல சுகாதாரம்**

குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் பாரிய அழுத்தத்தில் உள்ளனர். பொதுவாக, தமக்கு ஒரு பிரச்சினை இருக்கையில் அவர்கள் கோவிலுக்கு அல்லது தேவாலயத்துக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுவது வழமை. இந்தச் சூழ்நிலையின் கீழ் அவர்களால் அதைச் செய்ய முடியாதுள்ளது. அவர்கள் அதனை வீட்டில் செய்யவேண்டியுள்ளது. அவர்கள் நீண்ட காலமாக வீட்டினுள் முடங்கியுள்ளனர். அவர்களின் வாழ்க்கைப் பாங்கு சலிப்புத் தட்டுவதாக மாறியுள்ளது.

**வீட்டு வன்முறை, போதைப்பொருள் நுகர்வு**

பிரச்சினைகள் இருக்கலாம். நான் குறிப்பாக அவதானிக்கவில்லை. மக்கள் பாரிய அழுத்தத்தில் உள்ளனர். இவ்வகையான பிரச்சினைகள் இதனாலேயே ஏற்படுகின்றன.

வழமையாக இப்பிரதேச மக்கள் அளவுக்கதிகமாக மதுபானம் அருந்துபவர்களாகவும் போதைப்பொருள் பாவிப்பவர்களாகவும் உள்ளனர். போதைப்பொருள் நுகர்வு விநியோகம் குறைவடைந்துள்ள காரணத்தினால் பாவனை அதிகரிக்கவில்லை.

**சாதகமான தகவமைத்தல்கள்**

வீட்டுத் தோட்டம் அதிகரித்துள்ளது. இது ஒரு நல்ல விடயம். இதனை மக்கள் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தால், பெருந்தொற்றின் பின்னரும் கூட அது சிறந்ததாக இருக்கும்.

**நேர்காணல் 13**

**தம்பானயில் வசிக்கும் ஆதிவாசிகள் சமுதாயத்தினைச் சேர்ந்த 54 வயதான ஆண் ஒருவருடனான நேர்காணல். இவர் அரசாங்கப் பாடசாலையில் ஆசிரியராகத் தம்பானயில் கடமையாற்றுவதுடன் எழுத்தாளராகவும் இருக்கின்றார். தம்பானயில் உள்ள ஆதிவாசிகள் சமூகத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான முதலாவது நபராகவும் இவர் இருக்கின்றார்.**



*தம்பானயில் உள்ள ஆதிவாசிகள் சமுதாயம்*

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

நகரப் பிரதேசத்தில் உள்ளது போன்ற மன அழுத்தம் எமக்கில்லை. வேடவர்கள் காட்டினை விட்டு வெளியேறிய பின்னர் சேனைப் பயிர்ச்செய்கையினை அவர்கள் கைவிட நேரிட்டதுடன் அவர்கள் எம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் செயற்பாடுகளில் இணையவேண்டி ஏற்பட்டது. அவர்கள் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகளிலும் நாட்கூலி வேலைகளிலும் ஈடுபட்டனர். அவர்கள் காட்டில் பெறுகின்ற பொருட்களைச் சுற்றுலாப் பயணிகளுக்கு

விற்றுவந்தனர். சிலர் இயற்கையான பொருட்களில் இருந்து தயாரிக்கும் கைவினைப் பொருட்களை விற்று வாழ்க்கை நடத்தி வந்தனர். எம்மைச் சுற்றியுள்ள பொருட்களைப் பயன்படுத்தி நாம் எமது உணவினை எளிமையாக உண்டு வந்தோம். நாம் மிகவும் இயற்கையான மற்றும் எளிமையான உணவினையே உண்டு வந்தோம். நகரப் பிரதேசங்களில் காணப்படும் அளவுக்கு எமக்கு மன அழுத்தம் இருக்கவில்லை. நாம் மிகவும் எளிமையான முறையில் வாழ்ந்து வந்தோம். எதையாவது நான் கண்டால் நான் அதனை உண்பேன். அவ்வாறு எதுவும் கிடைக்காவிட்டால் நான் பசியோடு இருப்பேன். அதே நேரம் மிகவும் மீண்டெழுந்தன்மை உடைய மனப்பாங்கு எனக்குள்ளது. எம்மைப் பொறுத்த அளவில் ஏனைய சமூகங்களைப் போன்று முழு இழப்பு என்ற விடயம் இல்லை. எமது கிராமத்தில் எளிமையான தேவைகளே உள்ளன.

### தம்பான ஆதிவாசிகள் கிராமத்தின் நிலை

கடந்த வாரம் 150 பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டன. அதில் 144 தொற்றாளர்கள் இருந்தனர். இன்று 100 பிசிஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. வைரஸ் உடலில் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை மூன்று மரணங்கள் ஏற்பட்டுள்ளன. தலைவரான ஊருவரிகே வன்னில அத்தோவின் மனைவியான ஊருவரிகே ஹீன் மெனிகே கடந்த வாரம் இறந்தமையும் இதில் அடங்குகின்றது.

### சுதேச மருத்துவ முறைகள் எவையேனும் சமுதாயத்தினால் பின்பற்றப்படுகின்றனவா?

அவ்வாறு விசேடமாக எதுவும் இல்லை. பல வீடுகளில் வேப்பிலைக் கொத்தினைத் தொங்கவிட்டிருப்பதை நான் அதிகமான சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கின்றேன். அதிகமானவர்கள் கொத்தமல்லி குடிப்பதை வழமையாகக் கொண்டுள்ளனர். அதனைத் தவிர, எம்மிடையே பெரிதாக எதுவும் மாறியிருப்பதை நான் காணவில்லை. எமது மக்கள் பெரிதாகப் பீதியடையவில்லை. அண்மையில்தான் மரணங்கள் ஏற்பட்டன.

### தொற்றுத்தடைகாப்புச் சட்டங்களை விதித்தல் பற்றிய நிலை

அவ்வாறான பிரச்சினை எதுவும் இல்லை. எமது கிராமம் நகரத்துடன் வலுவான தொடர்பு அற்றதாக இருக்கின்றது. கிராமத்தினைச் சுற்றிக் கிடைக்கும் வளங்களைக் கொண்டு எம்மால் அனைத்தையும் முகாமைத்துவம் செய்யக்கூடியதாக இருக்கின்றது.

### சுகாதாரத் துறை உதவி

ஆரம்பத்தில் இருந்தே பிரச்சினை எதுவும் இல்லாமல் இருந்ததால், பெரிதாக இடையீடு எதுவும் இருக்கவில்லை. நேற்றுப் பல அறிக்கைகள் கிடைத்ததன் பின்னர், அதிக கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. வைத்தியர்களாலும் ஏனைய சுகாதார அதிகாரிகளாலும் வழிகாட்டலும் உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

### தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டம்

இரண்டாம் தடுப்பூசியினை வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. மூன்று நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்டிருக்க வேண்டியது நேற்றுத்தான் கிடைத்தது. தவிர, அது சிறந்த மட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. ஏனைய சுகாதாரப் பிரச்சினைகள் இருப்பவர்களைத் தவிர, ஏனைய அனைவரும் ஆர்வத்துடன் சென்று தடுப்பூசியேற்றினர்.

### அரசாங்க மானியங்கள்

எமக்கு அவை உரிய முறையில் கிடைத்தன. அதிகமான வெளியாட்கள் இருந்தனர். எம்மைப் பற்றிய மதிப்பு வைத்திருப்பவர்கள் அதிக உதவி செய்தனர்.



*பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் நல்லூரில் கராஜில் உள்ள தொழிலாளர் அவரின் வேலையை மீண்டும் ஆரம்பித்துள்ளார்*

### கல்வித் துறையில் ஏற்பட்ட தாக்கம்

கல்வித் துறையிலேயே மோசமான பிரச்சினை ஏற்பட்டது. எமது பிள்ளைகள் எவ்விதமான தொலைக் கல்வி முறைகளையும் பயன்படுத்துவதில்லை. எமது ஆசிரியர்களுக்கு அது தெரியாது. ஓன்லைன் கல்விக்குத் தேவைப்படும் அந்த வளங்கள் எம்மிடம் இல்லை. பிள்ளைகள் அவற்றினைப்

பயன்படுத்துவதில்லை என்பதுடன் அவற்றினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களின் பெற்றோர்கள் மூலமாகக் குறிப்புக்களையும் பத்திரங்களையும் விநியோகிப்பதன் மூலம் நாம் அதனை நடத்துவதற்கு முயற்சித்தோம். மேலும் ஒன்லைனுக்கான பின்புலம் எம்மிடம் இருக்கவில்லை. பிள்ளைகளும் பெரிய தூரத்தில் இல்லை. அக்காரணங்களுக்காக அவர்களுடன் இணைவது சாத்தியமானதாக இருந்தது. கிராமத்தில் இருந்து தூரத்தில் உள்ள ஆசிரியர்களினால் அதனைச் செய்ய முடியவில்லை. தொலைபேசியில் இயலுமான அளவு பேசி பிள்ளைகளுக்கு வினாப் பத்திரங்களை அனுப்புவதற்கு அவர்கள் முயற்சித்தனர். ஆனால் அது பலனளிக்கவில்லை. அரசாங்கத்திடம் இருந்தும் கல்வி அமைச்சிடம் இருந்தும் விசேட இடையீடுகள் இருக்கவில்லை. அனைவருக்கும் பொதுவான விடயங்களைத் தவிர வேறு விசேட இடையீடுகள் இருக்கவில்லை. மேலும் வயதில் மூத்த மாணவர்கள் சிலர் இக்காலப்பகுதியில் திருமணம் முடித்து வாழ்வின் புதிய அத்தியாயத்தினை ஆரம்பித்துள்ளனர்.

**தவறான தகவல்கள்**

அவ்வாறான விடயங்கள் நடக்கவில்லை. ஏனெனில் இந்தச் சூழ்நிலையினை தீவிரமாக எடுத்துக்கொள்ளும் மக்களல்ல எமது மக்கள். அவர்கள் இன்றைய நாளைப் பற்றி மட்டும் கவனம் எடுக்கும் மக்கள். இப்போதுதான் அவர்கள் எதிர்காலம் பற்றி ஓரளவுக்குச் சிந்திக்கின்றனர்.

**மனநல சுகாதாரம்**

இது நோயினை விடப் பெரிய பிரச்சினையாகும். இது ஒரு சமூகப் பிரச்சினையாகும். ஆனால் எமது சமூகத்தில் இது மிக வித்தியாசமானதாகும். இதற்கான காரணம் எளிமையான வாழ்க்கை. இதன் தாக்கம் நீண்ட காலம் நிலைக்கக்கூடியதாகும். இதனைச் செய்ய முடியும். ஆனால் இது பற்றிய புரிதல் உள்ள தலைமுறையினைப் பெற்றோர்கள் தகவமைக்க வேண்டும். இதனைச் செய்ய முடியும். ஆனால் கல்வி பற்றிய புரிதல் கிராமப் பிரதேசங்களில் இல்லாதிருக்கின்றது. புதிய கருவிகள் பற்றிய புரிதல் இல்லாதிருக்கின்றது. இது கிராமிய வறிய மக்களின் மீது பாரதூரமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அதை விட அதிக தாக்கத்தினை ஆதிவாசிகள் மீது ஏற்படுத்துகின்றது. உலகில் ஏற்படும் மாற்றங்களுடன் அடுத்த தலைமுறை இயற்கையில் இருந்தும் மனிதப் பண்பில் இருந்தும் அதிகமாக விலகிச் செல்கின்றது.

**சிவில் நிர்வாகத்தில் பாதுகாப்புப் படையினைப் பயன்படுத்தல்**

இது எமது பிரதேசத்தில் ஒரு பிரச்சினையாக இருந்திருக்காது. எவ்வாறாயினும் தம்பானயில் இவ்வாறான மேலதிக இடையீடுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. மறுபுறத்தில் அரசாங்கம் அல்லது தனியார் துறை எமது சமுதாயம் தொடர்பாக விசேட அறிவுடையவையாக இருக்கின்றன. அனைவரும் எமக்கு நன்கு உதவுகின்றனர்.

**சமுதாயத் தகவமைத்தல்**

அதிகளவான வீட்டுத் தோட்டம் செய்வதிலும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதிலும் எத்தனிப்புக்கள் காணப்பட்டன.

**சில மேலதிகக் கருத்துக்கள்**

நகரப் பிரதேசத்தில் குடும்ப உறுப்பினர்களுக்காகவும் பெற்றோர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் ஒதுக்குவதற்கு நேரம் போதாததாக இருக்கின்றது. எமக்கு அவ்வாறான நிலைமை இல்லை. நாம் எதைச் செய்தாலும் மாலையில் வீடு திரும்பும் ஓரிடத்திலேயே சமுதாயத்தில் உள்ள அனைவரும் இருக்கின்றோம். எளிமையான வாழ்வின் முக்கியத்துவம் பற்றிய புரிதல் அதிகரித்திருக்கின்றது. இல்லாவிடின், ஒரு பிரச்சினை என வருகையில் அயலிலுள்ள கடைக்குச் சென்று கலந்துரையாடுகின்ற மக்கள் இருக்கின்றனர். ஏனெனில் அந்த நிலைமை போய்விட்டது. அந்த விடயங்கள் வீட்டில் செய்யப்படவேண்டும். சில பிரதேசங்களில் நல்ல விடயங்கள் இருக்கின்றன. எமது சமூகத்தில் நாம் முகங்கொடுக்கும் பொருளாதாரப் பாங்குகளின் சிக்கற்தன்மைகளுடன் ஏனைய பக்கவிளைவுகளும் உருவாகியுள்ளன. நாம் இன்று இருக்கும் இடத்தில் உலகம் இருந்தால் கொவிட் தாக்கியதால் ஏற்பட்ட பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

**நேர்காணல் 14**

**புத்தளம் சிராம்பியடியில் வசிக்கும் இலங்கை ஆபிரிக்க சமுதாயத்தினைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் ஒருவருடனான நேர்காணல். இவர் தொழில்முறை நாட்டார் இசைக் கலைஞராவார்.**




*நாட்டார் இசையினை இசைக்கும் இலங்கை ஆபிரிக்க சமுதாய உறுப்பினர்கள்.*

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

எமது சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகள் பரந்து வாழ்ந்து எதையாவது செய்வதால் கட்டமைக்கப்படுவதுடன் அதில் இருந்து உழைப்பதால் வாழ்வதாக இருக்கின்றது. உதாரணமாக, நாங்கள் பல்வேறு கலாசார நடவடிக்கைகளிலும் இசையரங்குகளிலும் எமது சொந்த கிபிர் மஞ்சா இசையுடன் கலந்துகொள்கின்றோம். இது எமக்கான மேலதிக வருமானத்தினைப் பெற்றுத் தருகின்றது. நாம் பெரிய அளவில் நிகழ்ச்சிகளை நடத்துபவர்களைப் போன்றவர்களல்ல. சேமிக்கக்கூடிய அளவிற்கான வருமான மூலம் எமக்கில்லை. சில வேளைகளில் எமக்கு அதிக நிகழ்சிகள் கிடைக்கின்றன சில வேளைகளில் எதுவும் கிடைப்பதில்லை. அது வித்தியாசமானது. பெருந்தொற்றினால் நாம் ஓர் இடத்தில் முடக்கப்பட்டுள்ளோம். சில கலைஞர்களுக்கு அரசாங்க இடையீட்டின் மூலம் ஓய்வூதியம் கிடைக்கின்றது. ஆனால் எமக்கு மிகக் குறைவாகவே கிடைக்கின்றது. இவ்வாறான ஒரு பின்புலத்தில் கொரொனாவினால் எமக்குப் பெரிய சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. இது யாரும் எதிர்பார்க்காத ஒரு சூழ்நிலையாகும்.

இப்போது சிலர் கடைகளில் வேலை செய்கின்றனர். சிலர் நாட்கூலிகளாக வேலை செய்கின்றனர். முழுமுடக்கத்தினால் அவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். சகல விதத்திலும் பொருளாதாரமும் வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளன. பல தடைகள் உள்ளன. எமது பிள்ளைகளும் இதில் சிக்கியுள்ளனர். பிள்கைளின் எதிர்காலக் கல்விக்காகப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எல்லாமே நின்றுவிட்டன. எனக்கும் மூன்று பிள்ளைகள் உள்ளனர். மூத்த பிள்ளை பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்துள்ளது. இரண்டாவது பிள்ளை உயர் தரத்தில் கற்கின்றது. மூன்றாவது பிள்ளை 6 ஆம் வகுப்பில் கற்கின்றது. ஒன்லைன் கல்வியில் பல தடைகள் உள்ளன. குறிப்பாக இதற்கான செலவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் இந்த நிலை காணப்படுகின்றது. சில பிரதேசங்களில் மொபைல் தரவுகளுக்கான செலவு அதிகரித்துள்ளது. சில பிரதேசங்களில் இணைய இணைப்பு பலவீனமாக உள்ளது. மொபைல் தொலைபேசி இல்லாமையும் ஏனைய உபகரணங்கள் இல்லாமையும் பிரச்சினையாக இருக்கின்றது. சிராம்பியடியில் இலங்கை – ஆபிரிக்க சமுதாயத்தினைச் சேர்ந்த 22 குடும்பங்கள் வசிக்கின்றன. ஏனைய நகரங்களில் 7 அல்லது 8 குடும்பங்கள் வசிக்கின்றன. சிலர் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைசெய்கின்றனர்.

**தொற்றுத்தடைகாப்புச் சட்டம் மற்றும் முழுமுடக்கத்தின் அமுல்படுத்தல்.**

விசேட பிரச்சினைகள் என எதுவும் இல்லை. வேலை செய்ய முடியாமை, வருமான இழப்பு மற்றும் ஏனைய பிரச்சினைகள் பிரதான பிரச்சினைகளாக இருக்கின்றன. அவர்கள் அரிசி போன்றவற்றினை வழங்கி உதவினர். சாதி அல்லது சமய பேதம் இல்லை. தேவாலய உறுப்பினர்கள் கோவில் உறுப்பினர்களுக்குக் கொடுத்தனர். கோவில் உறுப்பினர்கள் தேவாலய உறுப்பினர்களுக்குக் கொடுத்தனர். பெருந்தொற்றின் ஆரம்பக் கட்டத்தில் அனைவரும் உதவினர். இப்போது மிகவும் கஷ்டமாக உள்ளது. பயிர்ச்செய்கை குறைவடைந்துள்ளது. தச்சர்களின் வேலையும் குறைந்துள்ளது. கூலி வேலையும் குறைந்துள்ளது.

**அரசாங்க நிவாரணம்**

அரசாங்கத்தின் நிவாரணமும் எங்களுக்குக் கிடைத்தது. ஏனையோருக்கு வழங்கப்பட்ட அனைத்தும் அதேவிதமாக எமக்கும் வழங்கப்பட்டன.

இப்போது வரை இலங்கை ஆபிரிக்க சமுதாயத்தின் மத்தியில் பெருமளவுக்குத் தொற்றுப் பரவவில்லை. ஆனால் அண்மையில் தொற்று அதிகரித்துள்ளது. கடந்த வாரம் நீர்கொழும்பு கார்கில்சில் வேலை செய்யும் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டு அவர் இன்னும் நீர்கொழும்பில் தொற்றுத்தடைகாப்பில் இருக்கின்றார். கிராமத்திலும் தொற்றாளர்கள் இருந்தனர். ஆனால் அது சுற்றயல் பிரதேசங்களை விடக் குறைவானதாகும்.

அண்மையில் 15 வயதுச் சிறுமி ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டது. இதுவரையில் சமுதாயத்தில் இறப்புக்கள் எதுவும் நிகழவில்லை.

**சுகாதாரத் துறையிடம் இருந்தான உதவி**



*கண்டியில் தடுப்பூசியேற்றல் நிலையத்தில் சுகாதார அதிகாரிகளின் உதவி .*

வீட்டில் தொற்றுத்தடைகாப்பில் இருக்கையிலேயே குறிப்பாக சுகாதாரத் துறையின் உதவி அதிகரித்துக் காணப்பட்டது. மேலும் தடுப்பூசியேற்றல் மூலமாகச் சிறந்த முறையில் உதவி வழங்கப்பட்டது. 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. ஏனையவர்கள் இரண்டாவது தடுப்பூசியினைப் பெற்றிருக்கலாம். குறிப்பிட்ட பிரச்சினை என எதுவும் இல்லை. அவர்கள் உதவி விழிப்புணர்வினையும் பிரதான சுகாதாரத் தேவைகளையும் நன்கு கையாண்டனர்.

**கல்வி**

கல்வித் துறையில் ஏற்பட்ட தடங்கல் குறிப்பாகப் பிள்ளைகளில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எனது குடும்பத்தில் கூட எனது இரண்டாவது பிள்ளை இந்த வருடம் உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் கற்கின்றது. பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லாமையானது கல்வியில் ஏற்பட்ட தடங்கலுக்கான ஒரு காரணமாகும். ஒன்லைனில் வந்தவர்களும் நின்றுவிட்டனர். மேலும், அவசியமான பாடங்கள் பரிமாறப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. கடைசிப் பிள்ளை 6 ஆம் தரத்தில் கற்கின்றது. அவருக்குத் தேவை இருந்தாலும் கூட அவ்வாறான இரண்டு மொபைல் தொலைபேசிகளை ஒன்லைன் கல்விக்காக வழங்க முடியாது. சிலவேளைகளில் அவர்களின் பாட அட்டவணை ஒரே நேரத்தில் வருகின்றது. அவ்வாறு ஏற்படுகையில் ஒருவரால் வகுப்பில் இணைய முடியாது..

**மனநல சுகாதார நிலைமை**

இந்த விடயத்தில் ஏறக்குறைய அனைவருக்கும் பிரச்சினை இருக்கின்றது. ஆனால் இப்போது அவர்கள் அதனை முகாமைத்துவம் செய்து வருவதுடன் அனைவரும் இயலுமான அளவு கஷ்டப்பட்டு வேலை செய்கின்றனர். அதிகமான பிள்ளைகளுக்கு மன அழுத்தம் மற்றும் கோபம் வருதல் போன்ற பிரச்சினைகள் காணப்படுவதுடன் எனது பிள்ளைகளும் கூட அவற்றுக்கு முகங்கொடுக்கின்றனர். போதைப்பொருள் பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இளைஞர்களின் மத்தியில். ஆனால் உண்மையான சூழ்நிலை தொடர்பாகச் சிறப்பான புரிதல் இல்லாதிருக்கின்றது.

**வீட்டு வன்முறை**

இது ஒரு பெரிய பிரச்சினையாக எனக்குத் தெரியவில்லை. வழமையை விட எல்லோரும் வீட்டில் இருக்கின்றனர். அவர்கள் கூட்டாக எல்லாவற்றையும் செய்வதற்கு முயற்சிக்கின்றனர்.

**சாதகமான எத்தனிப்புக்கள்**

வீட்டுத் தோட்டத்தில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எல்லோருமே மிளகாய் மற்றும் ஏதாவது மரக்கறிகள் மற்றும் கீரை போன்றவற்றை வளர்க்கின்றனர். இதற்கான காரணம் அவர்கள் வீட்டில் இருப்பதுவும் போதிய இடம் இருக்கின்றமையும் ஆகும். இது பொருளாதாரப் பிரச்சினையினை இலகுபடுத்தவும் உணவுப் பாதுகாப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவுகின்றது.

**இராணுவமயமாக்கம் மற்றும் தொற்றுத்தடைகாப்புச் சட்டம்**

இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் பாதுகாப்புப் படையினர் முகக்கவசங்களையும தொற்றுநீக்கிகளையும் விநியோகித்தனர். ஒவ்வொருவரும் சூழ்நிலையினைப் புரிந்துகொண்டு தொற்றுத்தடைகாப்பு விதிகளைப் பின்பற்றுகின்றனர்.

**தவறான தகவல்கள்**

ஆரம்பத்தில், நோய் ஏற்பட்டபோது சமூக ஊடகத்தின் காரணமாகச் சில பிரச்சினைகள் காணப்பட்டன. இவ்வாறான விடயங்கள் இன்று நடக்கின்றன. ஆனால் தெரிந்தவர்களிடம் இருந்து நாம் கொவிட் பற்றிய விளக்கத்தினைப் பெற்றோம்.

**சுற்றாடல் பிரச்சினைகள்**



*மொனராகலயில் தோட்டத்தில் தங்குமிடங்கள்.*

சுற்றாடல் சேதம் போன்ற விடயங்களை நான் காணவில்லை. சிராம்பியடியில் அதிக தென்னந் தோட்டங்கள் இருக்கின்ற காரணத்தினால் காடழிப்புப் போன்றவை நடப்பதற்கான வழி இல்லை. ஆனால் சில பிரதேசங்களில் யானைகளின் பிரச்சினை இருக்கின்றது. இதனால் வறண்ட காலங்களில் பயிர்ச் சேதங்கள் அதிகரித்துள்ளன.

**மேலதிக கருத்துக்கள்**

ஓவ்வொருவருக்கும் அதிகமான பொருளாதார மற்றும் கல்விப் பிரச்சினைகள் உள்ளன. நாம் எமது இசைச் செயற்பாடுகளையும் மேலதிக வருமானத்தினையும் இழந்துள்ளோம். சமுதாயத்தினைப் பற்றி என விசேடமாக எதுவும் இல்லை. சில காலங்களில் எமது விபரங்களைத் தேடி சில அரசியல் கட்சிகள் வந்தன. இக்கஷ்ட காலத்தில் நாம் அனைவரும் கூட்டாக ஒத்துழைக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன். பெருந்தொற்றினையும் ஏனைய பிரச்சினைகளையும் வெற்றி கொள்வதற்கான ஒரே வழி அதுவாகவே இருக்கும்.

**நேர்காணல் 15**

**கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் பணியாற்றும் இரத்தினபுரி, பெல்மதுளையினைச் சேர்ந்த 30 வயதான ஆண் ஒருவருடனான நேர்காணல்.**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

நான் தனியார் வைத்தியசாலையில் நிர்வாகப் பிரிவில் பணியாற்றுகின்றேன். பெருந்தொற்று நிலைமையின் கீழ் வைத்தியத் துறையின் இன்றியமையாத பங்களிப்புடன் எனக்கேற்பட்ட அனுபவம் முற்றிலும் வித்தியாசமானது. பெருந்தொற்றுக்கு முன்னர் கூட நான் மிகவும் பரபரப்பான தொழில்முறை வாழ்க்கைக்கே பொதுவாகப் பழக்கப்பட்டிருந்தேன். பெருந்தொற்று ஏற்பட்டதும் சாதாரண வாழ்க்கைப் பாங்குகளில் அதிகமானவை மாறிவிட்டன. முழுமுடக்கம், ஊரடங்கு மற்றும் ஏனைய முறைகள் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன. இதனால் நிறைவேற்றுத் தரத்தில் பணியாற்றிய பலரும் தொலைவில் இருந்து வேலை செய்யும் முறையினைப் பின்பற்றினர். அவர்களுக்கு வீட்டில் செலவழிப்பதற்குப் போதிய நேரம் இருந்தது. தொற்றின் முதலாம் கட்டத்தின் போதே தமது குடும்ப உறுப்பினர்களுடன் நேரம் செலவிடக் கிடைத்தமை தொடர்பில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் சுகாதாரத் துறையில் பணியாற்றுபவர் என்ற ரீதியில் இந்தச் சூழ்நிலை எனக்கு முற்றிலும் வித்தியாசமானதாகும். பொதுவாக, பெருந்தொற்றுக்கு முன்னர் நான் வார இறுதி நாட்களில் வீட்டுக்குச் செல்வதை வழமையாகக் கொண்டிருந்தேன். ஆனால் பெருந்தொற்றுடன் விடயங்கள் சிக்கல்மிக்கவையாகவும் வேலைப்பளு நிறைந்தவையாகவும் மாறிவிட்டன. நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கே வந்துசேர்ந்தது. பெருந்தொற்று அதிகரிக்க அதிகரிக்க இந்தப் பொறுப்பும் விசாலமடைந்தது. அதிகமான நேரங்களில் நான் வைத்தியசாலையிலேயே தங்கியிருக்க நேரிட்டது. நாம் எப்போதும் மக்களுடன் பணியாற்ற நேரிட்டதால் எமக்கு அபாயநேர்வும் அதிகமாக இருந்தது. எனது மனைவி ஒரு சட்டத்தரணி. அவருக்கு வழக்குகளுக்காக நீதிமன்றம் செல்ல முடியாமையினால் அவரின் வருமானத்திலும் இழப்பு எற்பட்டது. அவர் அதிகமான நேரம் வீட்டிலேயே இருக்க நேரிட்டது. ஆனால் எனது வருமானம் இருந்த காரணத்தினால் எமக்குப் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால் வேலைப்பளு அதிகரித்ததால் நான் வீட்டில் இருந்து சேய்மையாக இருப்பது அதிகரித்தது. வழமையாக நான் 3 அல்லது 4 நாட்கள் விடுப்பு எடுப்பேன். ஆனால் அது கட்டுப்படுத்தப்பட்டது. அதிகமான நேரங்களில் எனது மனைவியுடனும் எனது குடும்பத்தினருடனுமான உறவு தொலைபேசி மூலம் தூரத்தில் இருந்து பேணப்படும் நிலைக்கு ஆளானது. ஏனைய சமூக ஊடாட்டங்கள் சைபர்தளம் வழியே அமைந்திருந்தன. வைத்தியசாலையில் எனது பணிகள் தொடர்பாகப் பார்க்கையில், புதிய பிரச்சினைகளுக்கு நான் எப்போதும் இயங்குதிறன் மிக்க தீர்வுகளைக் காணவேண்டி இருந்தது.

**சட்டமும் ஒழுங்கும்**

இது தொடர்பாக நான் வேறு அவதானிப்பினைக் கொண்டுள்ளேன். 2020 மார்ச் மாதத்தில் இருந்து நான் முழுமுடக்கத்தின் போது கூட வைத்தியசாலைக்கு வேலைக்கு அறிக்கையிட வேண்டி நேரிட்டது. 2020 மார்ச் முதலாவது முழுமுடக்கத்தின் போது நடவடிக்கைகள் பற்றி மக்கள் எதுவும் அறியாதிருந்தனர். நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்தனர். மக்களும் அவர்களைச் சுற்றி நடப்பவை தொடர்பில் மிகவும் அச்சங்கொண்டிருந்தனர். குறிப்பாக இலங்கை நிலைமை தொடர்பாகவும் உலகம் முழுவதும் உள்ள நிலைமை தொடர்பாகவும் அவர்கள் அச்சம் கொண்டிருந்தனர். அனைத்தும் மூட்டப்பட்டிருந்தன. அத்தியாவசியப் பொருட்கள் படைகளுக்கும் சுகாதாரத் துறைக்கும் மருந்தகங்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டன. எனது சொந்த ஊரான இரத்தினபுரிக்குச் செல்கையிலும் வேலைக்காகக் கொழும்புக்குச் செல்கையிலும் நான் இதனைப் பார்த்துள்ளேன். வீதியில் அதிக வாகனங்கள் இருக்கவில்லை. முப்படைகளின் வாகனங்களும் பொலிசாரின் வாகனங்களும் சுகாதாரத் துறையினரின் வாகனங்களும் மட்டுமே காணப்பட்டன. மேலும் பொலிசார் தொடர்ச்சியாக மக்களின் நடவடிக்கைகளை ரோந்து சென்று கண்காணித்து வந்தனர். ஆனால் இரண்டாவது முழுமுடக்கம் வந்தபோது விடயங்கள் மாறத் தொடங்கின. உணவு விநியோகம் என்று வந்தபோது, வைத்தியசாலையினுள் கூட முதலாவது முழுமுடக்கத்தின் போது நாம் பல தடைகளுக்கு முகங்கொடுத்தோம். ஏனெனில் நாம் உணவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தவில்லை. பிரதானமாக விநியோகத்தர்களால் அவர்களின் விநியோகச் சங்கிலிகளைத் தொடர்ந்து பேண முடியவில்லை. இரண்டாவது முழுமுடக்கத்தின் போது அத்தியாவசியமானவை என்பதன் அர்த்தம் மீள்அர்த்தப்படுத்தப்பட்டு பரந்ததாக ஆக்கப்பட்டது. அனைத்தும் அத்தியாவசியமானவையாக மாறின. ஒவ்வொரு கம்பனியும் ஏதோ அத்தியாவசியமான பொருளை வழங்குவதாகக் குறிப்பிட்டது. திருமண மண்டபம் மற்றும் அழகுச் சிகிச்சை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய பல விடயங்கள் அத்தியாவசியமானவையாக மாறின. மேலும் வாகன விற்பனைகளும் தொடர்பாடல் தொடர்பான விடயங்களும் அத்தியாவசியமானவையாக மாறின. நடப்பு நிலவரம் தொடர்பாகப் பார்க்கையில் சொற்பமான விடயங்களைத் தவிர வேறு பல விடயங்கள் அத்தியாவசியமானவையாக மாறியுள்ளன. இந்நாட்களில் வீதியில் அதிகமான மக்களும் வாகனங்களும் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. நேற்று, எனது வேலை முடிவடைந்த பின்னர் நான் எனது வதிவிடத்திற்குச் செல்வதற்காக பொரளையில் இருந்து நாரஹேன்பிடிக்கு நடந்து சென்றுகொண்டிருந்தேன். அப்போது என்னைக் கடந்து சென்ற வாகனங்களில் 60% ஆனவற்றில் அத்தியாவசிய சேவைகள் என்ற ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தன. இவற்றினை நிறுத்தி விசாரித்தாலும் அதில் உள்ளவர்கள் நம்பக்கூடிய ஏதாவது காரணங்களைக் கூறுவார்கள் என்பதைப் பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் அறிவார்கள். பொலிசாரும் இது தொடர்பாகச் சலிப்படைந்துள்ளதால் அவர்கள் எதையும் பரிசோதிப்பதில்லை. இரண்டாவது முழு முடக்கத்தின் போது சுகாதாரத் துறை ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்த வாகனங்களைக் கூட அவர்கள் பரிசோதித்தனர். ஆனால் இப்போது யாரும் பரிசோதிப்பதில்லை. SI அல்லது OIC வேறு யாராவது உயர் அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருந்தால்தான் அவர்கள் பரிசோதிப்பார்கள். இல்லாவிட்டால் தற்போதைய முழுமுடக்கத்தின் கீழ் எதுவும் கட்டுப்படுத்தப்படவில்லை. ஏனெனில் பொலிசாரும் சலிப்படைந்துவிட்டனர்.

மக்களில் சிலர் அவர்களின் வாழ்வாதாரங்களின் மீதும் வருமானங்களின் மீதும் ஏற்பட்ட தாக்கங்களாலேயே இப்போது முழுமுடக்கத்தின் போது கூட வெளியில் செல்கின்றனர். அவர்கள் கைதுசெய்யப்படுவது பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. எப்படியோ எதையாவது சம்பாதிக்கவே அவர்கள் முயற்சிக்கின்றனர்.



*யாழ்ப்பாணம் நெருந்தீவு*

**வாழ்வாதாரம்**

எனது கிராமத்தில் கேள்வியின் காரணமாகக் கடைகளுக்குப் போதிய வருமானம் கிடைக்கின்றது. யாருக்காவது ஏதாவது தேவையென்றால் அவர்கள் கடைக்குத் தொலைபேசி எடுத்துச் சொல்லி பின்னர் பொருட்களைச் சேகரித்துக்கொள்ள முடியும். அல்லது அப்பொருட்களை முச்சக்கரவண்டியில் அல்லது மோட்டார்சைக்கிளில் விநியோகிப்பதற்கான பொறிமுறையினையும் கடைக்காரர்கள் பயன்படுத்துகின்றனர். அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான பற்றாக்குறையும் காணப்படுகின்றது. மேலும், அதிகமான மக்கள் வீட்டுத் தோட்டம் செய்கின்றனர். அவற்றின் விளைச்சல்கள் சந்தைக்கு வருவது அதிகரித்துள்ளன. மேலும், கடைகளும் சிறு கடைகளும் அதிகரித்துள்ளன. அரசாங்க ஊழியர்கள் வாரத்தில் இரு நாட்கள் வேலைக்கு அறிக்கையிட வேண்டியுள்ளது. அவர்களுக்குச் சம்பளமும் கிடைக்கின்றது. சில தனியார் துறை வேலை நிலையங்களும் அவ்வாறே இருக்கின்றன. ஆனால் நடமாடும் உணவு விற்பனையாளர்கள் போன்ற அன்றாடம் பிழைப்பு நடத்துபவர்கள் அவர்களின் வாழ்வாதாரங்களை நிலைக்கச் செய்வதில் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இப்போது ஒன்றரை வருடமாகிவிட்டது. அவர்களும் இச்சிரமங்களின் மத்தியில் எதையாவது செய்வதற்குத் தகவமைத்துள்ளனர் என நான் ஊகிக்கின்றேன். மேசன்கள் மற்றும் தச்சன்கள் போன்றவர்களுக்கு முன்பிருந்ததை விட இப்போது வேலை இருக்கின்றது. இவ்வாறான தொழிலாளர்களினதும் சிறு வியாபாரிகளதும் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும் இந்தச் சூழ்நிலைக்கு அவர்கள் வெவ்வேறு வழிகளில் தகவமைத்துள்ளனர்.

**சுகாதாரத் துறை உதவி**

கொவிட் தொற்றுக்காளான 65 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தனியார் வைத்தியசாலைகள் அனுமதிப்பதில்லை.



*யாழ்ப்பாணத்தில் பிள்ளைகள் பாடசாலைக்குச் சைக்கிளில் செல்கின்றனர்*

இதற்கான காரணம் நிலைமை மோசமடைவதற்கான அதியுயர் சாத்தியம் இருப்பதால் ஆகும்.

தனியார் வைத்தியசாலைகள் இந்த ஆபத்திற்கு முகங்கொடுக்க விரும்புவதில்லை. இதனால் 65 வயதிற்குக் குறைவான கொவிட் நோயாளிகளையே அவை அனுமதிக்கின்றன. எனக்குத் தெரிந்த சிலர் அவர்களின் 65 வயதுக்குக் கூடிய உறவினர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டனர். இவர்களில் அதிகமானவர்கள் எனது நண்பர்கள். அரசாங்க வைத்தியசாலைகளில் இடம் இல்லை என்றே இவர்கள் என்னிடம் கூறினர். சிலரை எமது வைத்தியசாலையில் அனுமதிக்க நான் உதவினேன். அவர்களில் ஒருவருக்கு 76 வயது மற்றவருக்கு 72 வயது. 86 வயதுடைய ஒருவரை அனுமதிக்கும் முயற்சி பலனளிக்கவில்லை. பெருந்தொற்றுப் பரவ ஆரம்பித்ததும் வயதில் முதியவர்களுக்குச் சுகாதாரத் துறை முன்னுரிமையளிக்கவில்லை. தடுப்பூசியேற்றினால் அபாயநேர்வு இல்லாமல் போய்விடும் என்றும் மக்கள் நினைக்கின்றனர். பெருந்தொற்றினைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என நினைக்கின்றனர். தொற்றுக்குள்ளானவர்களில் அதிகமானவர்கள் இப்போது வீடுகளில் தொற்றுத்தடைகாப்புச் செயன்முறைக்கு உட்படவேண்டியுள்ளது. பெருந்தொற்றின் ஆரம்பக் கட்டத்தில் யாருக்காவது தொற்று ஏற்பட்டால் தொடர்பாளர்களைக் கண்டுபிடிக்கும் செயன்முறை மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு நெருங்கிய

தொடர்புகொண்டிருந்தவர்கள் அடையாளம் காணப்பட்டதும் அவர்களும் தொற்றுத்தடைகாப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இதனை மக்கள் மிகத் தீவிரமாக எடுத்துக்கொண்டனர். ஆனால் இன்று நிலைமை இவ்வாறல்ல. தொற்று ஏற்பட்டவர்கள் கூட வீதியில் சுற்றித் திரிகின்றனர். மொத்தத்தில் சுகாதார அதிகாரிகள் நிலைமையினைக் கட்டுப்படுத்தப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். வைரசால் தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்தினைக் கூடப் பொருட்படுத்தாது அவர்கள் செயற்பட்டுள்ளனர். தனியார் துறையில் நோயாளிகள் சேவைக்காகக் கட்டணம் செலுத்தவேண்டும். இரண்டு சுகாதாரத் துறைகளுமே சூழ்நிலைக்கு ஈடுகொடுப்பதற்கு நிறையத் தியாகங்களைச் செய்துள்ளன.

**தடுப்பூசியேற்றல்**

பெருந்தொற்றின் அபாயநேர்வினை எதிர்கொள்வதற்கான ஒரே வழியாக அரசாங்கம் தடுப்பூசியேற்றலை முன்னுரிமைப்படுத்தியுள்ளது. ஆனால் இப்போது சூழ்நிலையினைக் கட்டுப்படுத்த முழுமுடக்கம் என்பது செயற்திறனற்ற ஒன்றாகியுள்ளது. முன்பு தடுப்பூசியேற்றலில் பல தடைகள் காணப்பட்டன. ஆனால் இப்போது அது சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கல்வியும் மனநல சுகாதாரமும்**

பெருந்தொற்றினால் மக்களின் நாளாந்த வாழ்க்கைப் பாங்கு பெரிதும் மாறியுள்ளது. பாடசாலை செல்லும் வயதுப் பிள்ளைகளை நாம் எடுத்துக்கொண்டால் அவர்களால் பாடசாலைக்குச் செல்ல முடியாதுள்ளது. அதிகமான நேரங்களில் அவர்கள் வீடுகளிலேயே இருக்கின்றனர். ஒன்லைனில் கற்கின்றனர். ஒருபுறம் அவர்களுக்குப் பெற்றோரினதும் குடும்ப உறுப்பினர்களினதும் அதிக அன்பு கிடைக்கின்றது. ஆனால் மறுபுறத்தில் பாடசாலை செல்லும் வயதுப் பிள்ளைகள் சக மாணவர்களுடன் இணைந்து செயற்படவேண்டும். அந்த அம்சம் முற்றாக இல்லாமல் போயுள்ளது. விளையாட்டு, அழகியல் போன்ற கூட்டுச் செயற்பாடுகளை நடத்தும் சாத்தியம் இல்லாதிருக்கின்றது. ஒன்லைன் கற்பிப்பு முறை முற்றிலும் வித்தியாசமானது. இது மாணவர்களின் மீது அழுத்தத்தினை அதிகரித்துள்ளது. கடந்த காலத்தில் பாடவிதானமும் பாடத்திட்டங்களுமே அழுத்தத்தினை அதிகரிப்பதற்கான காரணங்களாக இருந்தன. இப்போது கற்பிக்கும் முறையே மேலதிக அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக குறைந்த வருமானம் பெறும் பெரும்பான்மையான குடும்பங்களால் உபகரணங்களையும் தொடர்பாடல் இணைப்புக்களையும் அணுக முடியாதுள்ளது. தரவுக் கட்டணங்கள் மிக உயர்வாக உள்ளன. கல்வியின் இயங்கியல்கள் சமூகப் படிநிலையாக்கங்களைக் கட்டமைக்கின்றன.

மெய்நிகர் கல்வி என்று வருகையில் வகுப்பறைக் கல்வியுடன் ஒப்பிடுகையில் மாணவர்கள் மிகவும் பின்தங்குகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. வகுப்பறையில் கற்பிக்கின்ற போது இடையீடு மேற்கொண்டு மாணவர்களின் ஈடுபாட்டைப் பெறுவதற்கு ஆசிரியர்கள் வித்தியாசமான முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒன்லைன் தளங்கள் இதனைக் கட்டுப்படுத்துகின்றன. கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தின் காரணமாக விடயங்களைச் சுதந்திரமாகச் செய்து விடயங்களைக் கற்பதற்கான அவகாசம் சுருங்கியுள்ளது. கல்விசார் வாழ்வு என்பது பல அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயமும் மாணவர்கள் கற்பதற்கும் விடயங்களைப் புரிந்துகொள்வதற்கும் உதவுகின்றது. ஆனால் இப்போது இவர்கள் ஒன்லைன் பாடம் எனும் அத்தியாயத்தினை மட்டுமே கொண்டுள்ளனர்.

**நேர்காணல் 16**

**வட மாகாணத்தில் பெண்கள் அபிவிருத்தி அதிகாரியாகப் பணியாற்றும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமுதாயத்தினைச் சேர்ந்த 37 வயதான பெண் ஒருவருடனான நேர்காணல்**

**பெருந்தொற்றுப் பற்றிய உங்களின் அனுபவம் என்ன மற்றும் அது உங்களின் வாழ்க்கைப் பாங்குகளை எவ்வாறு மாற்றியுள்ளது?**

குடும்ப மட்டத்திலும் தனிப்பட்ட மட்டத்திலும் தொழில்முறை மட்டத்திலும் எமது முன்னைய வாழ்க்கைப் பாங்கினைப் பெருந்தொற்று பெருமளவு மாற்றிவிட்டது. எனது மாமியார் கடந்த ஒன்றரை வருடங்களாக என்னுடன் வசித்து வந்தார். அவருக்கு 70 வயதிருக்கும். ஆனால் அவர் கடந்த மாதம் கொவிட் தொற்றால் இறந்துவிட்டார். அவருக்குத் தொற்று ஏற்பட்ட பின்னர் நாங்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டி ஏற்பட்டது. நாங்கள் அவரை யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சித்தோம். அங்கே நோயாளிகள் நிறைந்திருந்த காரணத்தினால் அவரை அனுமதிப்பது சாத்தியமற்றதாக இருந்தது. பின்பு நாங்கள் அவரைத் தனியார்

வைத்தியசாலையில் அனுமதித்தோம். இரண்டு நாட்களின் பின்னர் அவர் இறந்துவிட்டார். பொதுவாகத் தமிழ் இந்துக் கலாசாரத்தில் இறுதிக் கிரியைகளின் போது நாங்கள் பல சடங்குகளை நிறைவேற்றுவோம். அவர் கொவிடினால் இறந்ததால் எம்மால் அவை எவற்றினையும் நிறைவேற்ற முடியவில்லை. எமது உறவினர்களில் அதிகமானவர்களினால் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியவில்லை. எனது மாமியின் மறைவு எம்மை உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வறிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். நாட்கூலி வேலைகள் செய்த அதிகமான மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். சிலர் நூறு ரூபாய் காசினை இரவல் பெறுவதற்கே கஷ்டப்படுகின்றனர். சில குடும்பங்கள் அவற்றின் வறுமை காரணமாக ஒருவேளை உணவை மட்டுமே உண்கின்றன. அரசாங்கம் சில நிவாரணத் திட்டங்களை அமுல்படுத்தியது. ஆனால் நாட்டின் தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு அது போதாததாக உள்ளது.

**வாழ்வாதாரம்**



*மட்டக்களப்பு உன்னிச்சையில் மீன்பிடிப் படகு*

முறைசார் துறையில் இருப்பவர்களுக்கு மாதாந்தச் சம்பளம் கிடைப்பதால் அவர்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றனர். கடற்றொழில் மற்றும் விவசாயம் போன்ற முறைசாராத் துறைகளில் உள்ளவர்கள் முழுமுடக்கத்தின் காரணமாக அவர்களின் உற்பத்திகளை விற்பதற்குக் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் செய்துள்ள முதலீட்டுடன் நோக்குகையில் இது அவர்களுக்குப் பாரிய நட்டமாகும்.

யுத்தத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகள் சுற்றுலாத் துறையில் வளர்ச்சியடைந்து வந்தன. இவை இப்போது பூச்சிய நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளன. பிரதானமாக மூன்று வகையான சுற்றுலாப் பயணிகள் காணப்பட்டனர்: தெற்கில் இருந்து வந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள், புலம்பெயர் சமூகத்தினர், வெளிநாட்டவர்கள். இந்த அடிப்படை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரி முதல் ஏப்ரில் வரை உள்நாட்டுச் சுற்றுலாத் துறையில் அதிகரிப்புக் காணப்பட்டது. ஆனால் ஏப்ரில் மாத முடிவில் தொற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக இது முழுவதுமாக நின்றுவிட்டது. இந்தச் சிறிய அளவிலான வியாபாரங்களில் அதிகமானவை சுற்றுலாத் துறை மூலம் அதிக வருமானத்தினைப் பெற்றன. ஆனால் இப்போது அந்த வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

**சட்டமும் ஒழுங்கும்**

இராணுவத்தினரின் அதீத ஈடுபாடு யாழ்ப்பாண மக்களின் மத்தியில் திருப்தியினை ஏற்படுத்தவில்லை. சுகாதாரம் தொடர்பான பணிகளிலும் ஏனைய நிர்வாகப் பணிகளிலும் இராணுவம் இருக்கின்றது. தடுப்பூசியேற்றும் செயன்முறையில் இராணுவம் சம்பந்தப்படுவதால் சில மக்கள் தடுப்பூசியேற்ற விரும்பவில்லை என வைத்தியர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் இருந்த முதலாவது முழுமுடக்கத்தினைத் தவிர, ஏனைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மக்கள் பயணக் கட்டுப்பாடுகளையும் முழுமுடக்கத்தினையும் உரிய முறையில் பின்பற்றவில்லை. அதிகமான சந்தர்ப்பங்களில் மக்கள் வேலைக்காகப் பயணித்தாலும் சமூக இடைவெளியினைப் பேணவில்லை. சிலர் முகக்கவசம் அணிவதிலும் தொற்றுநீக்கி பயன்படுத்துவதிலும் அலட்சியமாக இருந்தனர். நான் இப்போது தொற்றுத்தடைகாப்பில் இருக்கின்றேன். ஆனால் நான் விரும்பினால் நகரத்திற்கும் அல்லது வேறு இடங்களுக்கும் செல்ல முடியும். என்னைப் பின்தொடர்வதற்கு யாரும் இல்லை. நிலைமையின் ஆபத்துப் பற்றியும் எனது பொறுப்புப் பற்றியும் நான் அறிவேன். அதனால் நான் அவ்வாறு செல்லமாட்டேன். வீட்டு வன்முறையும் பெண்களுக்கெதிரான வன்முறையும் அதகரித்துள்ளன. ஒன்லைன் அடிப்படையிலான பகிடிவதையும் தொல்லைகளும் அதிகரித்துள்ளன.

**கல்வி**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் ஒன்லைன் கல்விக்கான அடிப்படைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றன. பிரதேச செயலக அலுவலகத்திற்கு அருகிலுள்ள அரியாலைப் பிரதேச மக்கள் உபகரணங்களுக்கான மற்றும் தரவுக்

கட்டணங்களுக்கான டியூசன் கட்டணங்களுக்கான உதவியினை அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெற்றுள்ளன. இங்குள்ள மாணவர்கள் பிரச்சினை எதுவுமின்றி ஒன்லைன் கல்வியினைத் தொடரக்கூடியதாக உள்ளது. அண்மையில் மீள்குடியேற்றம் நடந்த மற்றொரு பிரதேசத்தில் பாடக்குறிப்புக்களை அச்சிட்டு மாணவர்கள் மத்தியில் விநியோகிப்பதற்கு நிறுவனம் ஒன்று ஆசிரியர்களுக்கு உதவியுள்ளது. காரைநகரில் பாடசாலை அதிபர்களில் ஒருவர் குறிப்பிடுகையில் ஆசிரியர்களுக்கு ஒன்லைன் வகுப்புக்களுக்கான வசதியும் ஆர்வமும் உள்ளதாகவும் ஆனால் மாணவர்களிடமும் குடும்பங்களிடமும் ஸ்மார்ட்போன் போன்ற அதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாகவும் குறிப்பிட்டார். தரம் 4 மற்றும் 5 ஆம் வகுப்புப் பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதால் அவர்களுக்கு உத்தியோகப்பற்றற்ற வகையில் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

**அரசாங்க உதவி**

தொற்றுத்தடைகாப்பின் கீழ் இருந்த சில குடும்பங்கள் தங்களுக்கு அத்தியாவசிய உதவி கிடைக்கவில்லை என முறைப்பாடு செய்தன. உணவுப் பொதிகளில் சிலவும் பொருட்களும் தரம் குறைந்தவையாக இருந்ததாகவும் அவற்றின் அளவு ஒரு வாரத்திற்குக் கூடப் பேதாததாக இருந்ததாகவும் குறிப்பிட்டன.

5000 ரூபா முன்னெடுப்பு மிகவும் தேவைப்பட்ட நிவாரண முன்னெடுப்புக்களில் ஒன்றாகும். நிலவுகின்ற இந்தப் பொருளாதாரச் சூழ்நிலைகளின் கீழ் இந்தத் தொகை அத்தியாவசியமான செலவுகளைச் சமாளிப்பதற்குப் போதுமானதா என்பது இன்னும் பிரச்சினைக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது.

அதிகமான பிரதேசங்களில் அவர்கள் இதைப் பணமாகவே வழங்குகின்றனர். அதிகமான சந்தர்ப்பங்களில் 5000 ரூபா நோட்டாகவே வழங்குகின்றனர். முழுஅடைப்பின் போது இந்த 5000 ரூபா நோட்டினைத் தங்களின் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக இலகுவாக மாற்றிக்கொள்வது என்பது சில கிராமிய மக்களுக்குப் பிரச்சினைக்குரிய ஒன்றாக இருந்தது.

5000 ரூபா கொடுப்பனவினை அதிகாரிகள் விநியோகிக்க ஆரம்பித்தபோது, யுத்த காலத்தில் மானியங்களை விநியோகிப்பதற்காக இராணுவத்தினால் ஆரம்பிக்கப்பட்ட குடும்ப அட்டை முறைமையினைப் பயன்படுத்துவது பற்றிப் பரிசீலித்தனர். இந்த அட்டை குடும்ப உறுப்பினர்கள் பற்றிய மற்றும் கிராம சேவை அதிகாரிகள் பற்றிய சகல விபரங்களையும் கொண்டுள்ளதுடன் குறிப்பிட்ட சில கிராம சேவைப் பிரிவுகளில் உள்ள மக்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான ஒரு வழியாகவும் பயன்படுத்தப்பட்டது. இக்காரணத்தினால் இன்னும் நிரந்தரமான வதிவிட முகவரியினைக் கொண்டிராத மக்களுக்கு இந்த உதவி கிடைக்கவில்லை. அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குபவர்களாக இருந்தபோதிலும் இந்த உதவி அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

செயன்முறையினுள், பல பிரச்சினைகள் காணப்பட்டன. குறிப்பாக அரசியல் செல்வாக்கின் காரணமாகத் தகைமையுடைய மக்களும் மிகவும் தேவையுடைய மக்களும் இதில் இருந்து விலக்கிவைக்கப்பட்டனர். இது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சமூக இடைவெளியினைப் பேணுவதற்கு வசதியாகப் பயனாளர்களைக் கிராம சேவை அதிகாரியின் அலுவலகத்திற்கு அழைத்து அல்லது வேறு சமுதாய இடங்களுக்கு அழைத்து இது விநியோகிக்கப்பட்டது.



*கொவிட் பரவல் காரணமாக யாழ்ப்பாண நகரத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் மூடப்பட்டுள்ள கடை*

**சகாதாரத் துறை உதவி**

அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர். பல தடவைகள் நான் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றிருக்கின்றேன். அவர்கள் மக்களுக்கு நன்கு உதவுகின்றனர். அவர்களின் முகாமைத்துவம் பெரிதும் மெச்சத்தக்கதாகும். இலவச சுகாதார முறைமையின் முக்கியத்துவத்தினை நாம் அனைவரும் உணர்ந்த ஒரு சூழ்நிலையே இது. நாம் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்றால் அங்கே செலவு மிக உயர்வானதாக இருக்கும். பெரும்பான்மையான மக்களுக்கு அதற்கு ஈடுகொடுப்பதற்கான பொருளாதாரப்

பின்புலம் இல்லாதிருக்கின்றது. தனியார் வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் அரசாங்க வைத்தியசாலைகள் மிகவும் வினைத்திறன் மிக்க சேவையினை வழங்குகின்றன. அவற்றில் மேம்பட்ட வசதிகளும் சிறந்த நிபுணர்களும் உள்ளனர். நான் இது தொடர்பில் மகிழ்ச்சியடைவதுடன் இக்காலப்பகுதியில் அவர்களின் சேவையினை மெச்சுகின்றேன்.

**தடுப்பூசியேற்றல்**

இதற்கான ஒரு காரணம் தடுப்பூசிகளுக்கான தட்டுப்பாடாகும். மற்றொரு காரணம் மக்களில் பலரிடம் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகச் சிறந்த மனப்பாங்கு இல்லாமையாகும். 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து வயதுக் குழுவினருக்கும் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

**தவறான தகவல்கள்**

பிரதேசங்களில் கொவிட் விழிப்புணர்வு பெறுவது தொடர்பாகவும் ஏனைய சில குறிப்பிட்ட முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் சிறந்த ஆர்வம் காணப்பட்டது. சமூக ஊடகங்களில் நிலவிய சில வதந்திகள் மக்கள் மத்தியில் தவறான தகவல்களைப் பரப்பின. ஓர் உதாரணமாக, தடுப்பூசியேற்றிய பின்னர் நடந்த இறப்புத் தொடர்பானது. இது மக்கள் மத்தியில் பெரும் அவநம்பிக்கையினை உருவாக்கியது.

**மனநல சுகாதாரம்**

இந்தக் குறிப்பிட்ட விடயம் காரணமாக இது நாளுக்கு நாள் பரவலாகி வருகின்ற விடயமாகி வருகின்றது. யாருமே இதனை உரிய முறையில் அடையாளம் காணவில்லை. இவற்றினை அடையாளம் கண்டு உதவவுவதற்குச் சிறந்த பொறிமுறை இல்லை. யுத்தத்திற்குப் பின்னைய காலத்திலும் இதே நிலைமைதான் காணப்பட்டது. யாருமே இதில் கவனம் செலுத்தவில்லை.

இந்தக் காலப்பகுதியில் நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாகவும் முழுமுடக்கம் காரணமாகவும் அன்புக்குரிய குடும்ப உறுப்பினர்களின் இறப்புக் காரணமாகவும் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாகவும் வறுமை காரணமாகவும் ஒன்லைன் தளங்களின் மிகையான பாவனை காரணமாகவும் மக்கள் மன அழுத்தம் மற்றும் மனோ விரக்தி போன்ற பலவிதமான உளவியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். மறுபுறத்தில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அவ்வாறான பாதிப்பு கூடாத மக்களுக்கு மாத்திரமே நடக்கின்றது என நினைக்கின்றனர். இதில் இருந்து மீளுவதற்குக் கூடாத மக்களுக்கு மாத்திரமே உதவி தேவைப்படுகின்றது என நினைக்கின்றனர். எமது பாரம்பரியங்களில் சில மூட நம்பிக்கைகள் உள்ளன. உளவியல் பிரச்சினைகளை மக்கள் வெளிப்படையாகப் பேச விரும்புவதில்லை. எவ்வாறாயினும், இவ்வகையான தேவைகள் பற்றி அறிவிப்பதற்காக வடக்கு சுகாதாரத் திணைக்களம் துரித அழைப்புக்கான ஒரு தொலைபேசி இலக்கத்தினை அறிமுகப்படுத்தியது. மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் துரித அழைப்புச் சேவையினையும் ஆற்றுப்படுத்தல் சேவையினையும் தேவையுள்ள மக்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளன.

**வீட்டு வன்முறை**

இது தொடர்பாகப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆனால் முழுமுடக்கத்தின் காரணமாக இவ்வாறு வீட்டில் நடந்தாலும் யாரும் அதனைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதில்லை. பொதுவாக, ஒரு பிரச்சினை இருக்கையில், மக்கள் கோவில்களுக்கும் சமயத் தலங்களுக்கும் சென்று வழிபட்டு சுமைகளை அகற்றுவதை வழமையாகக் கொண்டுள்ளனர். இக்கால கட்டத்தில் அதனையும் செய்ய முடியவில்லை. மக்கள் மத்தியில் மனோரீதியான சமனிலையின்மைக்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும்.

**சாதகமான தகவமைத்தல்**

வழமையாக, யாழ்ப்பாணத்தில், வீட்டுத் தோட்டம் என்பது ஒரு பொதுவான

நடைமுறையாகும். இக்காலப்பகுதியில் இது முன்பை விட நன்கு அதிகரித்துள்ளது. குடும்ப உறுப்பினர்கள் அவர்களின் தொழில்கள் காரணமாக ஒன்றுசேர்ந்து கதைப்பதற்கும் விடயங்களைக் கலந்துரையாடுவதற்கும் நேரமற்றவர்களாக உள்ளனர். ஆனால் இந்த நடமாட்டக் கட்டுப்பாடுகள் அதற்கான சிறந்த வாய்ப்பினை வழங்கியுள்ளன.

மேலும், சுற்றாடல் பாதுகாப்பு, பெண்களின் வலுவூட்டல் போன்ற சில பிரச்சினைகள் பற்றிய ஒன்லைன் கலந்துரையாடல்களை இளைஞர்கள் முன்னெடுத்துள்ளனர். சில பிரச்சினைகள் பற்றிச் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவற்றுக்கான தீர்வுகளைச் சமுதாயத்தில் இருந்து காண்பதற்கு இது ஒரு சிறந்த செயன்முறையாகும்.

**ஏனைய கருத்துக்கள்**

இது ஒரு நெருக்கடியாகும். ஆனால் நாம் எவ்வாறாயினும் சாதகமாக இருந்து இதை எதிர்கொள்ளவேண்டும். இதை வெற்றிகொள்வதற்கான ஒரே வழி இதுவேயாகும்.




*வட மாகாணத்தில் அரியாலையில் முள்ளந்தண்டு வடக் காயமுடையவர்கள் சங்க உறுப்பினர்கள் அவர்களின் உறுப்பினர்களின் மீது கொவிட் ஏற்படுத்தியுள்ள தாக்கம் பற்றிய கூட்டத்தில் கலந்துகொள்கையில்.*